

அமரர் ''லக்ஷ்மி'' பற்றி...

சாகித்ய அகடமி பரிசு பெற்ற ''லக்ஷ்மி'' அவர்களைப் பாராட்டி பூங்கொடி பதிப்பகம் நடத்திய விழாவில் சிலம்புச்செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள்......

''சோதனைகள் நேரும் பொழுது எல்லாம் பெண் எப்படி சமாளிக்கவேண்டும் என்பதற்கு ''லக்ஷ்மி'' சிறந்த உதாரண மாகத் திகழ்கிறார்.

''லக்ஷ்மி'' எழுதிய கதைகள் எல்லாம் கலையானவை. பண்பாட்டுக்கு மாறு நாதவை.''

—தமிழரசு 16-4-1984

# நதி மூலம்

## 1

மாலை பணிக்கு தயாராகிக் கொண்டிருந்தாள் திலகா. அவளுக்குத் தரப்பட்டு இருந்த அந்த அறையில் வசதிகளுக்கு குறைவு இருக்கவில்லை. நினைவு தெரிந்த நாளில் இருந்து, காயத்திரி இல்லத்தில் அவள் பல குழந்தை களுடன் திலகா என்ற தனிப்பட்ட தகுதியை இழந்தவளாக வளர்ந்து ஆளாகியவள்தான்.

காயத்திரி இல்லத்தில் எல்லோருக்கும் உபயோகிக்க பொது கழிவறை,குளியலறை, பொது சாப்பாட்டறை, பொது உறங்குமிடம். எல்லாம் பொது என்ற நிலையில் தனித் தன்மை இன்றி வளர்ந்தவளுக்கு அந்த வேலை ஒரு புத்துணர்ச்சியையும் தெம்பையும் கொடுத்து விட்டிருந்தது. அந்த இடம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

காயத்திரி இல்லத்தின் தலைவி கருணா அம்மாளின் கருணை உள்ளந்தான் அதற்குக் காரணம்.

நூற்றுக்கணக்கான குழந்தைகளுடன் ஒரு குழந்தையாக திலகா யாருமற்றவளாக வளர்ந்த போதிலும் ஏனோ கருணா அம்மாளுக்கு அவள் மீது ஒரு அபிமானம், பிரியம்.

பட்டப்படிப்புக்குப் பின்னர், தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சிக்கு அவளை அனுப்பி வைத்து இல்லத்து நூல் நிலையத்தில் பகுதி வேலை தந்து, பெரிதும் உதவினாள்.

சாதாரணமாக இல்லத்து தலைவி அங்கே வளர்ந்து ஆளான பெண்களை, பதினெட்டு வயதுக்குப் பிறகு நீடித்து அங்கே வைத்திருப்பதில்லை. அரசு நிதி உதவியாலும் பொது மக்களின் நன்கொடையாலும் இயங்கிக் கொண்டிருந்த இல்லத்தில், அந்த பெண்களை அதற்குமேல் தங்க வைத்து வாழ்வளிக்க பொருளாதாரம் இடம் தரவில்லை. அதனால் வயது வந்த பெண்களுக்கு அவரவர் தகுதிக்கு தக்க இடத்தில் வேலை தேடிக் கொடுத்து உதவினாள். வேலைக்குச் செல்ல மனமில்லாத பெண்களுக்கு ஏற்ற இடமாகப் பார்த்து எளிய முறையில் அரசு உதவியுடன் கூட்டுத் திருமணங்கள் செய்து வைத்து வாழ்வு அளிக்க முயன்றாள்.

திலகாவுக்கு வேலை செய்து சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதை உணர்ந்த தலைவி, மிகவும் பாடுபட்டு பலத்த சிபாரிசின் பேரில்தான் அவளுக்கு அமராவதி விடுதியில் அந்த வேலையை வாங்கித் தந்திருந்தாள். அவள் படித்த படிப்பிற்கு, அவளுக்குக் கிடைத்த சம்பளம் போதாதுதான். ''பிச்சைக்காரர்கள் இதுதான் வேண்டுமென்று எதையும் தேர்ந்தெடுக்க முயலக்கூடாது'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியை அவள் படித்திருக்கிறாள்.

அனாதை இல்லத்திலே வளர்ந்த அவள் ஒரு வழியில் உறவு யாருமற்ற பிச்சைக்காரி போலத்தானே? கிடைத்த வேலைக்கு பழுதுசொல்லாது ஒப்புக் கொள்ள வேண்டும் என்று எண்ணி சட்டென்று அதை ஏற்றுக் கொண்டு விட்டாள்.

அவள் தங்கியிருக்க முதல் தளத்தில் ஒரு தனி அறையும், இலவசமான உணவும், மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளமும் கொண்ட அந்த வேலை இப்போது அவளுக்கு பல



வழியிலும் மிகவும் பிடித்திருந்தது. சாமான் அறை பொறுப்பு, விடுதி அறைகளை மேற்பார்வையிட்டு ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டிய கடமை, சமையலுக்குத் தேவையான உணவு பொருள்களை வாங்க வேலைக்காரப் பெண்ணுடன் கடைத்தெருவுக்குப் போய் வருதல் போன்ற பல அலுவல்கள் அவள் வசத்தில் ஒப்படைக்கப்பட்டு இருந்தன. ஆரம்பத்தில் இருநூறு ரூபாயாக இருந்த சம்பளம் இப்போது ஐம்பது ரூபாய் கூடி விட்டிருந்தது.

வேலையில் அமர்ந்து விட்ட புதிதில் சம்பளம் கிடைத்ததும் சில மாதங்கள் சேமித்து முதல் காரியமாக அவள் தனக்கு உடுத்த வேண்டிய சில சேலைகளை வாங்கிக் கொண்டாள். பொருத்தமான ஜாக்கெட்டுகளைத் தைத்துக் கொண்டாள். உள் ஆடைகள், ஒப்பனைப் பொருள்கள் என்று இளவயதிலே ஆசைப்படும் பல பொருள்களையும் தன்னால் முடிந்தவரை வாங்கி சேமித்து கொண்டாள்.

காயத்திரி இல்லத்தில் இருந்தபோது அவர்கள் எல்லோரும் பச்சைவண்ண நூல் சேலையும், வெள்ளை ஜாக்கெட்டும் என்ற சீருடையில்தான் வாழ வேண்டியிருந்தது.

இப்போது வண்ண வண்ண வாயில் சேலைகள் உடுத்தி லேசான முகப் பவுடரும், உதட்டுச் சாயமுமாக புதுப் பொலிவுடன் கண்ணாடியில் மிக அழகாக வித்தியாசமாகத் தெரிந்தாள்.

கருணா அம்மாள் சொல்லியிருந்தாள்: ''நீ பார்க்கக் கொஞ்சம் அழகான பெண். இல்லத்து வாழ்க்கையிலே கட்டுப்பாடாக வளர்ந்தவள். வெளி உலகம் பொல்லாதது. அதனாலே எச்சரிக்கையா இருக்கணும்'' இல்லத்துப் பதவியில் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளுமுன், கருணா அவளை எச்சரித்துத்தான் அந்த வேலைக்கு அனுப்பியிருந்தாள்.

திலகா அதை மறக்கவில்லை. தானும் ஒரு தனிப்பட்ட மனிதப் பிறவி என்கிற உணர்வு ஏற்படவேண்டியே அவள்

விதவிதமாக அலங்கரித்துக் கொண்டாலே ஒழிய, கடைத் தெருவில் போவோர் வருவோர் கண்களுக்குக் கவர்ச்சியாகத் தெரிய அல்ல.

காலத்தில் இல்லத்திலே அவளுடன் கூட வளர்ந்து ஆளான அத்தனைபேரும், வேண்டப்படாத குழந்தைகளாகத் தான் அங்கு சரண் அடைந்திருந்தவர்கள். சமூகத்தின் முன் தலைநிமிர்ந்து நிற்க துணையின்றி தாய்மை அடைந்து விட்ட, வஞ்சிக்கப்பட்ட பல பெண்கள், தங்களது குழந்தை களை பிறந்தவுடனேயே மறந்து மனதைக் கல்லாக்கிக் கொண்டு இல்லத்து வாயிலில் இருந்த தொட்டியில் விட்டுப் போயிருந்தனர்.

அவைகள் சட்டம் எனும் வேலிக்கு அப்பால் பிறந்த குழந்தைகள் என்ற நிலையிருந்தும், பெற்றவள் யார் தந்தை எவன் என்ற உண்மை தெரியாதிருந்தும், எல்லோரும் தலைவியால் தமது குழந்தைகளாக அன்புடன் பாதுகாக்கப் பட்டவர்கள்.

சகுனா அம்மாவுக்கு வயது அதிகம் ஆகிவிட்டதால் ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டிருந்தாள். அத்துடன் பல நோய்கள் வேறு. அவளை எப்பொழுதாகிலும் சிலசமயம் விடுமுறை நாட்களில் சென்று பார்த்துவிட்டு வருவது நிலகாவின் வழக்கம்.

ஒருமுறை நிலகா வீட்டிற்குப் போனபோது, சகுனா அம்மாள் மிகவும் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலேயே இருந் தாள். உதவி செய்ய அவளது தங்கை மகள் சவுந்திரி டெல்லியில் இருந்து வந்திருந்தாள்.

—இப்போது அவங்க எப்படி இருக்காங்களோ? போய் பார்க்கணும் என்று எண்ணியபடி, கண்ணாடியில் தெரிந்த அழகு முகத்தை மீண்டும் ஒருமுறை பார்த்து ரசித்துவிட்டு, அறையைப் பூட்டிக்கொண்டு கீழே வந்தாள்.



கீழ்தளத்தின் வரவேற்பு அறையை ஒட்டிதான் அந்த விடுதியின் அலுவலக அறை அமைந்திருந்தது.

அதன் தலைவி திருமதி அமராவதி, அந்த அமைப்பின் சொந்தக்காரிகூட, சுழல் நாற்காலியில் மேசைக்குப் பின் அமர்ந்து இருந்தார்.

''இந்தா! மாலை தபாலில் வந்த கடிதங்கள். வேலையில் இருந்து வந்ததும் விடுதிப் பெண்கள் காப்பி சாப்பிடவரும் போது இதை உரியவங்க கிட்ட ஒப்படைச்சுடு'' ஒருகட்டுக் கடிதங்களை அவளிடம் தந்தார்.

வேலைக்கு சென்றிருக்கும் பெண்கள், விடுதிக்கு திரும்பும் நேரம் நெருங்கி விட்டதால் சாப்பாட்டறையில் வேலைக்காரப் பெண்கள் பரபரப்புடன் செயல்பட்டுக்கொண்டு இருந்தனர். அவரவர்கள் உட்காரும் இடத்தில் பீங்கான் தட்டு, கோப்பை, கரண்டி, கண்ணாடி தம்ளர் என்று வரிசையாக மேசை மீது வைத்துக்கொண்டு வளையவந்து கொண்டிருந்தனர்.

அருகில் இருந்த சமையல்கட்டில் இருந்து, வெங்காய பஜ்ஜி எண்ணெயில் சுடப்படும் வாசனை மூக்கில் மோதியது.

அவரவர்கள் உட்காரும் இடம் நிலகாவுக்குத் தெரியும்.

முகவரிகளை கவனித்து கடிதங்களை உரியவரின் இடத்தில் தட்டு அருகில் வைக்கத் தொடங்கினாள்.

அதற்குள் ஒரு கூட்டம் சாப்பாட்டு அறைக்குள் புகுந்து விட்டது.

''அடடா! எனக்கு கடிதாசி வந்திருக்கு!''

''எங்கம்மா எழுதி இருக்காங்க?''

''என் சிநேகிதர் எழுதியிருக்கார் போலிருக்கே?'' சிரிப்பும் பேச்சுமாக தங்கள் கடிதங்களை ஆவலுடன்

பிரித்துக் கொண்டு காப்பி, டிபன் சாப்பிட உட்கார்ந்து விட்டனர்.

ஒரு பிரபல நிறுவனத்தில் ஸ்டெனோவாக பணியாற்றும் ஒரு பெண்—அந்த விடுதிக்கு வந்து சேர்ந்து சில நாட்கள் தான் ஆகியிருந்தது. தனது அண்ணன் எழுதிய கடிதத்தைப் பிரித்து படித்துவிட்டு மகிழ்ச்சியுடன் திலகாவை பார்த்தாள்.

''எங்களுக்கெல்லாம் தினமும் கடிதங்களைக் கொண்டு வந்து தர்றியே. உனக்கும் ஏதாவது கடிதம் வந்திருக்கும்... எனக்கு எங்கண்ணன் எழுதியிருக்கார். உனக்கு யார் எழுதியிருக்கா?...நீ கல்யாணம் செய்துக்க போறவள்!'' கண்களை சிமிட்டிக்கொண்டு வேடிக்கையாகக் கேட்டாள்.

முகம் சுருங்கிப் போனாள் திலகா. ஆமாம்! அவளுக்குக் கடிதம் எழுத உறவு என்று யார் இருக்கிறார்கள்?

குழந்தைப் பருவத்தில் இருந்து உள்ளத்தை உறுத்திய அந்த வேதனை பெரும் சுமையாக நெஞ்சை அழுத்த, அவள் தலையை ஆட்டிவிட்டு வறட்சியான முறுவலுடன் சட்டென்று சமையல் கட்டிற்குள் சென்று விட்டாள்.

''அவளைப் போய் கேட்கிறியே, நீ சுத்த முட்டாள். உனக்குத் தெரியாதா? அவள் காயத்திரி இல்லத்தில் இருந்து, இங்கே வேலைக்கு வந்திருக்கிறவள். ஊர்பேர் தெரியாத ஒரு அனாதை.''

பளிச்சென்று யாரோ பதில் சொன்னது காதில்பட, முகம் நின்றுவிடும் போன்ற அவமான உணர்வில் திலகா திகைத்துப் போய் நின்றாள்.

ஊர்பேர் தெரியாத அனாதையா அவள்?...ஆனாலும் அவள் வானத்தில் இருந்து குதித்துவிடவில்லையே...ஒரு தாய், ஒரு தந்தை இருவருக்கும் பிறந்தவள்தானே! ஆமாம், அவள் யார்?

## 2

அமராவதி பெண்கள் விடுதி, வேலை பார்க்கும் பெண்கள் தங்கியிருக்க பல வசதிகளுடன் கட்டப்பட்ட ஒரு தனியார் அமைப்பு.

வங்கிகளில், மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் கல்யாணம் ஆகாத பெண்கள், பெரிய நிறுவனங்களில் மேல் அதிகாரியாக பணியாற்றும் தனிமை படுத்தப்பட்ட விதவைகள்...என்று பலர் அங்கே வசித்தனர். அவர்கள் மாதம் கொடுத்த தொகைக்கு வசதிகள் கூடுதலாகவே இருந்தன. அதனால் அந்த விடுதிக்கு ஒரு தனிப் பெயர்—சிறப்பு. எப்பொழுதும் அறைகள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும். புதிய பெண்களுக்கு சட்டென்று அதில் இடம் கிடைத்து விடாது. விடுதியை மிகவும் சீராகவும் சிறப்பாகவும் நடத்திக் கொண்டிருந்த அதன் சொந்தக்காரியான அமராவதி சில கடுமையான சட்ட திட்டங்களை வைத்திருந்தாள்.

காலைகாப்பி பலகாரத்தில் இருந்து இரவு உணவு வரை விடுதியில் வசிப்பவர்கள், குறிப்பிட்ட நேரத்தை அனுசரிக்க வேண்டியது முக்கியமான கடமை. இரவு எட்டரை மணிக்குள் எல்லோரும் விடுதிக்கு திரும்பிவிட வேண்டும் என்பது முக்கியமான சட்டம். பொது தொலைபேசியை கட்டணம் செலுத்தி யாரும் உபயோகிக்கலாம். ஆனால் உறவினர்கள் நண்பர்கள் விடுதிப் பெண்களை அவசரம் என்பது இருந்தால் ஒழிய, இரவு பத்து மணிக்கு மேல் தொலைபேசியில் அழைக்கக் கூடாது.

வேலை செய்யும் பெண்களின் ஆண் உறவினர்கள், தோழர்கள் அவர்களை வந்து பார்க்கலாம். மாலை நாலு மணிக்கு மேல் ஆறு மணிக்குள் தோட்டத்து புல்தரையில் கிடக்கும் சிமெண்ட் பலகைகளில் உட்கார்ந்து பேசலாம். வரவேற்பு அறையில் எல்லோர் முன்னிலையிலும் பேசலாம். அதற்குப் பின்னர் அந்த விடுதியில் ஆண்வாடை வீசவே கூடாது.

திலகாவுக்கு இந்தச் சட்டத் திட்டங்கள் மிகவும் பிடித்தன.

இரவு ஒன்பது மணி அளவில் எல்லோரும் போய் அவரவர் அறைகளில் முடங்கிக் கொண்டு விடுவார்கள். அவள் வராந்தாவை சுற்றிப் பார்வையிட்டுவிட்டு, காவலாளிகளை எச்சரித்துவிட்டு வாயிலின் பெரும் கதவை அடைத்து இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டுத் தன் அறைக்குச் செல்வாள்.

நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு களைத்து வரும் பெண்கள், சாப்பாட்டிற்குப் பின்னர் டி.வி. பார்த்துக் கொண்டு வெகுநேரம் முன்னறையில் உட்கார்ந்திருப்பது இல்லை. ஆங்கில செய்தி வருமுன் அநேகம் பெண்கள் படுக்கச் சென்று விடுவார்கள்.

டி.வி.யை அணைத்து விட்டு, முன்னறை சன்னல்களை சாத்திவிட்டு, சாமான் அறை பூட்டை சோதித்துப் பார்த்து விட்டு படுக்கச் செல்வது திலகாவின் வேலை.

அன்று கடமை முடிந்து திருப்தியுடன் திலகா மாடிப் படிகளில் மெல்ல ஏறினாள்.

முன்னறையில் இருந்த போது தொலைபேசி கிணு கிணுத்தது. அந்த நேரத்தில் யாரையும் கூப்பிட இயலாது என்று கண்டிப்பாக சொல்ல வேண்டும் என்ற தீர்மானத்துடன் அவள் கீழே இறங்கி வந்தாள்.



''அமராவதி விடுதிதானே? திலகாகிட்ட பேச முடியுமா?'' கேட்ட குரல் மிகவும் பழக்கமானதாக இருக்கவே அவள் திடுக்கிட்டுப் போய் விட்டாள்.

''கருணா அம்மாவின் தங்கை மகள் சவுந்தரி பேசறேன். திலகாதானே? பெரியம்மாவுக்கு உடம்பு ரொம்ப முடியாமல் போயிடுச்சு. உன்னைக் கட்டாயம் பார்க்கணும் என்கிறாங்க. முடிஞ்சா காலையிலே கொஞ்சம் வந்துட்டுப் போக முடியுமா? பக்கத்து வீட்டுத் தொலைபேசியில் இருந்து அவசரமா பேசுகிறேன்.''

திலகாவின் நெஞ்சு படபடத்தது. சின்ன வயதில் இருந்து தாயன்பு காட்டியவள் கருணா அம்மாள். அவளுக்கென்று இருந்த ஒரே ஒரு மனித பிணைப்பு...அவங்களுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்...?

''டாக்டர் வச்சு பார்க்கலீங்க இல்லையா? அவர் என்ன சொன்னார்?'' கவலையுடன் கேட்டாள், திலகா.

அவர்தான் முடிவா சொல்லிட்டார், நோய் ரொம்ப அதிகமாயிடுச்சு. இனிமே தாங்காதுன்னுட்டார். காலையிலே பிடிச்ச உன் நினைவா பேரை சொல்லிகிட்டு புலம்பிக்கிட்டிருக் காங்க.''

நெஞ்சை அடைத்த துயரத்தை திலகா விழுங்கிக் கொண்டாள். கண் இமைகளை நீர் சுடுவதை சமாளித்துக் கொண்டாள், ''கட்டாயம் நாளை காலை நான் வந்து அவங்களை பார்க்கிறேன்னு சொல்லுங்க'' அழுகை பேச்சை அடைக்கவே திணறிப் போனாள்.

இரவு முழுவதும் அவள் உறங்கவேயில்லை. ''மறுநாள் அவள் விடுதி தலைவி அமராவதியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு புறப்படும் வரை கருணா அம்மாள் உயிருடன் இருப்பார்களா? கடவுளே எனக்கு அவங்களை உயிரோட பார்க்கிற பாக்கியத்தைக் கொடு'' தன்னுள் பலமுறை பிரார்த்தித்துக் கொண்டாள்.

கடமைதான் முதலில் பின்னர்தான் சொந்த காரியங்கள் என்றும் கொள்கையில் வளர்க்கப்பட்டவள் திலகா. விடியு முன்பே வெளியே கிளம்ப தயாராகிவிட்டாள். நல்லவேளை, அவளுக்கு அன்று மாத விடுமுறை நாள். காலை பத்து மணியில் இருந்து மாலை எட்டு வரை அவள் ஓய்வாக இருக்க இயலும். எனவே, பரபரப்புடன் காலை வேலைகளில் ஈடுபட்டாள்.

மளிகை சாமான் அறையைத் திறந்து பகல் உணவுக்கு தேவையான உணவு பொருள்களை சமையல்கார அம்மா விடம் எடுத்து கொடுத்துவிட்டு அறையை பத்திரமாகப் பூட்டினாள். காலை உணவு தயாராகிவிட்டதா என்று மேற்பார்வை செய்தாள். வேலையாட்கள் பெண்கள் தங்கும் அறையை பெருக்கி கழுவித் துடைத்து சுத்தம் செய்து விட்டனரா என்று சுற்றிப் பார்த்துவிட்டு பொறுமையுடன் விடுதித் தலைவி அமராவதியை நோக்கிக் காத்திருந்தாள்.

விடுதி சாவிகளை அமராவதியிடம் ஒப்படைத்துவிட்டு முடிவில் புறப்பட்டாள்.

அலுவலக வேளை. பஸ் நிரம்பி வழிந்து கொண்டு வந்து நிலையத்தில் நின்றது. எப்படியோ உள்ளே புகுந்து இடம் தேடிக்கொண்டு விட்டாள். அன்று பஸ் நத்தையாக ஊர்வது போன்ற ஒரு பிரமிப்பு அவளுக்கு. அடிக்கடி பதைபதைப்புடன் சன்னல் வழியே தெருவை எட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

சிந்தாதிரிப்பேட்டை செங்குந்தர் தெருவுக்குள் நுழையு முன் அவள் நெஞ்சு வேகமாகத் துடித்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள் பொடித்துக் கொண்டன.

ரொம்ப அபாய நிலையில் இருப்பதாக சவுந்தரி சொன்னாங்களே—ஒரு சமயம்...நினைக்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது.



நேசமுடன் அவளுக்குத் துணையாக இருந்து வாழ்க்கையில் வழிகாட்டிய அந்தத் தெய்வத் தாயை உயிருடன் பார்க்க முடியாது போய்விட்டால்? கவலையுடன் மெல்ல தலையை நிமிர்த்தி கருணா அம்மாவின் வீட்டு வாயிலை உன்னிப்பாகப் பார்த்தாள்.

அப்படி ஏதாவது நேர்ந்து விட்டிருந்தால் வீட்டு வாயிலில் பலர் கூடியிருப்பார்களே.

வாயிலில் கோலம் போடப்பட்டு இருப்பதை சிறிது தூரத்தில் இருந்து கவனித்தபோதுதான் அவளுக்குத் தெம்பு வந்தது. திறந்து கிடந்த கதவை மெல்ல தட்டிவிட்டு உள்ளே புகுந்தாள்.

கட்டிலின் அருகே வந்து நின்ற அவளைக் கண்டதும் நோயினால் வெளுத்து ஊதிப்போன கருணாவின் முகத்தில் மலர்ச்சி பரவியது. ''வா! உன்னைத்தான் ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்!'' திணறியபடி மிக்க சிரமத்துடன் தன் வலது கரத்தை மெல்ல தூக்கி நீட்டினாள்.

கை கால்களில் இருந்து உடல்வரை நோயினால் ஊதி விட்டிருப்பதைக் கண்டு திலகா கலவரமடைந்து போனாள். சட்டென்று அந்தக் கரத்தைப் பற்றித் தன் கன்னத்துடன் பொருத்திக் கொண்டாள். அவளுக்குத் தாங்கமுடியாத துயரத்தில் அழுகை பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

'எப்படி இருந்தீங்க அம்மா இப்படி போயிட்டீங்க...'' கண்களில் நீர் புரள, விசும்பினாள்.

''திலகா! என்னத்துக்கு அழறே. நான் பார்த்து வளர்த்த குழந்தைகள் எல்லாம் இப்போ அங்கங்கே சவுரியமா வாழறாங்கன்னு கேள்விப்பட்டு ரொம்ப மகிழ்ச்சியா இருக் கேன். வேளை வந்தாச்சு. நான் கிளம்பவேண்டியது நியாயந்தானே?......உன்னைப் பார்க்கணும்னு ஒரு தீவிர

ஆசை இருந்திச்சு; நல்ல வேளை நீ வந்துட்டே'' கருணா பேசமுடியாது மூச்சுத் திணறலுக்கிடையே ஒவ்வொரு வார்த்தையாக...சொல்லி முடித்தாள்.

''உங்க உடம்பு இத்தனை மோசமாயிடுச்சின்னு எனக்கு தெரியாதும்மா. இல்லாட்டா லீவு எடுத்துக்கிட்டு உங்களுக்கு பணிவிடை செய்ய வந்திருப்பேன்'' கண்ணீர் கன்னங்களில் வழிய, மேலும் விசும்பினாள் திலகா.

''என்னை கவனிக்க சவுந்திரி இருக்கிறபோது வேலை செய்கிற உன்னை தொந்தரவு செய்யக்கூடாதுன்னு இத்தனை நாளும் ஒத்திப் போட்டேன். இனிமே தாங்காதுன்னு தோணிச்சு. என் உயிர் பிரிவதுக்கு முந்தி உன்னைப் பார்க்கணும் போலுன்னு ஒரே துடிப்பு அதனாலே...!'' மேலே தொடர்ந்து பேசமுடியாது கண் இமைகளை மெல்ல விரித்து வாயிற்படி அருகே நின்ற தன் தங்கை மகளைப் பார்த்து தலையசைத்தாள் கருணா.

சவுந்தரி உள்ளே வந்து இரும்பு அலமாரியைத் திறந்து ஒரு துணி முடிப்பை எடுத்து படுக்கை ஓரத்தில் கட்டிலின் மேல் வைத்தாள்.

''இதுக்குள்ளே ஒரு சின்ன சந்தனப் பெட்டி இருக்கு. உங்கம்மா மருத்துவமனைக்கு போறதுக்கு முன்னாடி என் கிட்ட கொடுத்துட்டுப் போனாங்க. அவசியம் வந்தால் ஒழிய இதை உன்கிட்ட அவசரப்பட்டு தரவேண்டாம்னு சொல்லி இருந்தாங்க. இப்போ அவசியம் வந்துவிட்டது'' திக்கித் திணறினாள் கருணா.

''என் அம்மாவா...'' வியப்புடன் கேட்டபடி கண்களைத் துடைத்துக் கொண்டாள் திலகா.

''ஆமாம். உன் தாய்தான். பெட்டிக்குள்ளே பூரா விவரமும் இருக்கு. ஆனால், ஒரு நிபந்தனை. என் உயிர் பிரிஞ்ச பிறகு அதை நீ திறந்து பார்த்துக்கோ. அதுவரை



உன் கிட்ட பத்திரமா வச்சுக்கோ'' கருணா பேசமுடியாது அலுப்புடன் மூச்சு வாங்க கண்களை மூடிக்கொண்டாள்.

கொஞ்ச நேரத்திற்குப் பின் எழுந்து உட்கார முயன்ற கருணா பலமாக இருமுறை இருமிவிட்டு அவர்கள் இருவரையும் பார்த்தபடி ஆயாசமாக தலையணை மீது சாய்ந்தாள்.

''அம்மா தண்ணி கொஞ்சம் சாப்பிடறீங்களா?'' அனுதாபத்துடன் கேட்டபடி குனிந்தாள் திலகா. வெளிப்படையாக முறுவலித்த கருணா, பிறகு நிரந்தரமாக கண்களை மூடிக் கொண்டு விட்டாள்.

## 3

சவுந்திரி எடுத்துக் கொடுத்த சந்தனப் பெட்டியை திலகா உடனடியாகத் திறக்கவில்லை.

தாய்க்குமேல் பாசம் காட்டிய குழந்தை இழந்து முன்னாள் தலைவியின் மறைவு அவளை வெகுவாகப் பாதித்துவிட்டது.

தனக்கு என்று சொல்லிக்கொள்ள இருந்த அந்த தொடர்பும் போய் இப்பொழுது அவள் முற்றிலும் தனியாகி விட்ட நிலையில் பெட்டியைத் திறக்க அவசரப்படாது நாட்களைத் தள்ளி போட்டுக்கொண்டு வந்தாள்.

அவளது தயக்கத்திற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது.

சத்தம் இல்லாத பகுதியில் பெய்த மழையைத் திரட்டிக் கொண்டு ஓர் ஆறு உருவாகிவிடலாம். குப்பைத் தொட்டியிலே வீசி எறியப்பட்ட யாரோ பெற்ற அனாதைச் சின்னமான குழந்தை, வளர்ந்து மாபெரும் ஞானியாகிவிடலாம்.

அதனால்தான் துறவியின் மூலமும், நதியின் ஆரம்பமும் பற்றி அதிகம் கேட்காதே என்பார்கள், பெரியோர்கள்.

அதைப் போல, "நான் யார்?" என்று இதுநாள்வரை அவனைக் குடைந்த அந்த பிரச்சினையின் முடிவை அடக்கிக் கொண்டிருந்த சந்தனப் பெட்டியைத் திறந்தால்?...

அவனது பிறப்பின் இரகசியம் மிக அசிங்கமாக இருந்து விட்டால்? ஒரு சமயம் அந்த அவலத்தை மறைக்கத்தான் அவன் தாய் அதை வாசனைமிக்க சந்தனப் பெட்டிக்குள் வைத்து தந்துவிட்டுப் போயிருக்கிறாளோ?

பலவிதமான குழப்பங்களில்—சந்தேகங்களில்—அடிமனதிலே எழுந்த அச்சுறுத்தலில் அவன் துணிவின்றி காலத்தை ஓட்டிக்கொண்டு இருந்தான்.

அன்று காலை அவன் ஹாஸ்டலுக்குத் தேவையான மாதாந்திர சாமான்கள் வாங்க கடைத்தெருவுக்குச் சென்றான். எல்லாவற்றையும் வாங்கி பணத்தைக் கட்டி விட்டு, கடைக்காரர் அட்டைப் பெட்டிக்குள் பொட்டலங்களை அடக்கித் தூக்கிக்கொடுத்ததை உடன் வந்த ஹாஸ்டல் ஆளிடம் கொடுத்தான். கொஞ்ச நேரம் நடைபாதை ஓரத்தில் காத்திருக்க சொல்லிவிட்டு, அருகே இருந்த பேரங்காடிக்குள் நுழைந்தான்.

ஒப்பனைப் பொருள்கள், சில மருந்துகள் முதலியன விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்த பகுதியில் அவன் தன் உபயோகத்திற்குத் தேவையான சோப்பு பவுடர் இத்யாதிகளை அவசரமாக வாங்கத் தேடிக்கொண்டு இருந்தான். அதுசமயம் அருகிலே நிழலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான்.

வெள்ளை சபாரி சூட்டில் உயரமாக கவர்ச்சியாக, கச்சிதமாகத் தெரிந்த அவனை, அவன் இதற்குமுன் பார்த்ததில்லை. ஆனாலும், பலகாலமும் பார்த்துப் பழகிய ஒரு நெருக்க உணர்விலே நிலை தடுமாறி திகைத்துப் போனான்.



அலையாகச் சரிந்த அவனது கிராப்பு முடி மிகவும் சீராக வாரப்பட்டு இருந்தது. மழிக்கப்பட்ட முகத்திலே மீசை தாடிப் பகுதியிலே பரவியிருந்த மெல்லிய பச்சை வண்ணத் தசை, முகம் செவேலென்று நல்ல நிறமாக இருப்பதைக் கவனித்தான். மேசை மேல் அவன் வைத்துக் கொண்டிருந்த கை விரல்கள் நீளமானதாகவும், நகங்கள் நெருக்கமாக வெட்டப்பட்டு, மிக சுத்தமாக இருப்பதையும் பார்த்தான். அவனிடம் இருந்து லேசான ஒரு மருந்தின் மணம் முகத்தில் மோதுவதை உணர்ந்தான்.

இத்தனையும் கவனித்தபின், அவனைப் பாராதது போல அவன் தான் வாங்க வந்த பொருள்களைப் பற்றி பெண் விற்பனையாளரிடம் படபடவென்று சொல்லிக் கொண்டிருந்தான்.

"இருங்க. அவர் கேட்டதை எடுத்து கொடுத்து பில் போட்டுட்டு உங்களை கவனிக்கிறேன்" என்று அந்த விற்பனையாளர் சொன்னபோது சுர்ரென்று கோபம் வந்து விட்டது. ஆண் அழகனாக டாம்பீகமாக வந்து நிற்கும் அவனைப் பார்த்ததும் விற்பனையாளர் நிலை மாறிவிட்டாள் போலிருக்கு!

"இதோ பாருங்க, எனக்கு அவசரம், நான் தான் முதலில் கேட்டேன். என்னை கவனிச்சுட்டு, பிறகு அவருக்கு எடுத்துக் கொடுங்க" என்று சொல்லத் துடிப்புடன் வாயைத் திறந்தான்.

அதற்குள் அவன் முந்திக்கொண்டான். "அவங்கதான் முதலில் வந்தாங்க. அவங்களை கவனிச்சுட்டு பிறகு எனக்கு சாமான்களை எடுத்துத் தாங்க" மிகவும் பணிவான குரலில் சொல்லிவிட்டு நிலா பக்கம் திரும்பினான்.

"நன்றி!" என்றான் புன்முறுவலுடன். ஏனோ அவன் முகம் முழுவதும் சூடாகியது. நெஞ்சு படபடவென்று துடித்தது.

அவள் பக்கம் திரும்பிய அவன் ஒருகணம் அயர்ந்து போய் அவளை வியப்புடன் பார்த்தான். மென்மையான புன்னகை அவன் முகத்தில் மலர்ந்தது. கண்கள் பளிச்சென்று ஒளிவிட்டன.

அவனது கூர்மையான பார்வையை நீண்ட நேரம் சந்திக்க இயலாது அவள் வெய்சிலிர்த்துப் போனாள். சட்டென்று விற்பனையாளர் பக்கம் திரும்பி தான் வாங்க வந்த பொருள்களைப் படபடவென்று சொன்னாள்.

லேசாகத் தொண்டையைச் செருமிக்கொண்டு அவன் பக்கம் நன்றாகத் திரும்பி நின்று கொண்டான். மீண்டும் ஒருமுறை அவளை காலோடு தலைவரை வியப்புடன் பார்த்தான்.

''நீங்கள் அய்யலூருக்கு எப்போவாவது வந்திருக்கிறீங்களா?'' திடீரென்று கேட்டான்.

ஒருகணம் திலகா அவனை வெறித்தாள். பேசுவதா வேண்டாமா என்று மனதிற்குள்ளே ஒரு சிறு போராட்டம். பேசவேண்டும் போல அந்த கவர்ச்சியான முகத்திலே பள பளத்த கண்கள் அவளது ஆவலை ஈர்த்தன.

''இல்லை. அந்த ஊரின் பேரைக்கூட நான் கேட்டது இல்லையே?''

''அய்யலூர் அய்யனார்னு கேள்விப்பட்டு இருப்பீங்களே. தஞ்சை மாவட்டத்திலே ரொம்ப பிரசித்திபெற்ற கோவிலாச்சே, ஆனால், ஊர் என்னவோ, சிறிய கிராமம் தான்...''

''அப்படியா? நான் கேள்விப்பட்டது இல்லை.''

''ரொம்ப ஆச்சரியமா இருக்கு. உங்களை அங்கே பார்த்தது போல எனக்கு ஒரு தீவிர நினைப்பு ஏற்பட்டது. அதனால்தான் கேட்டேன். ஒருசமயம் நான் உங்கள் புகைப் படத்தை ரத்தினசாமி அய்யா வீட்டில் பார்த்திருப் பேனா?''



என் புகைப்படத்தையா?...யார் அந்த ரத்தினசாமி? திலகாவின் நெஞ்சு படபடத்தது. வேண்டும் என்றே அவளிடம் பேச்சுக் கொடுக்க அந்த இளைஞன் அப்படி ஒரு கதை திரிக்கிறானா?

வியப்புடன் அவளை மீண்டும் பார்த்த அந்த விழிகளில் உண்மை உணர்வுதான் பளிச்சிட்டது. அந்த முகத்தில் போலித் தனமோ—கபடமோ—சூழ்ச்சியின் சாயலோ துளியும் காணவில்லை.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே பில்லை எழுதி முடித்த விற்பனையாளர் முகத்தில் சீற்றம் தெரிந்தது. பேனாவை எடுக்குமுன் அவசரப்பட்டவள் இப்போ ஓர் அழகான ஆண்பிள்ளையைக் கண்டதும் பல்லைக் காட்டிக்கொண்டு கதை பேச ஆரம்பித்து விட்டாளே!

''இந்தாம்மா பில். கவுண்டரில் பணத்தைக் கட்டிட்டு, சாமான்களை அந்தப் பக்கம் போய் வாங்கிக்கோ'' கூறிவிட்டு, ''சார்! உங்களுக்கு என்ன வேணும்னு சொன்னீங்க?'' என்று அதட்டினான்.

''பற்பசை, ஒரு சந்தனசோப்பு அவ்வளவுதான்...'' கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் அவன் திலகாவின் பக்கம் மீண்டும் திரும்பினான்.

''அய்யலூர் அய்யனாருக்கு அடுத்தபடி அந்த வட்டா ரத்திலே ரொம்ப பிரசித்தியான குடும்பம்—ரத்தினசாமி அய்யாவுடையதுதான். பெரியவருக்கு நீங்கள் சொந்த மோன்னு நிகச்ன்னு என் மனதிலே ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அதனாலே கேட்டேன். அட! இப்ப நல்லாவே ஞாபகத்துக்கு வர்றது. அறையிலே...சுவரில் உங்களாட்ட வயதில் ஒரு பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்திருக்கேன். இதே முகஜாடை...''

''இந்தாங்க பில்'' எரிச்சலுடன் விற்பனையாளர் நீட்டிய சீட்டை வாங்கிக்கொண்டான் அவன்.

நிலா கவுண்டரை நோக்கி நடந்தபடியே பேசினாள். ''என்னைப்போல சாயலில் இன்னொரு பெண் இருக்கிறாள் என்று கேட்க கவலையாகத்தான் இருக்கிறது. அதேசமயம் ரொம்ப ஆச்சரியமாகவும் இருக்கு.''

''இதில ஆச்சரியம் என்ன இருக்கு. உலகில் ஒருத்தரைப் போல இன்னொருத்தர் இருப்பது அதிசயமேயில்லை. இட்லரைப் போல ஒரே தோற்றத்தில் எட்டுபேர் இருந்தாங்களாம். யார் உண்மை, யார் போலின்னு தெரியாது ஒரே குழப்பமாம்'' சொல்லிக்கொண்டே கவுண்டர் அருகே வந்தவன் சிரித்தான்.

பளீச்சென்று ஒளிவிட்ட வரிசைப்பற்கள் அந்த முகத்தின் கவர்ச்சியை மிகைப்படுத்துவதை வேடிக்கை பார்த்தபடி நிலா அவனுடன் சேர்ந்து மெல்ல சிரித்தாள்.

முன்பின் தெரியாத ஓர் ஆடவனுடன் அவள் பேசிச் சிரிப்பது இதுதான் முதல் தடவை. அந்த அனுபவத்தின் புதுமை இனித்தது. இன்னும் கொஞ்ச நேரம் அவனுடன் தொடர்ந்து பேசமாட்டோமா, அறிமுகம் செய்து கொண்டால் என்ன; ஆமாம் யார் இவன் என்று எழுந்த பல கேள்விகளுக்கும் மனதிலே ஒரு பெரும் முற்றுப்புள்ளி வைத்து விட்டு, அவள் பில்லுக்கு உண்டான பணத்தைக் கட்டினாள். பொட்டலத்தை வாங்கிக்கொண்டு புன்னகைத்தபடி வெளியேறினாள்.

நடைபாதையில் நின்று கொண்டிருந்த ஹாஸ்டல் ஆளுடன் சேர்ந்து கொண்டு மெல்ல நடக்கத் தொடங்கியவள், கொஞ்சதூரம் சென்றதும் தன்னையும் அறியாது திரும்பிப் பார்த்தாள்.

கடையைவிட்டு வெளியே வந்த அவன், அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.



இன்பமா—பயமா? இனம் விளங்காது நெஞ்சு படபடக்க, மூச்சு முட்டும் உணர்வுடன், ''திரும்பிப் பார்! என்னைத் திரும்பிப்பார்!'' என்று அவன் பின்னாலிருந்து கூவி அழைக்கும் பிரமையுடன், விடுக்கென்று மறுபக்கம் நோக்கியவளாக வேகமாக நடந்தாள்.

## 4

அன்று முழுவதும் அவள் மனதில் அவனது நினைப்பு தோன்றி மறைந்த வண்ணம் இருந்தது.

உற்சாகமாக சிரித்த அவனது சிரிப்பொலி இன்னமும் காதுகளைத் தழுவிக் கொண்டிருப்பது போன்ற ஒரு பிரமை.

சொக்குப்பொடி தூவி விட்டான் என்பார்களே அது போல எங்கேயோ இருந்து வந்து ஒரே பார்வையில்—சில வார்த்தைகளில்—கலகலச் சிரிப்பில் அவளை அப்படி மயக்கி விட்டானே?

அவனது பெயரையும், மற்ற விவரங்களையும்கூட தெரிந்து கொள்ள வில்லையே? எத்தனை மடமை?

அவனைப் பற்றி அவள் கேட்க முன்வராதபோது அவன் எப்படி துணிந்து முந்திக்கொள்ள முடியும்? உண்மையில் அவன் ஒரு கண்ணியவானாக இருந்தால் அவளைப்பற்றி தப்பாக எண்ணிக்கொள்ள மாட்டானா? பலவாறு சிந்தித்தபடியே வேலைகளை முடித்துக் கொண்டு இரவுபடுக்க தன் அறைக்குள் வந்து விளக்கைப் போட்டாள்.

கதவை தாளிட்டுவிட்டு மறுநாள் காலையில் உடுத்த வேண்டிய ஆடைகளை எடுத்துத் தயாராக வைக்க பீரோவைத் திறந்தாள். பளிச்சென்று அவள் கண்களில் சந்தனப் பெட்டியைச் சுற்றிக் கொண்டிருந்த துணி முடிப்பு தெரிந்தது.

இதுவரையும் இல்லாத ஒரு புதிய வேகம் திடீர் என்று மனதில் பொங்கி எழ அவள் ஆடைகளை எடுத்து மேசையின் ஒருபுறம் வைத்துவிட்டு துணி முடிப்பை கையில் தூக்கிக் கொண்டு கட்டிலின் மேல் பளிச்சென்று வீசிய விளக்கொளியில் உட்கார்ந்தாள்.

துணி முடிப்பை அவிழ்க்க கைகளை நீட்டியபோது விரல்கள் நடுங்குவதை உணர்ந்தாள்.

அந்த சிறு சந்தனப் பெட்டியைச் சுற்றியிருந்த துணியை அவிழ்த்து தூசிபோக அப்பால் உதறி பிரித்துப் பார்த்தாள். காலத்தால் நிறம் மங்கிப்போன ஒரு பழைய பட்டுச் சேலையின் முந்தானைப் பகுதி அது என்று விளங்கியது.

அதை ஒருபுறம் கட்டிலின்மேல் வைத்துவிட்டு, சந்தனப் பெட்டியின் வாயில் சொருகியிருந்த துருப்பிடித்த சிறு சாவியை கொஞ்சம் அழுத்தமாக இருமுறை திருப்பி பெட்டியைத் திறந்தாள்.

மூடியை மேலே தள்ளியதும்...பழுப்பான ஒரு காகித உறை முதலில் கண்களில் பட்டது. அதை எடுத்து வெளிச்சத்தில் பார்த்தவள் திடுக்கிட்டு போனாள். முத்துக்களைப் போன்ற கையெழுத்தில்...'என் மகள் திலகாவுக்கு' என்று உறைமீது எழுதப்பட்டு இருப்பதைக் காண பெருத்த அதிர்ச்சி.

அப்படியென்றால் திலகா என்பது அவளுக்கு அவளைப் பெற்றவர்களே சூட்டிய பெயரா?

இல்லத்துத் தலைவி, கருணா அம்மாள், அனாதை குழந்தைகளுக்கு தாமே கொடுக்கும் பெயர்களில் அவளுடையதும் ஒன்று என்றல்லவா இதுவரை எண்ணிக்கொண்டு இருந்தாள்?

உணர்ச்சி கொந்தளிப்பில் உடம்பெல்லாம் ஆட கைகள் நடுங்க அந்தக் கடித உறையை எடுத்து படுக்கை மீது வைத்தாள்.

பெட்டியின் உள்ளே பொருத்தப் பட்டிருந்த நீல வெல்வெட்டிற்குள் ஒரு சிறு வெள்ளை அகல்விளக்கும், மெல்லிய தொரு தங்கச்சங்கிலியும், நீலவொளியைக் கக்கிய ஒற்றைக்கல் வைத்த ஒரு வைர மோதிரமும் இருக்கக் கண்டாள்.

கடித உறையைத் திறந்தாள். ஒரு கடிதமும் அத்துடன் ஒரு புகைப்படமும் தொப்பென்று அதிலிருந்து நழுவி... படுக்கைமேல் விழுந்தன.

பழுப்பேறிப்போன அந்தப் படத்தை எடுத்தாள். என்ன விந்தை? கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்ப்பது போன்றதொரு திகைப்பு! அவளைப் போலவே நெளிந்த கூந்தல், நீர்க்கமான மூக்கு—சிரிக்கும் நீண்ட கண்கள்... சின்ன வாய்...படத்தில் தெரிந்தவளுக்குக் கொஞ்சம் வயது கூடுதலாக இருக்கும் என்றதொரு கணிப்பு......மற்றபடி அச்சில் வார்த்த தோற்றம். சட்டென்று படத்தைத் திருப்பிப் பார்த்தாள். மறுபடியும் ஒரு அதிர்ச்சி.

''என் அருமை மகள் திலகாவுக்கு...அம்மா அனுசூயா நல்லாசிகளுடன்'' என்று எழுதி தேதி—ஆண்டுடன் கையெழுத்திடப் பட்டு இருந்தது.

நான்யார்? என்று கேட்டுக் குழம்பிக்கொண்டு இருந்தவளைப் பார்த்து...நீ என் மகள் திலகா...என்பதுபோல போட்டோவில் காணப்பட்ட பெண் மென்மையாக புன்னகைத்துக் கொண்டு இருந்தாள்.

உணர்ச்சியின் உச்ச நிலையை எய்திவிட்ட திலகாவின் கண்களில் நீர் புரண்டது.

''அம்மா?......நீங்கள் என் அம்மாவா? ... எவ்வளவு அழகா இருக்கீங்க... அம்மா......'' மார்புடன் படத்தை அணைத்துக் கொண்டு விம்மிவிட்டாள். பின்னர் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பொடியாக உதிர்ந்துவிடும் நிலையில் இருந்த கடிதக்கட்டை எடுத்து மெல்ல திறந்தாள்...

''அன்புள்ள என் அருமை [illegible] ஆசிகள். உன் தந்தை இறந்தபின் கைக் குழந்தையான உன்னை எடுத்துக்கொண்டு கவுரவமாக வாழ வேலை தேடிக் கொண்டு நான் காயத்திரி இல்லத்திற்கு வந்தேன். கருணா அம்மாள் என் சோகக் கதையைக் கேட்டு மனம் நெகிழ்ந்து தனது இல்லத்து அலுவலகத்தில் கணக்கர் வேலை போட்டுத் தந்து என்னையும் உன்னையும் இங்கேயே தங்கவும் அனுமதி தந்தார். ஆனால் விதி வேறாக அமைந் திருந்தது. காய்ச்சல்போல ஆரம்பமாகி காசநோய் தீவிர மாகி விடவே என்னை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டி வந்து விட்டது. ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பமாட்டோம் என்ற உள்ளுணர்வில் அவசரமாக இந்தக் கடிதத்தை எழுது கிறேன். காலம்வரும்போது இந்த பெட்டியையும் இதில் உள்ள பொருள்களையும் உன்னிடம் தந்துவிடும்படி கருணா அம்மாளை மிகவும் கேட்டுக்கொண்டு கிளம்புகிறேன்... கருணா அம்மாள் தன் குழந்தைபோல பாதுகாத்து வளர்த்து ஆளாக்குவதாக வாக்குத் தந்திருக்கிறார். அந்த அமை தியில் நான் மரணத்தை நோக்கி விரைந்துகொண்டு இருக் கிறேன்.

இந்தக் கடிதத்துடன்...என் கைப்பட உன் பாட்டனா ருக்கும் ஒரு கடிதம் வைத்திருக்கிறேன். என் புகைப்படத் தையும் கடிதத்தையும்—அதில் கண்ட முகவரிக்கு எடுத்துச் சென்று உன் பாட்டனை நீ சந்திக்க முயல வேண்டாம். உனக்கு நான் விட்டுப்போகும் சொத்து எனது கல்யாணப் புடவையின் முந்தானையில் இருந்து ஒரு பகுதி, ஒருசிறு அகல் விளக்கு—ஒரு மோதிரம், உன் தந்தை எனக்கு பரிசாக தந்த தங்கச் சங்கிலி. என் அன்பு மகளே, உன் தந்தை மட்டும் ரெயில் விபத்தில் அகால மரணமடையாது இருந் தால்...உன்னை இப்படி அனாதையாக நான் விட்டுப் போயிருக்க மாட்டேன். மரணமடைந்தபின்...பெண்ணின் புடவைத் தலைப்பின் ஒரு பகுதியை ஞாபகமாக மங்களத்தின் அறிகுறியாக இருந்தவள் நினைவாக கிழித்தெடுத்து வீட்டில் வைத்துக்கொள்வது தமது குடும்பப் பழக்கம்—அதன்படி நான் ஏற்றிய விளக்கையும்...என் புடவையின் தலைப் பையும் உனக்கு விட்டுப் போகிறேன். ஆசிகள் பல—உன் அம்மா அனுசுயா.''

கட்டிலின் மீது ஒருப்புறமாக இருந்த சேலையின் முந்தானைப் பகுதியை எடுத்து மடிமீது வைத்துக்கொண்ட நிலாவுக்கு துக்கம் தாங்க முடியவில்லை. தன்னைப் பெற்றவளை மடிமீது கிடத்திக்கொண்டு விட்டது போன்ற உணர்வில், தாளமுடியாது விம்மி அழுகையில் குலுங்கி விட்டாள். பின்னர், மெல்ல கண்களைத் துடைத்துக்கொண்டு தன்னைத்தானே சமாதானப்படுத்தியபடி ... அடுத்ததாக இருந்த கடித மடிப்பை மெல்ல பிரித்தாள்.

''அன்புள்ள அப்பா! இந்த கடிதத்தை என் மகள் நிலவா கொண்டு வரும்போது நான் நிச்சயமாக உயிருடன் இருக்க மாட்டேன். இறந்து பல ஆண்டுகள் மறைந்து விட்டிருக்கும். நீங்கள் அதுவரை உயிருடன் இருந்தால் என் மகள் உங்களை சந்தித்தால்... என்மேல் ஏற்பட்ட மனக்கசப்பை ஒரு பாவமும் அறியாத என் குழந்தை மீது காட்டாதீர்கள். அனாதை என்று அவள் இதுவரை நினைத்துக் கொண்டு இருப்பாள், பாவம்!

ஒரு பெரிய மனிதரின் செல்ல மகளின் ஒரே குழந்தை—சீரும் சிறப்புமாக வளர வேண்டியவள்—துர்பாக்கிய வசத்தால் அனாதை இல்லத்தில் வளர்ந்துவிட்டாள் என்று கருணை யுடன் அவளை ஏற்று கொஞ்சம் அன்பு காட்டுங்கள். வேறு எதுவும் அவளுக்குத் தாங்கள் தரவேண்டியதில்லை.

அத்துடன் ஒரு வேண்டுகோள். அப்பா...என்னை மன்னித்து விடுங்கள். அதை உங்கள் வாயால் கேட்க நான் உயிருடன் இருக்க மாட்டேன். காச நோய் என்னை தின்று கொண்டிருக்கிறது. பிழைக்க மாட்டேன் என்ற எண்ணத் துடன் உங்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

மருத்துவமனைக்கு சென்று கொண்டிருக்கும் உங்கள் அன்பு மகள்

அனுசுயா.''

கன்னத்தில் கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் அந்த கடிதம் மடிப்பின் பின் பக்கத்தை மெல்லப் புரட்டினாள்.

திரு. எம். ரத்தினசாமி அவர்கள், 9, வடக்குத் தெரு அய்யலூர், தஞ்சை ஜில்லா.

திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''உங்களாட்டம் சாயலில் ஒரு பெண்ணின் படத்தை பார்த்திருக்கிறேன். இதே சாயல்...'' வெள்ளை சபாரி சூட்டுக்காரன் சொன்னபோது அவள் திகைத்தாள். இப்போது புரிந்து விட்டது. அந்தப் படம் அவள் தாய் அனுசுயாவுடையதாகத்தான் இருக்க வேண்டும்.

அப்படியென்றால்......ரத்தினசாமி அய்யா......அவளது தாய் வழி பாட்டனா?

வியப்பு—துயரம் கலவரம்—மகிழ்ச்சி என்ற கலவை உணர்வில் அவள் படுக்கை மீது சாய்ந்தபடி வெகுநேரம் அழுதாள். இடையே தனக்குள் சிரித்தாள். கலங்கிய கண்களுடன் உறங்காது சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

## 5

நான் யார் என்று, திலகாவைக் குடைந்த கேள்விகளுக்கு எத்தனை பதில்கள் கிடைத்து விட்டன?

காயத்திரி இல்லத்திலேயே வளர்ந்த போதிலும் பிறர் சுட்டிக்காட்டியதுபோல அவள் ஓர் அனாதை அல்ல. அவமானத்தின் சின்னமும் அல்ல. ஒரு பெரிய குடும்பத்தில்



பிறந்து திருமணமாகி வாழ்ந்த உத்தமத் தாயின் அன்புச் செல்வம். ஆனால், இவைகளைத் தெரிந்து கொண்டபின் திலகாவுக்கு நிம்மதி ஏற்பட்டதா? மனஉளைச்சல் ஏற்படத் தொடங்கியது.

ரத்தினசாமி அய்யாவைத் தேடிக் கொண்டு செல்ல வேண்டும்.

ஓர் இளம் பெண்ணான அவள் தனியாக அதை செயல்படுத்த வேண்டும்.

சென்னையில் இருந்து அவள் வெகுதூரம் தனியே பயணப் பட்ட அனுபவமே கிடையாது. காயத்திரி இல்லத்தில் வாழ்ந்தபோது அதன் தலைவி இல்லத்து குழந்தைகளை சுற்றுலா பயணத்திற்கு சில முறைகள் அழைத்துச் சென்றது உண்டு. அவர்கள் அப்பொழுதெல்லாம் மாமல்லபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்கள்வரை கூட்டமாகப் போய் வந்திருக்கின்றனர். அவ்வளவே!

முன்பின் தெரியாத மனிதனைத் தேடிக் கொண்டு தன்னந்தனியே அவள் வெகுதூரம் இப்போது போக வேண்டும்!

அதைப்பற்றி நினைக்கையில் அவளுக்கு மிகவும் நடுக்கமாக இருந்தது. இளம் பெண்களுக்கு தனிவழிப் பயணங்களில் எத்தனைவிதமான ஆபத்துகள் குறுக்கிடலாம் என்பதை அவ்வப்பொழுது நாளேடுகளில் வரும் செய்திகளைப் படித்ததால் ஏற்பட்ட கலவரம் வேறு மனதைக் குழப்பிக் கொண்டு இருந்தது.

அவள் செய்து வந்த வேலைக்கு ஆண்டுதோறும் சில விடுப்பு நாட்கள் உண்டு. அவைகளை வீணாக்காது சேமித்து வைத்திருந்தாள். அதனால் அவளுக்கு ஒரு மாத சம்பளத்துடன் லீவு இருந்தது. முன்கூட்டி அறிவிப்பு விடுத்து விடுதி தலைவியிடம் இருந்து உத்தரவு வாங்கிக் கொள்ள இயலும். ஆனால், தனியே செயல்படுவது எப்படி?

அவள் குடும்பத்தில் நாட்களை நகர்த்திக் கொண்டு இருந்தாள்.

அன்று மாலை சமையல் வேலை செய்து கொண்டிருந்த செண்பகம் தன் உதவி ஆளிடம் பேசியதைக் கேட்டதும் அவள் மனதிலே புது தெம்பு பிறந்து விட்டது. எதிர்பாராதவித மான ஒரு வாய்ப்பு—அதை நழுவ விடக்கூடாது.

விடுதி சமையல்கார அம்மா செண்பகம் ஒரு மாதகால லீவில் தஞ்சாவூருக்கு அடுத்த சோலையார் குடியில் உள்ள தன் மகளைக் காணச் செல்ல விரும்புகிறாள் என்பது செய்தி.

வழி பிறந்து விட்டது என்ற மகிழ்ச்சியில் நிலகா பரபரத்தாள். செண்பகத்திடம் பேச்சுக் கொடுத்தாள். பின்னர் மெல்ல தானும் தஞ்சாவூர் செல்ல இருப்பதைப் பற்றி ஆரம்பித்தாள். அவ்வளவுதான் செண்பகத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி. தனியாக வயதான காலத்தில் மூட்டை முடிச்சுகளுடன் ரெயிலில் பயணப்பட வேண்டுமே என்று உள்ளூரக் கவலைப் பட்டுக்கொண்டு இருந்தவளுக்கு துறுதுறுப்பான ஓர் இளக துணைக்கு வருகிறது என்றால் கசக்கவா செய்யும்?

இருவரும் சேர்ந்து திட்டமிட்டனர். தங்கள் எண்ணத்தைத் தலைவியிடம் வெளியிட்டு அனுமதி வாங்கிக் கொண்டு விட்டனர். அதற்குப் பின்னர் தொடர்ந்த இரு தினமும் நிலகாவுக்கு மூச்சுவிட நேரமில்லை.

பயணத்திற்கு வேண்டியதை வாங்கவும்—பெட்டியில் அடுக்கவும், வழிச் செலவுக்கு வேண்டிய பணத்தை எடுக்க வங்கிக்கு ஓடவும் பொழுது பூராவும் சரியாக இருந்தது.

கீழ்வானத்தின் சிவப்பு மறைந்து பொழுது பளிச் சென்று புலரும் தருவாயில் அவர்கள் இருவரும் ரெயில் வண்டியில் இருந்து நிலையத்தில் இறங்கினார்கள். தூக்கிச் செல்ல பாரமில்லாத ஒரு சிறு பெட்டியில் அவளது சாமான்கள் அடங்கி விட்டிருந்தன. தோள் பையில் சுருணா அம்மாள் கொடுத்த கடிதங்களும், புகைப்படமும், செல வுக்குத் தேவையான பணமும் இருந்தன. கூட வந்த செண்பகமோ, மகளுக்கும் அவள் குடும்பத்துக்கும் வாங்கி வந்த சாமான்களை ஒரு பெரும் மூட்டையாகக் கட்டிக் கொண்டு விட்டிருந்தாள். கூட, தலை மீது ஒரு தகரப் பெட்டி... நிலையத்தைவிட்டு வெளிவருவதற்குள் மூச்சுத் திணறியது அவளுக்கு.

நிலகா மனம் இளகிப் போனாள். பாவம் செண்பகம் வயதானவள் என்று அநுதாபப்பட்டு, அவளிடம் இருந்த மூட்டையைத் தான் வாங்கிச் சுமந்தாள்.

ஒருவழியாக அவர்கள் பஸ் நிலையத்தை அடைந்தனர். நல்லவேளை புறப்பட இருந்த பஸ்ஸில் அவர்களுக்கு இடமும் கிடைத்து விட்டது. மூட்டையை மேலே போட்டு விட்டு பெட்டிகளை காலடியில் வைத்துக்கொண்டு இருவரும் உட்கார்ந்தனர்.

பஸ் நகரத் தொடங்கியது. சிறிது பொழுதில் செண் பகம் தூங்கத் தொடங்கிவிட்டாள். அவளுக்கு அத்தனை அலுப்பு. ஆனால், சன்னல் ஓரத்தில் இடம் பிடித்துக் கொண்டு இருந்த நிலகா, திகில் கலந்த மகிழ்ச்சியில் தன் புதிய சூழ்நிலையைச் சுற்றி கண்களை ஓட்டிக்கொண்டு இருந்தாள்.

பஸ் வளைந்து நெளிந்து ஒரு குறுகிய சாலையில் புழுதியைக் கிளப்பியபடி மெல்ல ஓடியது. சாலை ஓரமாக அதனுடன் ஈடுகொடுத்தபடி அதே வளைவு—நெளிவுடன் ஓடிய வாய்க் காலையும், அதன்பின் விரிந்து படர்ந்து கிடந்த பசுமையான வயல்களையும், அதற்கு அப்பால் தெரிந்த தென்னந் தோப்புகளையும், நீலவானத்தை நோக்கி நிமிர்ந்து நின்ற கோயில் கோபுரங்களையும் வேடிக்கை பார்த்தபடி அவள் வியப்புடன் விழித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

பஸ் மெல்ல நகர்ந்து, அங்கங்கே நின்று பயணிகளைத் தள்ளிவிட்டு, சிலரை உள்ளே ஏற்றிக்கொண்டு நத்தையாக ஊர்ந்தது.

அவர்கள் சுமார் இரண்டு மணி நேரம் பயணம் செய்ய வேண்டும் என்றும், செண்பகம் முதலில் தன் கிராமத்து நிறுத்தத்தில் இறங்கிவிடுவாள் என்றும், அதற்குப்பின் நான்கு கிராமங்கள் தாண்டிதான் அய்யலூர் என்றும், அந்த நிறுத்தத்தில் இருந்து திலகா ஊருக்குப் போகும் பாதை வழியே கொஞ்சதூரம் நடக்க வேண்டியிருக்கும் என்றும், அங்கெல்லாம் வண்டி சவாரிகள் அநேகமாக இருக்காது என்றும், அவசரப்பட்டால் வரப்புகள் வழியே குறுக்கே சென்றால் விரைவில் கிராமத்தை அடைந்துவிடலாம் என்றும் செண்பகம் இரவு ரெயில் பயணத்தின்போது தனக்குத் தெரிந்தமட்டும் விவரித்திருந்தாள்.

ரெயில் பயணத்தின் போது அவள் கூட துணையாக இருந்த சமயம், அவளுக்கு அந்த தனிப் பயணம் அத்தனை பயமாக இருக்கவில்லை. ஆனால், இப்போது திகர் என்று கவலை வந்துவிட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் தாய் போல துணை இருந்த செண்பகம் இறங்கிப் போய் விடுவாள். தான்மட்டும் தனியே அய்யலூர் கிராமத்தில் இறங்கவேண்டும். முன் பின் தெரியாத ஊரில் பாட்டன் ரத்தினசாமியைத் தேடிக் கொண்டு அவள் செல்ல வேண்டும். எப்படியோ பாட்டன் வீட்டைத் தேடிக் கொண்டு போய் விடுகிறாள் என்றால் அடுத்தபடியாக, பாட்டன் வீட்டில் அவளுக்கு வரவேற்பு இருக்குமா? சாமி வழி விட்டாலும் பூசாரியின் அனுமதி தேவையாச்சே. பிரபல மனிதரான ரத்தினசாமியின் வீட்டு ஆள் படைகளே அவளை உள்ளே போகவிடாது தடுத்து விட்டால்...? ஐயோ அவள் என்ன செய்வாள்?

''சோலையான்குடி வந்தாச்சு. இறங்கறவங்க சீக்கிரம் ஆகட்டும்.'' கத்திவிட்டு நடத்துனர் குழலை பலமாக ஊதினார். பஸ் ஒரு குலுக்கலுடன் நின்றது. செண்பகம் திடுதிப்பென்று விழித்தாள். தன்பெட்டியை இழுத்து எடுத்துக்கொண்டு அவசரமாக விடை பெற்றுக்கொண்டு இறங்கிவிட்டாள். மூட்டையை வாங்கிக்கொண்டு கையை ஆட்டி அவள் ஜன்னல் அருகே வந்து பேசுமுன், பஸ் மீண்டும் புழுதியைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டுவிட்டது.

ஜன்னல் வழியே சில்லென்று வீசிய காற்றில் நெற்றி மீது புரண்ட முடியை சீராக்கிக்கொண்டு, காய்ந்துபோன உதடுகளை நாவில் ஈரப்படுத்திய வண்ணம் அவள் திரும்பி பஸ் உள்ளே பார்த்தாள். தூக்கிவாரிப் போட்டது.

பூப்போட்ட சிலாக்கும், பழுப்பு வண்ண பாண்டும் அணிந்திருந்த வாட்ட சாட்டமான ஒரு தறுக்கு மீசை மனிதன், அவளையே முறைத்துக்கொண்டு இருப்பதைக் கண்டாள்.

பயத்தில் நெஞ்சு படபடக்க அடிவயிறு சில்லென்று மரத்துப்போக, அவள் எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

அப்படி வைத்த கண்மாறாது அவன் ஏன் பார்க்கிறான்? யார் இவன்? தூக்கமில்லாது ரெயில் பயணம் செய்ததின் பாதிப்போ. அவன் சாதாரணமாகப் பார்த்ததை விரோதப் பார்வை என்று மருட்சி அடைகிறோமோ?

மறுபடியும் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள். சிறிது பொழுது சென்றதும், மீண்டும் மெல்ல, அந்த கடைசி இருக்கையின் பக்கம் பார்வையை ஓட்டினாள். நெஞ்சு வாய்க்குள் வந்துவிடும் போன்ற நிலையில் துவண்டு போனாள். அந்த தறுக்கு மீசைக்காரன் அவளையே வெறித்துக்கொண்டு இருந்தான்.

''அய்யலூர் வந்தாச்சு. இறங்கலாம்'' குரல் கொடுத்து குழலை ஊதினார் நடத்துனர்.

பஸ் வழக்கமான குலுக்கலுடன் நின்றது. பெட்டியை எடுத்துக்கொண்டு அவனைத் திரும்பி பார்க்க அஞ்சி

மெல்ல திலகா இறங்கினாள். செண்பகம் சொன்ன அடையாளம் சரியாகவே இருந்தது. ஊரின் எல்லையில் காத்து வேட்டிக்குக் கொஞ்ச தூரம் அய்யனார் கோவில் முன்னால்... அந்த பெரும் மண்குதிரைகள் நின்றன. அருகே வாள் ஏந்திய வீரன் ஒருவன் மண் உருவில் கண்களை உருட்டி விழித்துக்கொண்டு நின்றான். மஞ்சள் அரளி மலர் குவியலாக அவன் பாதங்கள் மீது கிடந்தன.

மதில் சுவரில் கரிபடிந்த ஒரு பெரிய பிறை-அதற்குள் எரிந்து அமிழ்ந்துபோன ஒரு மண் அகல் விளக்கு இருந்தது. வெள்ளையும் சிவப்புமாக பட்டை போடப்பட்டிருந்த மதில் சுவரின் வலப் பக்கமாக நடந்து ஊருக்குப் போகும் வண்டிய கல பாதைக்குள் சென்றாள். ஓரத்திலே சிறுவாய்க்காலில், தண்ணீர் சலசல என்று ஓடிக்கொண்டு இருந்தது. கண் சென்று எரிந்த வெயிலில் தங்கப் பசுமையாகத் தெரிந்த வயற்காட்டிலே கண்களுக்கு எட்டிய தூரம் யாரையும் காணவில்லை. யாராவது எதிர்படுவார்கள் என்ற நம்பிக் கையில் நடந்தாள். பின்னால் காலடி சத்தம் கேட்டு திரும்பியவள் அதிர்ந்து போனாள்.

அந்த நறுக்கு மீசைக்காரன் அவளைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

## 6

திலகா வேகமாக நடக்க முயன்றாள். கால் புதையும் அளவு பாதையில் மண். சற்று கவனமாக அடி எடுத்து வைக்காவிடில் இடறிவிழுந்து விடும்போல அங்கங்கே சிறு கல் நீட்டிக்கொண்டு இருந்தது. சரியான ஒரு காட்டுப் பாதை அது. பின்னால் பலமாக காலடி ஓசை ஒலிக்க, அந்த நறுக்கு மீசைக்காரன் அவள் மனதிலே தீவிரமான அச்சத்தை எழுப்பி விட்டுத் தொடர்ந்து கொண்டு இருந்தான்.

நல்ல வேளை, கையில் பிடித்திருந்த பெட்டி அதிகமாக கனக்கவில்லை. நறுக்கு மீசை மிக அருகில் வருமுன்னே, அவள் மூச்சைப் பிடித்துக்கொண்டு இன்னும் அதிக வேகத்தில் நடந்தாள். சிறிது தூரத்தில், எதிர்பக்கத்து வாய்க்கால் கரையின் இறங்கு படி அருகே ஒரு பெண் குடத்தை விளக்கிக்கொண்டு இருப்பதைக் கண்டாள்.

கூவி அழைத்து விவரம் கேட்பது போல நின்றால்...... நறுக்கு மீசைக்காரன் அவளைத் தாண்டி போய் விடுவான். அவன் தலை மறையும் வரை அங்கு நின்றுவிட்டு பிறகு மெல்ல நடந்தால்?

ஒருசமயம், அவன் தலைமறைவாகப் போய் நின்று கொண்டு மறுபடி அவளை வழி மறித்தால்?

பலவும் எண்ணி முடிப்பதற்குள், காலடி ஓசை வெகு அருகில் ஒலிக்கவே அவள் உடல் முழுவதும் பயத்தில் பதறியது.

கிராமமாக இருந்தால் என்ன? பட்டணமாக இருந்தால் என்ன?

ஒரு பெண் தனி வழி நடப்பது தவறுதான். அந்த மீசைக்காரன் அவளிடம் அனாவசியமாக நெருங்கி பேச முற்பட்டு வம்புக்கு இழுத்தால், யாரை அவள் உதவிக்குக் கூப்பிடுவாள்?

மீண்டும் பாதை மீது கண்களை ஓட்டினாள். மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு கால்களை எட்டிப் போட்டு அவசரமாக நடக்க முற்பட்டாள். ஆனால், அவனுடைய நடையுடன் போட்டியிட இயலவில்லை.

நொடிப் பொழுதில் அவன் திலகாவின் அருகே வந்து விட்டான். பக்கவாட்டில் அவளுக்கு சரியாக நடந்து கொண்டு அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

''இப்பதான் முதல் தடவையா, அய்யனூருக்கு வருகி றாயா? எங்கிருந்து வருகிறாய்.''

திடீரென்று அவன் கேட்டதும் அதிர்ந்து போனாள். மார்பு வேகமாக துடித்தது. திகில் கலந்த குழப்பத்திலே அவனை திரும்பி பார்க்கவும் அஞ்சி காது கேளாது போல மேலே நடந்தாள்.

''உன்னைத்தான் கேட்கிறேன். அய்யனூரில் யார் வீட்டுக்குப் போறே?'' சற்று அதட்டலாக அவன் விசாரித் தான்.

சென்னையில் அவள் பார்த்து வந்த வீதி அருகே தெருவில் நடக்கும்போது யாராவது அவளை அப்படி கேட்டு இருந்தால், ''எங்கே போனால் உனக்கு என்ன? உன் வேலையைப் பார்!' என்று வெடுக்கென்று பதில் அளித்திருப்பாள்.

ஆனால், இப்போது அவளுக்கு தொண்டையை இறுக் கியது. கலவரத்துடன் தன் பின்புறம் மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்? சற்று தொலைவில் பஸ்வந்த பாதை இருந்து ஒரு கறுப்பு அம்பாசிடர் புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஊர் பாதைக்குள் நுழைந்து, அவர்கள் அருகே ஆடி அசைந்தபடி வருவதைக் கண்டாள்.

சொல்லி வைத்தாற் போல அந்த வண்டி அவள் அருகே சர்...என்ற ஓசையுடன் நின்றது. தகரடப்பாப் போல மிகப் பழையதாகத் தெரிந்த அந்த வண்டியை ஓட்டி வந்தவனைக் கண்டு மீண்டும் அவளுக்கு ஒரு புது அதிர்ச்சி.

சென்னையில் அந்த சிறப்பு அங்காடியில் கண்ட அதே வெள்ளை சபாரி சட்டைக்காரன் வண்டியை ஓட்டிக் கொண்டு அவள் அருகே நின்றபடி அவளைப் பார்த்து முறு வலித்தான்.

''மன்னிக்கவும், நான் கொஞ்சம் தாமதமாக புறப்பட்டு வந்துவிட்டேன். இல்லாவிட்டால், பஸ் நிறுத்தத்திலேயே வண்டியில் ஏத்திக்கிட்டிருப்பேன்'' என்று கூறிவிட்டு, கீழே இறங்கி, அவளது கையில் இருந்த பெட்டியை வாங்கி பின் ஆசனத்தில் போட்டான். ''உட்காருங்க'' உபசரித்தபடி முன்பக்கத்து கதவைத் திறந்துவிட்டான்.

''மார்த்தாண்டம் சார்...நீங்களும் ஏறிக்கங்க. நாம எல்லாரும் ஒரே ஊருக்குத்தானே போறோம்'' மெல்லிய தாகச் சிரித்த அவனை நறுக்குமீசை சற்று கடுப்புடன் முறைத்தான்.

''தினமும் கொஞ்சம் நடந்தா உடம்புக்கு நல்லதுன்னு நடக்கிறேன், நீங்க போங்க.''

திலகா வண்டியின் முன் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவளுக்கு ஒரே குழப்பம்.

இருவரில் யாரை நம்புவது? வெறித்த பார்வையுடன் அதட்டலாக விசாரித்த மார்த்தாண்டத்தையா? ரொம்ப பழகியவன் போல நடித்துக் கதவைத் திறந்து காரில் ஏற உபசரிக்கும் இவனை நம்புவதா? அவள் நெஞ்சு பக்பக் கென்று அடித்துக் கொண்டது.

காரைக் கிளப்பிக்கொண்டு அவள் பக்கம் திரும்பிய அவன் மெல்ல சிரித்தான்.

''நீங்கள் ரொம்பவும் பயந்து போயிருக்கீங்கன்னு உங்கள் முகம் சொல்லுது. அடுத்த கிராமத்தில் ஒரு நோயாளியைப் பார்த்துட்டு வந்துகொண்டு இருந்தேன். நல்லதாப் போச்சு இல்லாவிட்டால் நீங்கள் ரத்தினசாமி அய்யாவைப் பார்க்க வந்திருப்பதைத் தெரிஞ்சுகொண்டு, மார்த்தாண்டம் உங்களை ஊருக்குள் விடாது தடுக்க முயன்று இருப்பார்.''

திடுக்கிட்டுப் போனாள் அவள். அவனுக்கு அவள் அங்கே தன் பாட்டனைக் காண வந்திருக்கிறாள் என்பது எப்படி தெரியும்?

''இந்த விவரம் எப்படித் தெரியும்னு உங்களுக்கு வியப்பாக இருக்கு இல்லையா? உங்களைப் பட்டணத்துக் கடையில் பார்த்த அன்னிக்கே தெரிந்து கொண்டுவிட்டேன். ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் நீங்கள் இந்த ஊருக்கு வருவீங்கன்னு என் மனம் சொல்லிச்சு. ரத்தினசாமி அய்யா உங்கள் பாட்டன்னு புரிந்து கொண்டேன். அய்யா வீட்டு சங்கதி ஒரு சிலருக்கு தெரியும். அந்தவகையில் எங்கள் குடும்பத்துக்கு சில தகவல்கள் தெரியும். ஆனால், உங்களைப் பார்த்தும் புரிந்துகொண்டேன். உண்மைதானான்னு தெரிஞ்சுக்க உங்களை அன்னிக்கு கேட்டேன். நீங்கள் மழுப்பிட்டீங்க. பரவாயில்லை, இது என்வரை ஒரு எதிர்பார்த்த சந்திப்பு தான்'' என்று சிரித்தான்.

சோதிடம் பார்த்து சொல்வதுபோல அல்லவா அவனது கடந்தகால-நிகழ்கால நிகழ்ச்சிகளை சொல்கிறான். வியப்பும் கலவரமாக மவுனமாக அவன் முகத்தைப் பார்த்தாள்.

''உங்களை யாருன்னு தெரிஞ்சு போச்சு. ஆனால், உங்கள் பேர் எனக்குத் தெரியாது'' சொல்லிக்கொண்டே காரைக் கிளப்பினான்.

ஊகப்பட்ட சத்தத்தை எழுப்பிக்கொண்டு அந்த மண் பாதையில் அது நிதானித்துக்கொண்டு நகர்ந்தது.

''நிலகா''...என்றாள் தடுமாற்றத்துடன். இன்னும் அவள் கலவரத்தின் பிடியில் இருந்து பூராவும் விடுபடவில்லை.

''நான் இந்த கிராமத்திலே வைத்தியராக பணி புரிகிறவன். நாங்கள் இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள்தான். தஞ்சாவூரில் படித்து முடித்துவிட்டு, மூன்று ஆண்டாக இங்கேயே தொழில் நடத்தி வருகிறேன். நான் என் பாட்டன் ஆதரவில் வளர்ந்தவன். சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்டவன். எங்கள் தாத்தாவின் சொத்து பக்கபலத்திலே தான் இந்த சின்னக் கிராமத்தில் துணிவுடன் தொழில் தொடங்கியிருக்கிறேன். இப்போது ஓரளவுக்கு எனக்கு நல்லாவே இருக்கு.''

''உங்களை தெரிஞ்சுக்க இப்படி ஒரு வாய்ப்பு கிடைச்சதுக்கு மகிழ்ச்சி. உங்கள் பேரை இன்னும் சொல்லலையே!'' அவள் சிறிது துணிவு பெற்றவளாகக் கேட்டாள்.

''மேகநாதன்னு பேர். தாத்தா மேகான்னு சுருக்கி கூப்பிடுவார். இந்த ஊரில் நீங்கள் தங்க வசதி எதும் கிடையாது. உங்கள் பாட்டன் வீட்டுக்கும் உடனே போய் விட முடியாது.''

''ஐயோ! நான் என்ன பண்ணுவேன்'' அவளையும் மீறி கூவிவிட்டாள்.

''பதறாதீங்க. எனக்கு ரத்தினசாமி அய்யாவைத் தெரியும். அவரை எப்போது நீங்கள் பார்க்கமுடியும்னு ஏற்பாடு பண்றவரை நீங்கள் சில நாள் இங்கே தங்கியிருக்க வேண்டி வரும். எனக்கு ஒரு யோசனை தோணுது'' வண்டியை ஓட்டிக்கொண்டு அவள் பக்கம் திரும்பினான்.

''சொல்லுங்கள். தெய்வம் போல நீங்கு வழியிலே எனக்கு தெம்பு கொடுத்திருக்கீங்க. அந்த ஆசாமியைப் பார்த்து பயப்பட்டுட்டேன்.''

''நீங்கள் வந்திருக்கிற காரியம் கொஞ்சம் சிக்கலானது. அதனாலே நீங்கள் உங்கள் பாட்டனை சட்டுனு பார்த்துட முடியாது. பல தடங்கல்கள் ஏற்படலாம். அதுவரை என் ஒன்றுவிட்ட சகோதரி — விதவையாகிவிட்டவங்க, தன் சொந்த வீட்டிலே ஆள் படையோட வசிக்கிறவங்க. அவர்களிடம் தங்க ஏற்பாடு பண்றேன். என் வீட்டிற்கு அழைத்து போக முடியாததற்கு வருந்துகிறேன்.''

''புரிகிறது. தங்கள் மனைவிக்குப் பிடிக்காதிருக்கலாம். அது நியாயந்தானே?''

அவன் குபீரென்று சிரித்தான். ''எனக்கு இன்னமும் கல்யாணமாகவில்லை. என் பாட்டி இறந்து ஒரு ஆண்டு முடியவில்லை. அதனாலே என் அப்பா அந்தப் பேச்சை தற்காலிகமாக ஒத்திப் போட்டுவிட்டார். இப்ப, எங்கள் வீட்டிலே மனைவியை இழந்த என் பாட்டன், சிறு வயதிலேயே மனைவியை இழந்து ஒண்டி ஆகி உழைத்து ஓய்வு பெற்ற என் அப்பா, கல்யாணமாகாத காளை என்ற நான், ஆக மூன்று ஆண்கள் வசிக்கிறோம். அங்கு நீங்கள் எப்படி எங்களோடு இருக்க முடியும்? இது கிராமம். இங்கே, சட்டுனு ஏதாவது பேசி விடுவாங்க. உங்களது வருங்காலம் என்னால் பாதிக்கப்படக் கூடாது பாருங்கள்.''

திலகா முகம் சிவந்து போனாள். நெஞ்சிலே ஒரு இனிப்பான உணர்வு ஏற்பட, அவள் மேகநாதனைக் கடைக் கண்ணால் ஒருமுறை பார்த்தாள். இந்த எதிர்பாராத சந்திப்பில் இப்படி ஒரு இனிப்பான எதிர்காலம் உண்டாகியுள்ளதா? மெய் சிலிர்த்துப் போனாள். அவன் மேல் ஏற்பட்ட சந்தேகம் விலகி மனதில் மகிழ்ச்சி பொங்கியது.

## 7

மேடும் பள்ளமுமான பாதையில் வண்டி கொஞ்சம் மெதுவாகவே நகர்ந்தது. ''இந்தப் பாதையில் கோடை காலத்தில் எப்படியாவது காரை ஓட்டிக்கொண்டு போய் விடலாம். மழை பெய்தால் கேட்கவே வேண்டாம். ஒரே சேறு! அப்போதெல்லாம் மாட்டுவண்டியில்தான் பயணம் செய்வேன்'' என்றான்.

''மாட்டு வண்டியா'' திடுக்கிட்டு வினவினாள் திலகா.

''பின்னே, ஹெலிகாப்டரில் பறந்து போயா வைத்தியம் செய்ய முடியும்? இதென்ன அமெரிக்காவா? இல்லை நான் தான் பிரபல வைத்திய நிபுணரா? அவ்வளூர் சாதாரண கிராமம். நானும் வெறும் எம். பி. பி. எஸ். பட்டத்துடன் படிப்பை நிறுத்திக் கொண்டவன். என் தகுதிக்கு இந்தக் காரே அதிகம். மூனு வருடத்துக்கு முன் எங்கள் கிராமத்தை விட்டு பட்டணத்துக்குப் போன பலசரக்குக் கடைக்காரர் மகனிடம் இந்த காரை வாங்கினேன். ரொம்பப் பழைய அம்பாசிடர். வாங்கின புதிதில் கடாபுடான்னு ரொம்ப சத்தம் போட்டது. ஏதோ கொஞ்சம் செலவழிச்சு சீராக்கி வச்சிருக்கேன். அவசர கேஸ்களுக்குப் போக கார். மற்றபடி கிராமத்திற்குள் போய்வர மாட்டுவண்டியை உபயோகிக்கிறேன். கிட்டக்க இருக்கும் இடத்திற்குப் போய்வர சைக்கிள், இல்லாவிட்டால் நடராஜா சர்வீஸ்...'' சொல்லி விட்டு அவன் சிரித்தபோது, அவளும் சேர்ந்து சிரித்து விட்டாள்.

''பரவாயில்லை, வேடிக்கையாகப் பேசுகிறான். தன் வைத்தியத் திறமையால் நோயாளியைக் குணப்படுத்துமுன், இப்படி சிரிக்கப் பேசியே பாதி நோயைத் துரத்திவிடும் சாமர்த்தியக்காரன்'' தனக்குள் எண்ணியபடி சன்னல் பக்கம் திரும்பியவளுக்கு தூக்கிவாரிப் போட்டது.

நறுக்கு மீசைக்காரர் அவர்களை கோபத்தோடு பார்ப்பது தெரிந்தது.

''காரைவிட வேகமாக மார்த்தாண்டம் நடக்கறாப்பல இருக்கே. இதோ வந்துட்டாரே'' என்றாள் வியப்பை அடக்க மாட்டாமல்.

''இல்லே...அவர் வயல் வரப்பிலே புகுந்து குறுக்காக நமக்கு முன் முந்திக்கொண்டு வந்திருக்கிறார். அவ்வளவு தான். ஊரை அடைய இன்னும் குறைந்தது மூன்று கிலோ மீட்டர் தொலைவு போகணும்'' என்றான்.

''அப்படி எனக்கு செண்பகம் அம்மா சொல்ல வில்லையே. கூப்பிடும் தூரத்திலே இருக்குன்னாங்களே.''

பதிலுக்கு அவன் சிரித்தான். ''நீங்கள் பிறந்ததில் இருந்து பட்டணத்திலேயே வளர்ந்த வங்க. அதனால் கிராமத்து மக்களின் பழக்கவழக்கங்கள் பேச்சு இவைகளை அதிகம் தெரிந்துகொண்டிருக்க முடியாது. இரண்டுகிலோ மீட்டர் தொலைவானாலும் பத்து கிலோமீட்டர் தொலைவானாலும், கூப்பிடும் தூரம் என்ற வழக்கு முறை வார்த்தையைத்தான் பலர் உபயோகிப்பாங்க. சிலர் கல்லெறியும் தூரம்தான் என்பார்கள். நடக்க நடக்க நமக்கே பிரமிப்பாக இருக்கும். ஆனால், கிராமத்து மக்கள் பட்டணவாசிகளைப் போல நடக்க அஞ்சறதில்லை. உடனேவண்டி, வாகன வசதிகளைத் தேடி அலையமாட்டாங்க. உழைத்து உறுதியான உடம்பிலே அவர்களுக்கு நிறையத் தெம்பு உண்டு. மனதிலே துணிவும் உண்டு''

''நீங்கள் இந்த ஊரிலேயே தங்கி இருக்க விரும்பிய காரணம்?...பலர் கொஞ்சம் படித்ததும் பட்டணக்கரையில் தொழில் செய்யப் புறப்பட்டு விடறாங்க. சிலர் வெளிநாடுகளுக்கே போய் விடறாங்களே. நீங்கள் அப்படிப் போக ஆசைப்பட்டதில்லையா?''

''அப்பாவையும், தாத்தாவையும் தனியே விட்டு நான் போக விரும்பவில்லை. பிறந்த ஊரை மறந்து பட்டணமோ, பிற நாடோ நான் போகணும்னு ஆசைப்படலே.''

''உங்களுடைய உயர்ந்த கொள்கையை அறிய மகிழ்ச்சியா இருக்கு.''

''மிக்க நன்றி'' என்றவன் ''அதோ பாருங்க. ஊர் தெரிய ஆரம்பிச்சிட்டுது'' கையை எதிர் திசையில் சுட்டிக் காட்டினான்.

சிறு ஓலை வீடுகள், வைக்கோல்போர். அடுத்தடுத்து தொடர்ந்த சிறு ஓட்டு வில்லை வீடுகள் என்று...தெரு ஒன்றிலே கார் நுழைந்ததும் சட்டென நிறுத்தினான்.



''நல்லா பாத்துக்கோங்க. இதான் கிராமத்தின் முக்கியமான வடக்குத் தெரு. இந்த மூங்கில் வேலிக்கு அப்பால் தெரியும் தோட்டத்தைக் கொஞ்சம் கூர்ந்து பாருங்க புரியும்'' என்றான்.

''வேலிக்கு அப்பால் தென்னை மரங்களும், வேப்பமரங்களும் சேர்ந்த பசுமைக்கு நடுவே சற்றுத் தொலைவில் சிவப்பு ஓடு போட்ட, முன்பக்கத்துக் கூரையுடன்-ஒரு உயரமான வெள்ளை காரைக் கட்டிடம் தெரிகிறது'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

''அதான் ரத்தினசாமி அய்யாவின் வீடு. சமீபத்திலே கொஞ்சம் பழுதுபாத்து வெள்ளையடிச்சிருக்காங்க. அதான் அப்படி பளிச்சென்று தெரியுது. ஊரிலேயே பெரிய பணக்காரர்தான். ஆனாலும் பழைய காலத்துத் தோரணையில் வாழ்கிறவர். அவங்க வீட்டிலே கார்கூட கிடையாது. மாட்டு வண்டிதான் இருக்குன்னா பாத்துக்கோங்க...''

அவள் பாட்டன் ரத்தினசாமியின் வீடா இது? விழுங்கி விடுகிறவள் போல வியப்புடன் பார்த்தாள். இன்பமும் துயரமும் கலந்த உணர்வில் நெஞ்சு திக் திக் கென்று அடித்துக்கொண்டது. மற்ற வீடுகளில் இருந்து சற்று உள்ளே தள்ளி, ஒரு தோட்டத்திற்குள்ளே ஒளிந்து கொண்டிருக்கும் அவள் பாட்டனை எப்படி அவள் சந்திக்கப் போகிறாள்?

''ரத்தினசாமி அய்யாவுக்கு ரொம்ப வயதாகி இருக்குமே? உதவிக்கு வீட்டில்...'' சூழ்நிலையைத் தெரிந்து கொள்ள கேட்டாள் நிலகா.

''பணம் இருந்தால் பந்துக்கள் பத்துபேர் தானே சுற்றி வளைத்துக் கொள்வாங்க. நாலைந்து உறவினர்கள் பல வருடங்களாக இங்கேயே நிரந்தரமாக சுற்றிக்கிட்டிருக்காங்க. ஆனாலும் மனிதர் ரொம்பக் கெட்டிக்காரர். வயதாகி விட்ட போதிலும், வருத்தத்திலே உடைஞ்சு போனாலும் நோய் வந்து நடமாட முடியாத நிலை வந்தும்

தாற்காலியில் சாய்ந்தபடியே...அப்பப்பா அவர் ஒரு அதட்டல் போட்டால், அத்தனைபேரும் ஆடிப்போய்விடு வாங்க.''

''உங்களுக்கு இத்தனை விவரம் எப்படி தெரியும்?'' வியப்புடன் அவள் கண்கள் விரிந்தன.

''ரத்தினசாமி அய்யாவின் ஊரிலேயே பிறந்து வளர்ந்தவன் என்கிற நெருக்கத்திலும், அவரது குடும்ப வைத்தியன் என்கிற நிலையிலும் ரொம்ப சங்கதிகளைத் தெரிந்த வைச் சிருக்கேன்.''

கட்டுக்கொள்ள முடியாத மகிழ்ச்சியால் திலகாவின் மனம் பூரித்தது. இந்த தற்செயலான சந்திப்பு இப்படி ஒரு பிடிப்பாக இருக்கப்போகிறது. இதன் உதவியால் அவள் நினைத்துக் கொண்டு வந்த காரியம் நிறைவேறப் போகிறது என்று கனவில்கூட அவள் கருதவில்லையே?

''என்ன ரொம்ப ஆழ்ந்து யோசிக்கிறீங்க'' வேடிக் கையாக வினவியபடி திரும்பியவன் குறுக்கே சென்ற வேறு ஒரு நீண்ட தெருவிற்குள் ஓட்டினான்.

''இதோபாருங்க இதுதான் வீடு'' அவன் சுட்டிக்காட்டிய வீட்டைத் திரும்பிப் பார்த்தாள்.

வாயிலில் இரு பக்கமும் வண்ணம் பூசிய தூண்கள் கொண்ட திண்ணைகள். அவற்றைத் தாண்டி அகலமான மரக்கதவுடன் தெரிந்த பழைய காலத்துக் காரைக் கட்டடம். வாயில் திண்ணை மீது தாடி மீசை நரைத்துப் போன பெரியவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

''அவர் என் தாத்தா. வண்டியை விட்டு வாயில் திறந்தாமல் பையன் எங்கே ஓட்டிக்கிட்டுப் போறான்னு பாக்கறார்! அவருக்கு ஒரு கண்பார்வை ரொம்ப மங்கி கிட்டு வருது. அறுவை சிகிச்சைக்கு தஞ்சாவூர் ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போக ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறேன்'' சொல்லிய வண்ணம் வண்டியை தெருக்கோடிக்கு ஓட்டினான்.

சிவப்பு சிமெண்டு பூசப்பட்ட பெரிய திண்ணைகளும் அலங்காரமாக செதுக்கப்பட்ட வாயில் கதவுமாக உயரமாக நின்ற நீலவண்ணம் பூசப்பட்ட காரைக் கட்டடத்தின்முன் காரை நிறுத்தினான்.

''இதுதான் என் அக்கா வீடு. இறங்குங்கள்'' சொல்லிய படியே அவன் காரின் முன்பக்கத்துக் கதவைத் திறந்து விட்டான்.

கையில் பெட்டியுடன் படியேறிச் சென்ற அவளை எதிர் வரிசை வீட்டில் இருந்து சில தலைகள் வேடிக்கை வேடிக்கைப் பார்த்தன.

''யார்? தம்பி மோகனா...?'' கேட்டபடியே கதவைத் திறந்த பூரணி தன் எதிரே நின்ற அந்தப் பெண்ணையும் தம்பியையும் வியப்புடனும், கலவரத்துடனும் பார்த்தாள்.

# 8

தெருவின் எதிர் வரிசையில் ஒரு வீட்டில் இருந்து இளம் பெண் ஒருத்தி வேடிக்கை பார்க்க வாசிலுக்கே வந்துவிட்ட தைப் பூரணி பார்த்துவிட்டாள்.

அந்த ஊரில் மிகவும் வசதியாகவும் கண்ணியமாகவும் வாழ்ந்து மறைந்து போனவர், அவள் கணவர். அவர் பெயருக்கு இழுக்கு ஏதும் வராது அவளும் அப்படியே வாழ்கிறவள். வேடிக்கை பார்க்கும் சாக்கில் தெருப் பெண்கள் வீணான வம்புக் கதைகள் ஏதும் கட்டிவிட் டால்?.....

சட்டென்று அவர்கள் இருவரையும் உள்ளே கடத்திக் கொண்டு சென்று விட்டாள், பூரணி.

நடையைத் தாண்டி உள்ளே வந்து நின்ற திலகா பிரமிப்புடன் தன்னைச் சுற்றிலும் பார்த்தாள். நான்கு புறமும் ஓடிய தாழ்வாரங்கள், அவைகளை ஒட்டிய அறைகள். நடுவே, ஒரு கல்யாணமே செய்து முடித்துவிடும் அளவில் கம்பித் தடுப்புகளால் ஆன பெரிய முற்றம் என்று இருந்த அதுபோன்ற வீட்டை அவள் இதுவரைப் பார்த்தது இல்லை.

வசதியானவர்கள் என்ற சோபா, நாற்காலிகள் போன்ற ஆடம்பரங்கள் இருக்கவில்லை. தாழ்வாரத்தை அடுத்த பெரிய கூடத்தில் பளபளவென்று மின்னிய ஊஞ்சல் பலகை தொங்கியது. அதன் அருகே சுவர் ஓரமாக பட்டன் காலத்து சாய்வு நாற்காலி ஒன்றும் ஒருசிறு முக்காலியும் இருந்தன. மூலையில் ஒரு பட்டுப்பாய் சுருட்டி வைக்கப் பட்டு இருந்தது. சுவரில் சட்டம் அடிக்கப்பட்டு சீராக பல தெய்வங்களின் படமும்—ஒருபுறமும் காலமான முன்னோர் களின் படங்களும் காணப்பட்டன. வீடு தும்பு தூசியில்லாது சுத்தமாக, தரை முழுவதும் சிவப்பு சிமெண்டில் தகதகத்துக் கொண்டு இருந்தது.

கதவு ஒருக்களித்து ஓர் அறையில் இருந்த அலமாரியில், சன்னமாக காமாட்சியம்மன் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. லோசாக ஊதுவத்தியின் மணம் அங்கு இருந்து காற்றிலே மிதந்து வந்தது.

பார்வையைப் பூரணிமீது திருப்பினாள், திலகா.

நடு வயதைத் தாண்டியவள் மேகநாதனின் அக்காள். சாந்து பூசினாற்போல தடித்த உடல்வாகு. இங்கு மங்கும் வெள்ளிக் கம்பியாக நரை இழை ஓடிய தலை முடியை வாரி முடித்திருந்தாள். சிவப்புநூல் சேலையும் வெள்ளை ஜாக் கெட்டும் அணிந்து இருந்தாள். கழுத்தில் பிடியாக வைர முகப்பில் தொங்கிய தங்க சங்கிலிகளும், காதில் மின்னிய வைரக் கம்மல்களும் வெறுமையாகத் தெரிந்த அந்த முகத்தில் பணக்காரக் களையைச் சிந்திக்கொண்டு இருந்தன.



மேகநாதனின் சகோதரி உண்மையில் வசதியாக வாழ் கிறவள்தான். அந்த மாநிற முகத்தில் அமைதி தவழ்ந்த போதிலும் கண்களில் கடுமை தெரிகிறதே!

ஒருவேளை அந்த அம்மாளுக்கு திலகாவைப் பிடிக்காது போய்விட்டால்?

யாரோ ஒரு அனாதைப் பெண்ணை கொண்டு வந்து தம்பி தன் தலையில் சுமத்துவதாகக் கோபமடைந்தால்...?

திலகாவுக்கு அச்சமாகத்தான் இருந்தது.

''பின்கட்டுக்குப் போய் கால் கைகளை கழுவிட்டு வாம்மா!'' பூரணி உத்திரவிட்டாள். குரலில்தான் எத்தனை மிடுக்கு?

கடைசி தாழ்வாரத்தின் பின்னால் தெரிந்த பெரிய கனமான மரக்கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே சென்றாள் திலகா. பின்கட்டு என்ற பகுதியே ஒரு தனி வீடு போன்று பெரிதாகக் காணப்பட்டது. குளியலறை, கழிவு அறை, சாமான் அறை என்று பல அறைகளுடன் கம்பித் தடுப்பால் ஆனசிறு முற்றத்துடன் காணப்பட்ட பின்கட்டில் பெரிய அண்டாக்களில் நீர் நிரப்பி வைக்கப்பட்டு இருந்தது. அருகில் இருந்த செம்பில் தண்ணீரை எடுத்து முற்றத்தில் இறங்கி, முகம் கைகால்களை நிதானமாகக் கழுவிக் கொண்டாள். இடுப்பில் இருந்த கைக்குட்டையை உருவி முகத்தைத் துடைத்துக் கொண்டாள். அதற்குப் பின்னால் திறந்த கதவு வழியே கண்களை ஓட்டினாள்.

வீட்டை விட பெரிய ஒரு தோட்டமும், கிணறும் பின் புறம் தெரிந்தன. கிணற்றடியில் வேலைக்காரப் பெண் பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டு இருந்தாள்.

மெல்லத் திரும்பி உள்ளே வரும்போது, பின் கட்டின் கதவு அருகே நின்றுவிட்டாள்.

அக்காவுக்கும் தம்பிக்கும் இடையே நடைபெற்ற பேச்சில் அவள் பெயர் அடிபடுவதைக் கேட்டு நெஞ்சு துணுக்குற்று நின்று கேட்டாள்.

"இந்த முற்றத்திலேயே அந்தப் பொண்ணும் கை கால்களைக் கழுவியிருக்கலாமே! ஏன் பின்பக்கம் தூரத்தினீங்க?" மேகநாதன் சிரித்துக்கொண்டே கேட்டபடி முற்றத்தில் இறங்கி, செம்பு நீரில் தன் கை கால்களைக் கழுவிக்கொண்டு வந்தான்.

"வேணுமின்னுதான் அந்தப் பெண்ணை பின்கட்டுக்கு அனுப்பினேன். அவளை இங்கே நிறுத்தி வச்சுகிட்டு உங்கிட்ட என்ன விவரம் கேட்க முடியும்? மேகா! யார் இந்தப் பெண்? எங்கேயோ பார்த்த முகமா தெரியுது. முதல்லே சங்கதியை சீக்கிரம் சொல்லு. எனக்கு கையும் ஓடலை காலும் ஓடலை" என்று பதறினாள் பூரணி.

"நம் உதவியை நாடி வந்திருக்கும் ஒரு அபலைப்பெண், அவ்வளவுதான்."

"உண்மையா? வேறே எந்த விவகாரமும் இல்லையா? அவளோட நீ சேர்ந்து வந்து இறங்கினதைப் பார்த்தப்போ எனக்கு திக்குனு போயிட்டது. உங்கப்பா, தாத்தாவுக்குத் தெரியாமல் கொள்ளாமல் கடிதாசிக் கல்யாணம் பண்ணிட்டு வந்து நிக்கிறியோன்னு பயந்து போயிட்டேன் தம்பி! இருந்தாலும் அந்த முகம் ரொம்ப தெரிஞ்சமுகமா இருக்கே?"

"அக்கா! என்னைப்பத்தி உங்களுக்கு நல்லாவே தெரியும். நம்ப குடும்ப கவுரவத்துக்கு களங்கம் வராப்பல நான் எதும் செய்யமாட்டேன்னு. ஒரு முக்கிய காரியமா இந்த பொண்ணு இங்கே வந்திருக்கு. உண்மையைச் சொன்னால் நீங்கள் அதிர்ந்து போயிடுவீங்க. இந்த பெண் நிலகா தன் பாட்டன் ரத்தினசாமி அய்யாவை நேரில் பார்க்க பட்டணத்தில் இருந்து வந்திருக்கு."



"தம்பி! நம்ப அனுசுயாவோட மகளா சொல்றே? அவளுக்குக் குழந்தை பிறந்திருக்குன்னு கேள்விப்பட்ட போது கூட ரத்தினசாமி அய்யா மனம் இரங்கலைன்னு நமக்கெல்லாம் தெரியும். ஆமாம், இத்தனை காலம் இந்தப் பொண்ணு எங்கே இருந்தாளாம்?"

"உண்மையில் எனக்கு ரொம்ப விவரம் தெரியாது. அதையெல்லாம் நீங்கள் அவள்கிட்ட பேசித் தெரிஞ்சுக்கோங்க. நிலகாவை எதேச்சையா நான் பட்டணத்து கடை ஒன்றில் சந்திச்சேன். பார்த்தவுடனேயே இந்த பொண்ணுக்கும் நம்ப ரத்தினசாமி அய்யாவுக்கும் உறவு இருக்குன்னு எனக்குத் தெரிந்து விட்டது. மத்ததையெல்லாம் ஊகித்துக் கொண்டேன். தன் பாட்டனைத் தேடிக்கிட்டு அனுசுயா அம்மாளின் குழந்தை ஒருநாள் இந்த ஊருக்கு வரலாம்னு நாம் பேசிக்கிட்டது உண்மையாயிடுச்சு. இந்த பொண்ணு நான் எதிர்பார்த்தபடி ஊருக்குள்ளே வந்த சமயம், வழியிலே மார்த்தாண்டத்தைப் பார்த்து ஒரேயடியா நடுங்கிகிட்டு நின்னப்போ, நல்லவேளை, நான் காரில் வந்து கொண்டு இருந்தேன். சட்டுனு அந்த பொண்ணு நமக்கு உறவு போல நடிச்சேன். காரில் ஏத்திகிட்டு வந்தேன். வேறே எங்கே அழைச்சுட்டு போவேன். அதனாலே உங்ககிட்டே வந்திருக்கேன். எனக்கு ஏதாவது உதவி செய்யணும்னு உங்களுக்கு ஆசை இருந்தால், நிலகாவை உங்களோட வீட்டிலே தங்க வச்சுக்கணும். யாராவது கேட்டால், இவள் எங்கள் உறவுப் பொண்ணு, உதவிக்காக அழைச்சுகிட்டு இருப்பதாக சொல்லணும். பிறகு மெதுவா நான் மத்தசங்கதிகளை கவனிக்கிறேன்"

"மார்த்தாண்டத்தின் விரோதத்தை விலக்கு வாங்கணும் என்கிறே?"

"உங்கள் சொந்தக்காரப் பொண்ணுன்னா அவர் கண்டுக்கமாட்டார்."

''நான் சொல்லிண்டுவேன். ஆனால், நீ சங்கதியைச் சொன்ன பிறகு எனக்கே நல்லா தெரிகிறது. அந்தப் பொண்ணு அப்படியே அனுசுயாவை உரிச்சு வச்சுட்டு வந்திருக்கே. மார்த்தாண்டம் கண்டுக்க மாட்டாரா?''

''அவர் ரத்தினசாமி அய்யாகிட்ட வந்து சேர்ந்தப்போ, அனுசுயா அம்மா கதை முடிஞ்சு போயிருந்தது. அதனாலே அவர் அந்த அம்மாவைப் பார்த்தது இல்லை. ஒரு நாள் அவர் உண்மையைத் தெரிஞ்சுக்குவார். ஆனாலும், அக்கா நீலாவிற்கு ஒன்னு இருக்கு இல்லையா? அது நடம் புரண்டு கிடப்பதைப் பார்த்துகிட்டு இருக்க எனக்கு மனமில்லை. திலகாவுக்கு உதவணும்னு ஆவலா இருக்கு.''

''தம்பி மேகா! உண்மையைச் சொல். அது ஒன்னுக்காக மட்டும்தான் நீ பாடுபட முன்வந்திருக்கியா, இல்லாட்டி?'' பூரணி கலகலவென்று சிரித்தாள்.

''அக்கா, நீங்கள் பொல்லாதவங்க!'' சொல்லிவிட்டு, மேகநாதன் தன் சகோதரியுடன் சேர்ந்து உரக்கச் சிரித்தான்.

அத்தனையும் கேட்டுக்கொண்டு நின்ற திலகாவின் நெஞ்சு தாங்க முடியாத மகிழ்ச்சியில் தீவிரமாக அடித்துக் கொண்டது.

டாக்டர் மேகநாதனுக்கு அவள் மீது ஏற்பட்டு இருக்கும் ஈர்ப்பு வெறும் அனுதாபமா? அல்லது?...

'எம்மா, இப்படி உள்ளே வா'' பூரணி இரைந்து குரல் கொடுத்ததும் திலகா கூடத்திற்குள் வந்தாள்.

சற்றுமுன் சந்தேகத்துடன் பார்த்த பூரணி, இப்போது மிகவும் திருப்தியுடன் திலகாவை ஆராய்ந்தாள்.

உயரமாகத் தங்கக் கொடி போல நின்ற அந்த பெண்ணின் முகத்திலே தாயின் சாயலும் தெரிந்தது. பாட்டனின் கூர் மூக்கும், அழுத்தமான பார்வையும் இருந்தன.



மொத்தத்தில் பெண் அழகாகவே இருக்கிறாள். அழகான பெண்களுக்கு உதவி செய்ய முன்வர மேகநாதனைப் போல கால்கட்டு இல்லாத இளம் காளைகளுக்கு கசக்குமா?

இத்தனை காலம் அப்பாவுக்கும் தாத்தாவுக்கும் இடம் கொடுத்துப் போதாது கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்த தம்பி மேகநாதன் தலை குப்புற விழுந்து விட்டிருக்கிறான்!

தனக்குள்ளே மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் சிரித்துக் கொண்டாள், பூரணி.

## 9

கணப்பொழுது போலத்தான் தோன்றியது. ஆனாலும் ஒரு வாரம் ஓடிவிட்டது.

இந்த குறுகிய காலத்திற்குள் பூரணியம்மாள் எப்படி மாறிப்போய் விட்டிருந்தாள்?

வீட்டுக்குள் நுழைந்த முதல் நாள் அவள் கண்களில் தெரிந்த கடுமை, திலகா யார் என்று புரிந்து கொண்டவுடன் எப்படி மாயமாகியது?

அதற்குப்பின் அவளுக்குத்தான் எத்தனை உபசரிப்பு! அவளால் நம்பவே முடியவில்லை.

''வாரத்துக்கு இரண்டு வாட்டியாவது எண்ணை தேய்ச்சு முழுகணும். பெண்களுக்கு கூந்தல் ஒரு பெரிய சொத்து. அதை நல்லாவே கவனிச்சுக்கணும்'' சொல்லி விட்டு, மயில் தோகை போல அவிழ்ந்து திலகாவின் முதுகில் பரவி விழுந்து கிடக்கும் முடியை மெல்லத் தொட்டுப் பார்ப்பாள், பூரணி தாயன்புடன்.

சமையல் அறை முன்னால் தாழ்வாரத்தில் விரித்து போட்டிருக்கும் பாய் மீது விட்டுத் தலைவி அருகே அமர்ந்துகொண்டு, தோட்டத்தில் இருந்து பறித்து வந்த வாழை இலையை கழுவித் துடைத்து வேலைக்காரி போட, நீர் தெளித்து விட்டு, பச்சைப் பசேலென்ற இலை மீது மல்லிகைப் பூப்போன்ற சோற்றையும் பதார்த்தங்களையும் சமையல்காரம்மா பணிவுடன் பரிமாற, கெட்டிப் பருப்பையும் நெய்யையும் கலந்து சோற்றுடன் பிசைந்து சுவைத்து சாப்பிடும் அனுபவம் நிலாவுக்கு மிகவும் அதிசயமாகத்தான் இருந்தது.

வெள்ளித் தம்ளரில் காய்ச்சிய பாலைக் கொண்டு வந்து படுக்கப்போகுமுன் அவள் முன் வேலைக்காரி முக்காலி மீது வைத்துவிட்டுப் போன பணிவும் அவளுக்கு ஒரு புதிய அனுபவம். பிறருக்குத் தொண்டு செய்து வாழப் பழகிக் கொண்டவள் அவள். இப்போது அவளுக்கு அரண்மனை மரியாதையும் உபசாரமும் கவனிப்பும் கிடைத்துக் கொண்டு இருந்தன. இதெல்லாம் உண்மையா அல்லது ஒரு நீண்ட கனவா?

கூடத்து எதிரே இருந்த படுக்கை அறையை அவளது உபயோகத்திற்காக பெருக்கி சுத்தம் செய்து பல நாளாக கவனிப்பாரற்றுக் கிடந்த தேக்கு மரக்கட்டிலில் படிந்து கிடந்த தூசியைத் துடைத்துவிட்டு பத்திரமாக சுற்றி வைத்திருந்த வெல்வெட் மெத்தையை விரித்து—சுத்தமான விரிப்பும் தலையணையும் போட்டு முதல் நாள் இரவு பூரணி உபசரித்ததை அவளால் நம்ப முடியவில்லை.

''கொசு உபத்திரவம் கொஞ்சம் இருக்கும். அதனாலே மின் விசிறியை தாராளமா போட்டுக்கலாம். மேல் சன்னல் திறந்திருக்கு. கீழ் சன்னல்களை திறக்காதே. காலம் கெட்டுக்கிடக்கு. நான் ஊஞ்சலில்தான் தூங்குகிற பழக்கம். இரண்டாம் கட்டுக்கு எழுந்து போகணும்னா என்னை எழுப்பு. தனியாபோக வேணாம்'' பலமுறை எச்சரித்து இருந்தாள்.



ரெயில் பயண அலுப்பு, மார்த்தாண்டம் தந்த அதிர்ச்சி, வயிறார உண்ட மயக்கம் எல்லாம் ஒன்று சேர, முதல் நாள் அவள் நன்றாகவே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலை எழுந்து பல் துலக்கிவிட்டு, வேலைக்காரி எடுத்து வைத்த வெந்நீரில் குளித்து உடை மாற்றிக் கொண்டு அவள் மெல்ல தோட்டப் பக்கம் சென்றாள்.

பூரணி அதற்குள்ளாகவே வேலைக்காரியிடம் அந்த தகவல்களைப் பரப்பி விட்டிருந்தாள். மெல்ல அது ஊர் பூராவும் பரவிவிடும் என்ற நம்பிக்கை.

பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டு இருந்த வள்ளி, அவளைப் பார்த்து புன்னகைத்தாள்.

''அம்மாவோட அண்ணாச்சி மகளாமே நீங்க, எம்மா இத்தனை காலமா எங்களையெல்லாம் விட்டுட்டு ஒளிஞ்சி இருந்தீங்க. பட்டணத்திலே படிச்சுகிட்டு இருந்தீங்களாம். இப்போதாவது அத்தையை மறக்காம வந்து அவங்களோடு கொஞ்ச காலம் இருக்க மனசு வந்துச்சே!'' என்று கேட்டாள் பரிவுடன். பாத்தியை கொத்திக் கொண்டு இருந்த தோட்ட வேலை ஆள் குப்புசாமி முண்டாசை அவிழ்த்துத் தோள் மேல் போட்டுக் கொண்டு நின்றான். வெற்றிலைக் காவி ஏறிய பல் தெரிய சிரித்தான்.

''அத்தையம்மா இனி இவங்களை லேசிலே விடுவாங்களா? அவங்களுக்கும் வயசாகுது. அண்ணாச்சி மகளை துணைக்கு வச்சுக்குவாங்க.''

''இல்லை குப்புசாமி. நான் நினைக்கிறது வேறே. நம்ப அம்மா பெரிய யோசனையோடுதான் அண்ணாச்சி மகளை இங்கே கூட்டி வச்சுகிட்டு இருக்காங்க. புரியுதா?''

அவர்களது பேச்சைக் கேட்டு முகம் சிவந்து,நெஞ்சு படபடக்க பதில் அளிக்கத் தெரியாது மவுனமாக நின்றாள்

திலகா. அவனது வரவைப் பற்றிய செய்தி விரைவில் தெருவுக்குள் பரவிவிட்டு இருப்பதையும் அவள் அறிந்து கொண்டாள்.

''என்ன பூரணி! எனக்கு இத்தனை நாள் சொல்ல லையே. தங்கச் சிலைபோல ஒரு பொண்ணு உன் அண்ண னுக்கு இருக்கிற சங்கதியைச் சொல்லியிருந்தால், என் பேரனுக்கு கட்டி வைக்க நான் பொண்ணுக்காக ஊர் ஊராத் தேடி அலைஞ்சிருக்க மாட்டேனே! ஆமாம், எந்த ஊரிலே இருக்காரு சொன்னே? மருதுநாயகம் பேட் டையா...மதுரை பக்கமா? பட்டணத்திலே படிச்ச பொண்ணா? கூடப்பிறந்தவங்க யாரும் இல்லையா? ஒரே ஒரு பொண்ணுதானே? அட கட்டிக்கப் போறவன் கொடுத்து வச்சவன்னு சொல்லு'' கூடத்திலே நிம்மதியாக கிழவி காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்தபடி கதை அளக்கத் தொடங்கிவிட்டாள்.

மேகநாதன் சொல்லிக் கொடுத்ததை, கிளிப்பிள்ளை போல கேட்டவர்களுக்கு எல்லாம் சொல்லிச் சொல்லி பூரணியின் வாய் வலித்தது.

பட்டணம் என்றாலே சங்கதி வேறு. அடுத்த வீட்டுக்காரரைப் பற்றி அக்கறை காட்டாது பல ஆண்டுகள் வாழ முடியும். கிராமத்து சங்கதி அப்படி அல்லவே. நல்லது பொல்லாதுக்கு நாலு பேரின் தயவு தேவை ஆயிற்றே. பூரணி தன் தம்பி சொல்லிக்கொடுத்த கதையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு இருந்தாள். கேட்டவர் களுக்கு அலுக்காது பதில் அளித்தாள்.

பெற்ற குழந்தையைப் போல தன்னுடன் ஒட்டி உறவாடு கிறாள் என்கிற காரணத்தாலோ அல்லது ரத்தினசாமி அய்யா வீட்டு வாரிசை தன் வீட்டில் வைத்து சோறு போடும் ஒரு பெரும் தகுதி கிடைத்ததே என்கிற மகிழ்ச்சியாலோ...... பூரணி திலகாவிடம் மிகவும் அன்போடு பழகினாள்.



மாலை வேளையில் முற்றத்துக் குறட்டில் அவளை அமரச்செய்து, தேங்காய் எண்ணெயைத் தொட்டு கூந்தலில் பூசி, அவளது நீண்ட முடியைத் தானே வாரி அழகாகப் பின்னிவிட்டாள். தோட்டத்தில் பூத்த சம்பங்கி, முல்லை, இருவாட்சிப் பூக்களை வேலைக்காரி தொடுத்துக் கொடுக்க, அதை திலகாவின் தலையில் தன் கையாலே சூட்டி அழகு பார்த்தாள்.

'என்ன இருந்தாலும் பரம்பரையின் பாதிப்பு விட்டுப் போகுமா? அனுசுயா சின்ன வயசிலே இருந்தாப் போல திறமாக, ஒட்டு மாம்பழம் போல எத்தனை அழகா இருக்கா? பெரிய மனிதர் வீட்டு இரத்தமாச்சே... மணலில் பிடுங்கி எடுத்த வள்ளிக்கிழங்காட்டமா...... ம்...... இவளை......' என்று தனக்குள்ளே பல முறை எண்ணி கற்பனைகளில் மகிழ்ந்தாள் பூரணி.

''காலைப் பிடிச்சுவிடட்டுமா அம்மா'' என்று அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு தன் பஞ்சு விரல்களால் கால்களை அமுக்கியபோது பரிவில் கரைந்து போனாள்.

''இத்தனை பணத்தை வச்சுகிட்டு பாவிக் கிழவன் இந்தக் குழந்தையையும் தாயையும் பட்டினியும் பசியுமாக தவிக்க விட்டிருக்கானே... திலகா தான் காயத்திரி இல்லத்தில் வளர்ந்த கதையைச் சொன்னபோது கண்ணீர் விட்டு மனம் புழுங்கிப்போனாள், பூரணி. கிழவர் ரத்தின சாமியை நினைத்தபோதெல்லாம் அவள் நெஞ்சு கொதித்தது.

''சே! அவரும் ஒரு மனிதரா?''

எது எப்படியானாலும் சரி, திலகா இந்த வீட்டைவிட்டு வெளியேறு முன் ஏதாவது ஒரு நல்ல முடிவுடன்தான் அவளை வெளியே அனுப்பவேண்டும். இதனால் ஊரில் நாலு பேரிடம் அவளுக்கு அவச் சொல் ஏற்பட்டாலும் சரி, வாழ வேண்டிய பெண்ணுக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுத்த புண்ணியம் அவளுக்குக் கிட்டினால் போதும். பலவாறு தனக்குள் திட்டமிட்டுக்கொண்டு இருந்தாள்.

இடையே மேகநாதன் இரண்டு நாளைக்கு ஒரு முறை வேறும் அங்கு வந்து அவர்கள் நல்லை விசாரித்துவிட்டுப் போய்க் கொண்டு இருந்தான். அவனது தன்மையை உத்தேசித்து திலகா... பூரணி அம்மாளை அத்தை என்று உறவு வைத்து அழைக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியிருந்தாள்.

அக்காவும் தம்பியும் ஊஞ்சலில் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கும்போது, திலகா சற்று ஒதுக்குப்புறமாக சுவர் ஓரமாக உட்கார்ந்துகொள்வது வழக்கம். ஆனாலும், மேகநாதனின் கண்கள் அவளைப் பலமுறைத் தேடுவதை அவள் உணர்ந்தாள்.

கண்ணும் கண்ணும் கலந்த போது, அவளுள் எழுந்த இன்ப எதிர்பார்ப்பினால் அவளுக்கு சில சமயங்கள் மூச்சுத் திணறியது. மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சியோ கட்டுக் கொள்ளாது பொங்கிப் புரண்டது.

ஒரு நாள் மாலை, கிராமத்தின் பிரபல அய்யனார் கோவிலுக்கு மாட்டுவண்டியில் திலகாவோடு பூரணி கிளம்பினாள்.

''நம்ப வீட்டுக் குலதெய்வம் இந்த அய்யனார் சாமி. அதனால் நீயும் வந்து கும்பிட்டுக்கோ. மனதிலே எதை யாவது நினைச்சு ஒரு மண்டலம் விரதம் இருந்து பிறகு அர்ச்சனைசெய்து வழிபட்டால், கேட்டவரம் கிடைக்கும்னு சொல்வாங்க. நீ நினைச்சுக்கொண்டு வந்து இருக்கிற காரியம் நிறைவேறணும்னு அய்யனாரை நல்லா வேண்டிக் கோ!'' சொல்லிக் கொண்டே தன் பீரோவைத் திறந்தாள்.

''அவர் போன பிறகு, நான் ரொம்ப சரிகை போட்ட சேலைகளை கட்டறதே இல்லை. இதெல்லாம் அப்படியே அலமாரியிலே மக்கிப்போகுது. இந்தா இந்த வாடாமல்லி வர்ண சேலையை உடுத்திட்டு வா'' என்று கனமான காஞ்சிபுரம் பட்டுச் சேலை ஒன்றை அவளிடம் நீட்டினாள்.



அதில் இருந்து 'கம்' என்று ரோஜா அத்தரின் மணம் முகத்தில் மோதியது. நல்லவேளை—புடவையின் பச்சைக் கரைக்கு ஒத்த பொருத்தமான ஒரு ஜாக்கெட்டு அவளிடம் இருந்தது.

மிதமான ஒப்பனையில், தலை நிறைய மல்லிகைப்பூவுடன், அந்த சேலையில் திலகா மிக அழகாகத் தெரிவதைக் கண்ட பூரணிக்கு ஒரே வியப்பு. தன் கழுத்தில் இருந்த ஒருகோர்த்து தங்க சங்கிலியைக் கழற்றி அவளுக்குப் பூட்டினாள். கன்னங் களைத் தடவி திருஷ்டி சொடுக்கினாள்.

''சும்மா சொல்லக் கூடாது. உன்னை இப்ப எவனாவது பெண் பார்க்க வந்தால், அப்படியே சொக்கிக்கிட்டு போய் விடுவான்'' கேலியாக சிரித்தாள்.

பூசையை முடித்துக்கொண்டு பிரசாதத் தட்டுடன் அவள் வெளியே வந்தபோது, திலகா அதிர்ந்து போய்விட்டாள்.

சரிகை மேல் துண்டு சில்க் சட்டை மீது ஆட நெற்றியில் பட்டையாகத் திருநீறும், இடையில் பட்டுக்கரை வேட்டியு மாக, பெரிய மனிதர் அலங்காரத்திலே கோவிலுக்குள் புகுந்த மார்த்தாண்டம், விழி பிதுங்கிவிட்டவள் போல அவளை திகைப்புடன் பார்த்துக்கொண்டு சிலையாக நின்று விட்டார்.

## 10

வலியச் சென்று பிறர் மனத்தாங்கலை விலைக்கு வாங்க விரும்பாதவள் பூரணி.

ஆனால், வந்த வம்பு சண்டையை லேசில் விடமாட்டாள். அப்படியொரு பிடிவாதம்.

இளம் வயதை எப்பொழுதோ தாண்டிவிட்டவள் என்கிற உரிமையிலும், ஊரில் செல்வாக்குடன் வாழ்கிற சில வீட்டுக்

காரர்களில் அவளும் ஒருத்தி என்கிற தெம்பாலும், ரத்தினசாமி அய்யாவிடம் கை கட்டி சேவகம் செய்கிற ஆட்களில் மார்த்தாண்டமும் ஒருவன் என்பதாலும், பூரணி அவனை திரும்பிப் பார்த்து புன்முறுவலித்தாள்.

''ரொம்ப நாளாச்சா அடையாளமே தெரியவில்லை. தம்பி இப்போ, முன்னைவிட சித்த பருமனா தெரியுது. நல்லாத்தானே இருக்கிறீங்க? பெரிய அய்யாவும் நலந் தானே?'' கேட்டபடி பிரசாதத் தட்டுடன் மார்த்தாண்டத்தின் அருகே நெருங்கினாள்.

''மாவிளக்குப் போட்டேன். இந்தாங்க பிரசாதம்!'' கூறிக்கொண்டே தட்டை அங்கிருந்த குத்துக்கல் ஒன்றின் மீது வைத்தாள். மாவிளக்கை மூடி இருந்த வாழை இலையில் ஒரு சிறு துண்டத்தைக் கிழித்து, மாவிளக்கில் இருந்து ஒரு பகுதியைப்பிட்டு அதன் மீது வைத்து சுருட்டி அவனிடம் நீட்டினாள்.

பணிவுடன் அதைப் பெற்றுக்கொண்ட மார்த்தாண்டத்தின் முகத்திலே பரவி நின்ற வியப்பு இன்னமும் அடங்கவில்லை.

பிரசாதத்தை அப்படியே விரலால் பிசைந்து உருட்டி வாயில் போட்டுக்கொண்டு இலையை அப்பால் போட்டு விட்டு, கோவில் முகப்பு கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டு இருந்த பையனிடம் கையை நீட்டினான்.

அவன் வாளியில் இருந்து ஊற்றிய தண்ணீரில் கையைக் கழுவியபடி கடைக் கண்ணால் மறுபடியும் அவளைப் பார்த்தார். திருவிழாவுக்கு அலங்கரிக்கப்பட்ட சிங்காரத் தேர் போல யார் இந்த பெண்?

''என்ன அப்படி திகைச்சுப் போய் பாக்கிறீங்க? அவ என் ஒண்ணுவிட்ட அண்ணாச்சியின் ஒரே மகள். பி. ஏ. படிச்சுட்டு சும்மாதான் வீட்டிலே இருந்தாள். துணைக்கு நமக்கு யாரும் இல்லையேன்னு அழைச்சு வச்சிருக்கேன். கல்யாணத்துக்கு நிக்கிறாள். நீங்கள் பெரிய இடத்திலே வேலை பார்க்கிறவங்க. நாலு பேரைத் தெரிஞ்சிருக்கும். ஒரு நல்ல இடமா பார்த்து சொல்லுங்கள்'' முத்துக்கள் போன்ற தனது வரிசை பற்கள் மின்ன மென்மையாக சிரித்தாள் பூரணி.

''உங்களுக்குத் தெரியாத இடமா எனக்கு தெரியப் போகுது. டாக்டர் அய்யாதான் பல பக்கமும் போய் வருகிறார். அவருக்கு பெரிய இடங்களில் பழக்கம் இருக்குமே. அவரைக் கேட்டால் சீக்கிரம் வழி வகுத்துத் தந்து விடுவார்.''

மார்த்தாண்டம் பதிலுக்கு உரத்த குரலில் சிரித்தான். அவனது பார்வை திலகாவை மீண்டும் வெட்டியது.

திலகா கையில் பிடித்து இருந்த தேங்காய், பழக் கூடையைப் பார்ப்பதுபோல தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

அன்று பஸ்சில் பார்த்ததில் இருந்து அவள் மார்த்தாண்டத்தைக் கண்டு மிகவும் அரண்டுபோயிருந்தாள். அருகே பாதை ஓரம் தெளிந்து ஓடிய வாய்க்காலில் சலசலத்த நீரின் மீது தாவி வந்து வீசிய காற்றைக்கூட தாங்க முடியாது மிரட்சியில் அவள் உடல் நடுங்கியது.

''பணக்கார அத்தை இருக்கிறீங்க. எல்லாத்தையும் சமாளிப்பீங்க'' சொல்லிவிட்டு கும்பிட்டபடி மார்த்தாண்டன் கோவிலுக்குள் சென்றுவிட்டான்.

பூரணியும் திலகாவும் திரும்ப வண்டிக்குள் ஏறிக்கொண்டனர். வழி நெடுகிலும் பூரணி ஏதும் பேசவில்லை.

அன்று இரவு உணவுக்குப் பின் கதவுகளை அடைத்து விட்டு கூடத்து ஊஞ்சலின் மீது சாய்ந்து கொண்டாள், பூரணி.

''கால்களைப் பிடிச்சுவிடட்டுமா அம்மா'' என்று திலகா அருகில் வந்து உட்கார்ந்து கொண்டதும், பூரணி விருக் கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

''திலகா! நீ இனிமேல் ... என்று உறவு வச்சுக் கூப்பிடப் பழகிக்கோ. மார்த்தாண்டம் கிட்டே தான் பேசினதைக் கேட்டுக்கிட்டு இருந்தே இல்லையா? இல்லாட்டி அவன் மேகநாதனுக்கும் உனக்கும் இடையே முடிச்சுப்போட்டு அசிங்கமா கதைகட்டி பரப்பி விடுவான். இப்போது மேகநாதன் உனக்கு சகோதரன் போல. புரியுதா? உனது காரியத்தை முடிக்க ஒரு சமயம் அவனோட நீ வெளி வாசலுக்குப் போக வேண்டியிருந்தால், ஊர் மக்கள் வித்தியாசமா நினைக்க மாட்டாங்க. உண்மை தெரிஞ்ச பிறகு உறவை மாத்திக்க நேரமா பிடிக்கும்?'' சொல்லிக்கொண்டே தாயன்புடன் அவளது பட்டுக் கன்னங்களை பரிவோடு தடவிக் கொடுத்தாள்.

''சரி அத்தை!'' மெல்லியதாக சிரித்த திலகா மகிழ்ச்சியுடன் அவளது கால்களை மெல்ல பிடித்துவிடத் தொடங்கினாள்.

''மார்த்தாண்டம் பத்து ஆண்டுக்கு முந்தி ஒரு சாதாரண வேலையாள். உன் தாத்தா கிட்ட நல்லாவே ஒட்டிக்கிட்டு வாழ கத்துக்கிட்டான். வரும்போது காட்டான் போல கொம்பு மீசையுமா எப்படியோ இருந்தான். ஏதோ கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிஞ்சவன். கணக்கு வழக்கிலே கெட்டிக்காரன். எடுபிடி ஆளாக அமர்ந்தவன் இப்போ உன் தாத்தாவின் அந்தரங்க காரியதரிசி ஆகிவிட்டான். கொம்பு மீசை போய் நறுக்கு மீசை ஆகிவிட்டது. சில்க் சட்டையும் பட்டுக்கரை வேட்டியும் சரிகை உத்திரியமாக ஆளே அடையாளம் தெரியாமல் மாறிப் போயிட்டான்.''

''மார்த்தாண்டத்துக்கு மனைவி குழந்தைகள் எல்லாரும் இங்கே தானே இருக்காங்க?''

''கல்யாணமே ஆகாத கட்டைன்னு கேள்வி, வயது நாற்பதுக்கு மேலே ஓடிப் போச்சு. அடிக்கடி தஞ்சாவூர் பக்கம் போய்விட்டு வருவது உண்டு. ஊரிலே நாலும் பேச ... அந்த அசிங்கத்தையெல்லாம் காதிலே போட்டுக்கிறதில்லை. அவனுக்கு கல்யாணம் ஆனால் என்ன ஆகாவிட்டால் என்ன? நமக்கு அது முக்கியம் அல்ல.''

''அத்தை! என்ன சொல்றீங்க?''

மறுபடியும் அவளது மென்மையான கன்னங்களை தன் கரத்தால் தடவிப் பார்த்தாள், பூரணி, ''கற்பனையிலாவது எனக்கு ஒரு அண்ணன், அவருக்கு இப்படி தங்கச்சிலையாட்டம் ஒரு பொண்ணு இருக்கேன்னு மகிழ்ச்சியா இருக்கு. என் கவலையெல்லாம் அந்த மார்த்தாண்டம் தான் சொன்னதை முழுதும் நம்பினதாகப் படலையே என்பதுதான்''

''அவர் என்னைப் பத்தி சந்தேகப் படுகிறார்னு நினைக்கிறீங்களா அத்தை'' திலகா திகிலுடன் கேட்டாள்.

''மார்த்தாண்டத்துக்கு சில விஷயங்கள் தெரியும். ரத்தினசாமி அய்யாவுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவளுக்கும் அவள் அப்பாவுக்கும் மனத்தாங்கல். அவளை தம் வாழ்க்கையில் இருந்து ஒழித்துவிட்டு ரத்தினசாமி அய்யா தனியாக, துணிவோடு வாழ்க்கை நடத்துகிறார். கூடப் பிறந்தவர் அவருக்கு யாரும் கிடையாது. அவருக்கு இருக்கும் பல இலட்சக்கணக்கான சொத்துக்கள் அத்தனைக்கும் நேர்முக வாரிசுன்னு கிட்டத்து உறவு யாரும் இல்லை. ஆனால், மார்த்தாண்டம், ரத்தினசாமி அய்யாவின் மகள் அனுசுயாவைப் பார்த்ததில்லை.''

''என் தாயார் இறந்து பல ஆண்டு ஆகின்றனவே. அதனால், அவருக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை!''

''ஆனால் செத்தவளுக்கு ஒரு பிள்ளையோ பெண்ணோ இருக்கலாம். ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் அந்த வாரிசு வந்து தாத்தாவின் சொத்துக்கு உரிமை கொண்டாடலாம் என்கிற பயம் அவருக்கு உண்டு.''

''திலகா! நீ இனிமேல் [illegible] என்று உறவு வச்சுக் கூப்பிடப் பழகிக்கோ. மார்த்தாண்டம் கிட்டே நான் பேசினதை கேட்டுக்கிட்டு இருந்தே இல்லையா? இல்லாட்டி அவன் மேகநாதனுக்கும் உனக்கும் இடையே முடிச்சுப்போட்டு அசிங்கமா கதைகட்டி பரப்பி விடுவான். இப்போது மேகநாதன் உனக்கு சகோதரன் போல. புரியுதா? உனது காரியத்தை முடிக்க ஒரு சமயம் அவனோட நீ வெளி வாசலுக்குப் போக வேண்டியிருந்தால், ஊர் மக்கள் வித்தியாசமா நினைக்க மாட்டாங்க. உண்மை தெரிஞ்ச பிறகு உறவை மாத்திக்க நேரமா பிடிக்கும்?'' சொல்லிக்கொண்டே தாயன்புடன் அவளது பட்டுக் கன்னங் களை பரிவோடு தடவிக் கொடுத்தாள்.

''சரி அத்தை!'' மெல்லியதாக சிரித்த திலகா மகிழ்ச்சி யுடன் அவளது கால்களை மெல்ல பிடித்துவிடத் தொடங்கி னாள்.

''மார்த்தாண்டம் பத்து ஆண்டுக்கு முந்தி ஒரு சாதாரண வேலையாள். உன் தாத்தா கிட்ட நல்லாவே ஒட்டிக்கிட்டு வாழ கத்துக்கிட்டான். வரும்போது காட்டான் போல கொம்பு மீசையுமா எப்படியோ இருந்தான். ஏதோ கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிஞ்சவன். கணக்கு வழக்கிலே கெட்டிக் காரன். எடுபிடி ஆளாக அமர்ந்தவன் இப்போ உன் தாத்தாவின் அந்தரங்க காரியதரிசி ஆகிவிட்டான். கொம்பு மீசை போய் தருக்கு மீசை ஆகிவிட்டது. சில்க் சட்டையும் பட்டுக்கரை வேட்டியும் சரிகை உத்திரியமாக ஆளே அடையாளம் தெரியாமல் மாறிப் போயிட்டான்.''

''மார்த்தாண்டத்துக்கு மனைவி குழந்தைகள் எல்லாரும் இங்கே தானே இருக்காங்க?''

''கல்யாணமே ஆகாத கட்டைன்னு கேள்வி, வயது நாற்பதுக்கு மேலே ஓடிப் போச்சு. அடிக்கடி தஞ்சாவூர் பக்கம் போய்விட்டு வருவது உண்டு. ஊரிலே நாலும் பேசு வாங்க. நான் அந்த அசிங்கத்தையெல்லாம் காதிலே போட்டுக்கிறதில்லை. அவனுக்கு கல்யாணம் ஆனால் என்ன ஆகாவிட்டால் என்ன? நமக்கு அது முக்கியம் அல்ல.''

''அத்தை! என்ன சொல்றீங்க?''

மறுபடியும் அவளது மென்மையான கன்னங்களை தன் கரத்தால் தடவிப் பார்த்தாள், பூரணி, ''கற்பனையிலாவது எனக்கு ஒரு அண்ணன், அவருக்கு இப்படி தங்கச்சிலையாட் டம் ஒரு பொண்ணு இருக்கேன்னு மகிழ்ச்சியா இருக்கு. என் கவலையெல்லாம் அந்த மார்த்தாண்டம் நான் சொன்னதை முழுதும் நம்பினதாகப் படலையே என்பதுதான்''

''அவர் என்னைப் பத்தி சந்தேகப் படுகிறார்னு நினைக் கிறீங்களா அத்தை'' திலகா திகிலுடன் கேட்டாள்.

''மார்த்தாண்டத்துக்கு சில விஷயங்கள் தெரியும். ரத்தினசாமி அய்யாவுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவளுக்கும் அவள் அப்பாவுக்கும் மனத்தாங்கல். அவளை தம் வாழ்க்கையில் இருந்து ஒழித்துவிட்டு ரத்தினசாமி அய்யா தனியாக, துணிவோடு வாழ்க்கை நடத்துகிறார், கூடப் பிறந்தவர் அவருக்கு யாரும் கிடையாது. அவருக்கு இருக்கும் பல இலட்சக்கணக்கான சொத்துக்கள் அத்தனைக் கும் நேர்முக வாரிசன்னு கிட்டத்து உறவு யாரும் இல்லை. ஆனால், மார்த்தாண்டம், ரத்தினசாமி அய்யாவின் மகள் அனுசுயாவைப் பார்த்ததில்லை.''

''என் தாயார் இறந்து பல ஆண்டு ஆகின்றனவே. அதனால், அவருக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை!''

''ஆனால் செத்தவளுக்கு ஒரு பிள்ளையோ பெண்ணோ இருக்கலாம். ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் அந்த வாரிசு வந்து தாத்தாவின் சொத்துக்கு உரிமை கொண்டாடலாம் என்கிற பயம் அவருக்கு உண்டு.''

''அவர் ஏன் பயப்படணும்?'' திலகா வியப்புடன் கேட்டாள்.

''முட்டாள்தனமா கேட்காதே. ரத்தினசாமி அய்யா வைக் கையில் போட்டுகிட்டு அவர் சொத்து முழுவதையும் இந்த ஆள் எப்பம் விடப் பார்க்கிறார். அதுக்குத் தடையா குறுக்கே வருகிறவங்களைத் தடுத்து விரட்டியடிக்க பல விதமாக முயலுவார்.''

''எனக்கு பயமா இருக்கு அத்தை'' என்ற திலகாவை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள், பூரணி.

''பயப்படாதே! இந்த வீட்டில் இருக்கும் வரை உன்னை ஒரு எறும்புகூட அண்டாது'' உறுதி மொழி சொல்லி ஆதரவுடன் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

நாத்தாவைப் பார்த்து பேசுவது அத்தனை சுலபமான காரியம் அல்ல என்றால் அவள் தொடர்ந்து அங்கு தங்கிப் பயன்?

நாகின் கடிதத்தைப் படித்துவிட்டு உணர்ச்சி வசப்பட்டு அவள், வேலையிலிருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு முன் பின் தெரியாத கிராமத்திற்கு தன்னந்தனியே புறப்பட்டு வந்தது எவ்வளவு முட்டாள்தனமான காரியம். நல்லவேளை டாக்டர் மேகநாதனும் அவரது சகோதரியும் ஆதரவு காட்டி அபயம் அளித்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவள் கதி?

இனம் விளங்காத ஒரு துயரம் நெஞ்சை அழுத்த ஓவென்று அழ வேண்டும் போன்ற வேதனையில் அவள் திணறிப் போனாள்.

# 11

மறுநாள் காலை விரைவாகக் குளியலை முடித்துக் கொண்டு வாயில் சேலை ஒன்றை அணிந்துகொண்டு, தலையை வாரி முடித்து அறைக்குள் வந்தாள், திலகா.

முதல் நாள் மாலை கோவிலில் இருந்து வந்ததும் களைந்து மடித்து கட்டிலின் முகப்பு சட்டத்தின் மேல் போட்ட அந்த பட்டுச் சேலையில் இருந்து லேசான அத்தர் மணம் அறையை வியாபித்துக்கொண்டு இருந்தது.

தலையை வாரி முடித்து பொட்டு வைத்துக் கொண்டு வெளியே வந்தவள், பட்டுப் புடவையையும் கையோடெடுத்து வந்தாள்.

பூரணி தோத்திரப் புத்தகத்தை படித்தவண்ணம் ஊஞ்சலில் அமர்ந்து இருந்தாள்.

''புடவையை பீரோவில் வச்சு பூட்டிடுங்க அத்தை!'' சொல்லியபடி அதை ஊஞ்சல் மீது வைத்தாள், திலகா.

''என் ஞாபகமா அதை நீயே வச்சுக்கோம்மா. உன்னை அந்த புடவையிலே பார்த்த பிறகு திரும்ப அதை வாங்கிக்க மனம் இல்லை. உன் நிறத்துக்கு மிகவும் பொருத்தமா இருந்தது. புடவை பழையதுதான். ஆனால், எனக்கு ரொம்ப கை ராசி உண்டு. பார்த்துக்கிட்டேயிரு, உனக்கு சீக்கிரம் கல்யாணம்கூடும்.'' பூரணி வேடிக்கையாகப் பேசி கண்களை சிமிட்டினாள்.

''நன்றி அத்தை! மகிழ்ச்சியில் துள்ளிக்கொண்டு அதை உள்ளே கொண்டு வைத்தாள்.

அதற்குள் வாசில் கதவு பலமாகத் தட்டப்படும் ஓசை கேட்டது.

''பட்டணத்தைப் போல, இப்போ கிராமத்து வீட்டு வாசல் கதவுகளையும் காலை வேளையிலேயே மூடிவைக்க வேண்டி வந்துவிட்டது. ஊர் அப்படிக் கெட்டுப் போயிருக்கு. அவர் இருந்த காலத்தில் வாசல் திண்ணையில் நாலு ஆம்பிள்ளைகள் பேசிக்கிட்டு இருப்பாங்க. நாள்பூரா கதவு திறந்து கிடக்கும். ம்... நிலகா...போய் பார் அம்மா.'' உத்திரவிட்டாள், பூரணி.

வாசிலை அடைத்திருந்த கனமான தாழ்ப்பாளை நீக்கி விட்டு இழுத்துத் திறந்தாள்.

தாடி மீசை தலையெல்லாம் தும்பைப் பூவாக வெளுத்திருந்த அந்த கிழவரை அவள் சட்டென்று ஒரே பார்வையில் கண்டுகொண்டு விட்டாள்.

அந்த வயதிலும் நடையில் மிடுக்கு குறையாது அவளைத் தாண்டிக்கொண்டு மேகநாதனின் தாத்தா குருமூர்த்தி உள்ளே வந்தார்.

பூரணி சட்டென்று ஊஞ்சலில் இருந்து இறங்கினாள்.

''வாங்க, உட்காருங்க'' உபசரித்தாள்.

''தேனம்மா...சீக்கிரம் தோசைக் கல்லை அடுப்பில போடு. பெரிய அய்யா இன்னிக்கு நம்மகூட காபி பலகாரம் சாப்பிட வந்து இருக்கார்'' ஓங்கி குரல் கொடுத்தாள், பூரணி.

''நீ காபி பலகாரம் தயாரிப்பதை கவனிக்கப் போ, நான் இந்தப் பொண்ணு நிலகாவோட கொஞ்சம் தனியா பேசணும்.'' குருமூர்த்தி அழுத்தமான குரலில் உத்திரவிட்டபடி சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.



உறவு என்று ஊரை ஏமத்துக்கொண்டு இங்கே எதுக்கு வந்திருக்கே? நீ யார்? என்று அதட்டிக் கேட்க வந்திருக்கிறாரோ?

அரண்டுபோய் நிலகா தயக்கமாக அவர் முன் வந்து நின்றாள்.

''நான் என் இளவயசிலே வக்கீலுக்கு படிக்க ஆரம்பிச்சேன். பாதியிலே படிப்பை விட்டுவிட்டு ஊர் திரும்பி விவசாயத்தை கவனிக்கத் தொடங்கினேன். ஆனாலும் சட்ட நுணுக்கங்கள் மேலே ஏற்பட்டிருந்த ஈர்ப்பு என்னை விட்டு போகலை. பத்திரிகைகளில் வரும் பிரபல வழக்குகளை மிகவும் ஆர்வமா படிப்பேன். இப்படித்தான் முடியும்னு எனக்குள்ளே ஒரு கணிப்பு ஏற்படும். அது அநேகமா சரியாக இருக்கும். உன்னைப்பத்தி என் பேரன் சொன்னான். விவரம் சரியா தெரிவிக்கலை. நீ வந்திருக்கிற காரியத்திலே ஏதாச்சும் சட்டப் பிரச்சினை எழுந்தால் அதை எப்படி கவனிக்கிறதுன்னு என்னால் ஆலோசனை சொல்ல முடியும்.''

கிழவரின் தாடி மீசை கண்டிப்பான குரலை கேட்டு அவள் பயந்துவிட்டிருந்தாள். ஆனால், அவரது பார்வையில் நிறைந்திருந்த கனிவு, உதட்டில் மலர்ந்த புன்னகை இரண்டும் தெம்பை ஊட்டவே அவள் ''நன்றி அய்யா'' என்றாள் உற்சாகமாக.

''இதுக்கு முன்னாடி நீ எங்கே இருந்தே?'' கேட்டு விட்டு, கிழவர் அவளை ஊன்றிப் பார்த்தார்.

''நூற்றுக்கணக்கான அனாதை குழந்தைகளுடன் நானும் ஒரு அனாதையாக ''காயத்ரி இல்லம்'' என்ற அனாதை இல்லத்தில் வளர்ந்து ஆளானேன். அதன் தலைவி சுகுணா என்னை தனிப்பட்ட முறையில் கவனிச்சிகிட்டாங்க. அவங்க உதவியால்தான் பட்டப் படிப்புக்குப் பின்னால்

அதற்குள் வாயில் கதவு பலமாகத் தட்டப்படும் ஓசை கேட்டது.

"பட்டணத்தைப் போல, இப்போ கிராமத்து வீட்டு வாசல் கதவுகளையும் காலை வேளையிலேயே மூடிவைக்க வேண்டி வந்துவிட்டது. ஊர் அப்படிக் கெட்டுப் போயிருக்கு. அவர் இருந்த காலத்தில் வாசல் திண்ணையில் நாலு ஆம்பிள்ளைகள் பேசிக்கிட்டு இருப்பாங்க. நாள்பூரா கதவு திறந்து கிடக்கும். ம்... திலகா...போய் பார் அம்மா." உத்திரவிட்டாள், பூரணி.

வாயிலை அடைத்திருந்த கனமான தாழ்ப்பாளை நீக்கி விட்டு இழுத்துத் திறந்தாள்.

தாடி மீசை தலையெல்லாம் தும்பைப் பூவாக வெளுத்திருந்த அந்த கிழவரை அவள் சட்டென்று ஒரே பார்வையில் கண்டுகொண்டு விட்டாள்.

அந்த வயதிலும் நடையில் மிடுக்கு குறையாது அவளைத் தாண்டிக்கொண்டு மேகநாதனின் தாத்தா குருமூர்த்தி உள்ளே வந்தார்.

பூரணி சட்டென்று ஊஞ்சலில் இருந்து இறங்கினாள்.

"வாங்க, உட்காருங்க" உபசரித்தாள்.

"தேனம்மா...சீக்கிரம் தோசைக் கல்லை அடுப்பில போடு. பெரிய அய்யா இன்னிக்கு நம்மகூட காபி பலகாரம் சாப்பிட வந்து இருக்கார்" ஓங்கி குரல் கொடுத்தாள், பூரணி.

"நீ காபி பலகாரம் தயாரிப்பை கவனிக்கப் போ, நான் இந்தப் பொண்ணு திலகாவோட கொஞ்சம் தனியா பேசணும்." குருமூர்த்தி அழுத்தமான குரலில் உத்திர விட்டபடி சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.



உறவு என்று ஊரை ஏய்த்துக்கொண்டு இங்கே எதுக்கு வந்திருக்கே? நீ யார்? என்று அதட்டிக் கேட்க வந்திருக்கிறாரோ?

அரண்டுபோன திலகா தயக்கமாக அவர் முன் வந்து நின்றாள்.

"நான் என் இளவயசிலே வக்கீலுக்கு படிக்க ஆரம்பிச்சேன். பாதியிலே படிப்பை விட்டுவிட்டு ஊர் திரும்பி விவசாயத்தை கவனிக்கத் தொடங்கினேன். ஆனாலும் சட்ட நுணுக்கங்கள் மேலே ஏற்பட்டிருந்த ஈர்ப்பு என்னை விட்டு போகலை. பத்திரிகைகளில் வரும் பிரபல வழக்குகளை மிகவும் ஆர்வமா படிப்பேன். இப்படித்தான் முடியும்னு எனக்குள்ளே ஒரு கணிப்பு ஏற்படும். அது அநேகமா சரியாக இருக்கும். உன்னைப்பத்தி என் பேரன் சொன்னான். விவரம் சரியா தெரிவிக்கலை. நீ வந்திருக்கிற காரியத்திலே ஏதாச்சும் சட்டப் பிரச்சினை எழுந்தால் அதை எப்படி கவனிக்கிறதுன்னு என்னால் ஆலோசனை சொல்ல முடியும்."

கிழவரின் தாடி மீசை கண்டிப்பான குரலை கேட்டு அவள் பயந்துவிட்டிருந்தாள். ஆனால், அவரது பார்வையில் நிறைந்திருந்த கனிவு, உதட்டில் மலர்ந்த புன்னகை இரண்டும் தெம்பை ஊட்டவே அவள் "நன்றி அய்யா" என்றாள் உற்சாகமாக.

"இதுக்கு முன்னாடி நீ எங்கே இருந்தே?" கேட்டு விட்டு, கிழவர் அவளை ஊன்றிப் பார்த்தார்.

"நூற்றுக்கணக்கான அனாதை குழந்தைகளுடன் நானும் ஒரு அனாதையாக "காயத்திரி இல்லம்" என்ற அனாதை இல்லத்தில் வளர்ந்து ஆளானேன். அதன் தலைவி சகுணா என்னை தனிப்பட்ட முறையில் கவனிச்சிகிட்டாங்க. அவங்க உதவியால்தான் பட்டப் படிப்புக்குப் பின்னால்

கிடைத்தது''

''எந்த ஆதாரத்தில் நீ இங்கே ரத்தினசாமி அய்யாவைத் தேடிக்கிட்டு வந்தே?''

''வேலையில் இருந்து ஓய்வடைஞ்ச கருணை அம்மா மரணம் அடைவதற்கு முன், என்கிட்ட ஒரு சந்தனப் பெட்டியைக் கொடுத்தாங்க. பெட்டியில் இருந்த கடிதங்களை படிச்ச பிறகுதான் நான் அனாதையில்லை என்கிற விவரம் தெரிஞ்சுகொண்டேன்'' பேசி முடிக்கு முன் அவள் குரல் துயரத்தில் உடைந்தது.

''நீ யார்னு உண்மையை விளக்கும் அந்தக் கடிதங்கள், உன்கிட்ட இப்ப இருக்கா அம்மா?''

''இருக்கு அய்யா!'' கூறிவிட்டு அறைக்குள்ளே விடுக்கென்று சென்று தான் கொண்டு வந்த தோள் பையை அலமாரியில் இருந்து எடுத்து திறந்து துழாவினாள். அந்த இரு கடிதங்களையும் படத்தையும் பத்திரமாகப் போட்டு வைத்திருந்த பிளாஸ்டிக் உறையை அப்படியே எடுத்துக் கொண்டு வந்து அவர் முன் வைத்தாள்.

குருமூர்த்தி தன் சட்டைப் பையில் இருந்த கண்ணாடிக் கூண்டை எடுத்தார். மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டு பிளாஸ்டிக் உறையை மெதுவாகத் திறந்து கடிதம் இரண்டையும் எடுத்து கவனமாகப் படித்தார். போட்டோவை உற்றுப் பார்த்தார். உடனடியாகத் திலகாவைப் பார்த்து பெருமூச்செறிந்தார்.

''இதுக்குத்தான் விதின்னு சொல்லுவாங்க. எத்தனையோ சிறப்பா வளர்ந்து ஆளாயிருக்கவேண்டிய பெண் ஒருஅனாதைக் குழந்தையா வளரும்படிஆயிடுச்சே. ஆனாலும் ரத்தினசாமி அய்யாவுக்கு அப்படி ஒரு முரட்டு பிடிவாதம் தேவையில்லை. கடிதங்கள் மூலம் நீ யார்னு நிரூபிச்சாலும்

இடையிருந்து குழப்பலாம். ரத்தினசாமி அய்யாவுக்கு நிச்சயம் ஏதாச்சும் ஆயிட்டா அவர் சொத்துக்கு ஏகப் போட்டி இருக்கும். நீதிமன்றத்தில் ஒருத்தர்மீது ஒருத்தர் வழக்கு தொடுத்துகிட்டு,காலத்தை வீணாக்கிகிட்டு இருப்பாங்க. இதில் நீதான் உண்மையான வாரிசு என்பதை ஆதியோட அந்தமாக, அனாதை ஆசிரமத்து சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்க வேண்டிவரும். ரொம்ப சிக்கல்கள் இருக்கு. அவ்வளவுவரைக்கும்கூட போகவிடாமல் உன்னை மார்த்தாண்டம் தடுக்க முடியும்...''

''அய்யா!'' என்று மெல்லிய குரலில் அழைத்த திலகா துயரத்தில் கண் கலங்கிப் போனாள்.

''எனக்கு சொத்து சுகம் எதும் தேவையில்லை. தாத்தாவை ஒரு தடவை பார்த்து நான்தான் உங்க பேத்தின்னு சொல்லும் வாய்ப்பு கிடைச்சாபோதும். நான் ஊர் பேர் இல்லாத ஓர் அனாதைன்னு சின்ன வயசிலே தவிச்ச தவிப்பெல்லாம் மறந்து என் மனம் ஆறுதல் அடையும். என் தாய் அறியாமல் செய்த பிழையை மன்னிக்கும்படி அவங்க சார்பில் ஒரு வார்த்தை கெஞ்சிக் கேட்டுக்க விரும்பறேன். அதைத் தவிர சொத்துக்கு ஆசைப்பட்டு நான் இத்தனை தூரம் புறப்பட்டு வரலை அய்யா. என்னைப் புரிஞ்சுக் கோங்க.'' துயரத்தில் விம்மிவிட்டாள் திலகா.

''அம்மா திலகா, அழாதே. ஆதியில் இருந்து ரத்தின சாமி அய்யா வீட்டிலே நடந்த விவகாரம் அனைத்தும் எனக்குத் தெரியும். ஒரு நல்ல மனிதனை மனமார காதலிப்பது குற்றமா? அந்த வகையில் உன்தாய் அனுசுயா தவறு எதும் செய்யவேயில்லை. தவறு செய்தது கிழவர் ரத்தினசாமி அய்யாதான். அவர்தான் உன்கிட்ட மன்னிப்பு கேட்கணும். உனக்கு இழைத்த கொடுமைக்கு,உன் தாய்க்கு இழைத்த துயரத்துக்கு தக்க வகையில் ஈடு செய்யணும். நானும் என் பேரனும் மனப்பூர்வமா உனக்கு உதவுவதாக முடிவு செய்து இருக்கிறோம். இந்த கடிதங்களையும் படத்

எனக்கு, அமராவதி விடுதியில மேற்பார்வையாளர் வேலை கிடைச்சது''

''எந்த ஆதாரத்தில நீ இங்கே ரத்தினசாமி அய்யாவைத் தேடிக்கிட்டு வந்தே?''

''வேலையில இருந்து ஓய்வடைஞ்ச கருணா அம்மா மரணம் அடைவதற்கு முன், என்கிட்ட ஒரு சந்தனப் பெட்டியைக் கொடுத்தாங்க. பெட்டியில் இருந்த கடிதங் களை படிச்ச பிறகுதான் நான் அனாதையில்லை என்கிற விவரம் தெரிஞ்சுகொண்டேன்'' பேசி முடிக்கு முன் அவள் குரல் துயரத்தில் உடைந்தது.

''நீ யார்னு உண்மையை விளக்கும் அந்தக் கடிதங்கள், உங்கிட்ட இப்ப இருக்கா அம்மா?''

''இருக்கு அய்யா!'' கூறிவிட்டு அறைக்குள்ளே விடுக் கென்று சென்று தான் கொண்டு வந்த தோள் பையை அலமாரியில் இருந்து எடுத்து திறந்து துழாவினாள். அந்த இரு கடிதங்களையும் படத்தையும் பத்திரமாகப் போட்டு வைத்திருந்த பிளாஸ்டிக் உறையை அப்படியே எடுத்துக் கொண்டு வந்து அவர் முன் வைத்தாள்.

குருமூர்த்தி தன் சட்டைப் பையில் இருந்த கண்ணாடிக் கூண்டை எடுத்தார். மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டு பிளாஸ்டிக் உறையை மெதுவாகத் திறந்து கடிதம் இரண்டையும் எடுத்து கவனமாகப் படித்தார். போட்டோவை உற்றுப் பார்த்தார். உடனடியாகத் திலகாவைப் பார்த்து பெருமூச்செறிந்தார்.

''இதுக்குத்தான் விதின்னு சொல்லுவாங்க. எத்த னையோ சிறப்பா வளர்ந்து ஆளாகியிருக்கவேண்டிய பெண் ஒருஅனாதைக் குழந்தையா வளரும்படிஆயிடுச்சே. ஆனாலும் ரத்தினசாமி அய்யாவுக்கு அப்படி ஒரு முரட்டு பிடிவாதம் தேவையில்லை. கடிதங்கள் மூலம் நீ யார்னு நிரூபிச்சாலும்



சில சங்கடங்கள் இடைபுகுந்து குழப்பலாம். ரத்தினசாமி அய்யாவுக்கு திடீர்னு ஏதாச்சும் ஆயிட்டா அவர் சொத்துக்கு ஏகப் போட்டி இருக்கும். நீதிமன்றத்தில் ஒருத்தர்மீது ஒருத்தர் வழக்கு தொடுத்துகிட்டு,காலத்தை வீணாக்கிக்கிட்டு இருப்பாங்க. இதில நீதான் உண்மையான வாரிசு என்பதை ஆதியோட அந்தமாக, அனாதை ஆசிரமத்து சான்றிதழ்கள் மூலம் நீநிரூபிக்க வேண்டிவரும். ரொம்ப சிக்கல்கள் இருக்கு. அவ்வளவுவரைக்கும்கூட போகவிடாமல் உன்னை பார்த்தாண்டம் தடுக்க முடியும்..''

''அய்யா!'' என்று மெல்லிய குரலில் அழைத்த திலகா துயரத்தில் கண் கலங்கிப் போனாள்.

''எனக்கு சொத்து சுகம் எதும் தேவையில்லை. தாத்தாவை ஒரு தடவை பார்த்து நான்தான் உங்கள் பேத்தின்னு சொல்லும் வாய்ப்பு கிடைச்சாபோதும். நான் ஊர் பேர் இல்லாத ஓர் அனாதைன்னு சின்ன வயசிலே தவிச்ச தவிப்பெல்லாம் மறந்து என் மனம் ஆறுதல் அடையும். என் தாய் அறியாமல் செய்த பிழையை மன்னிக்கும்படி அவங்க சார்பில் ஒரு வார்த்தை கெஞ்சிக் கேட்டுக்க விரும்பறேன். அதைத் தவிர சொத்துக்கு ஆசைப்பட்டு நான் இத்தனை தூரம் புறப்பட்டு வரலை அய்யா. என்னைப் புரிஞ்சுக் கோங்க.'' துயரத்தில் விம்மிவிட்டாள் திலகா.

''அம்மா திலகா, அழாதே. ஆதியில் இருந்து ரத்தின சாமி அய்யா வீட்டிலே நடந்த விவகாரம் அனைத்தும் எனக்குத் தெரியும். ஒரு நல்ல மனிதனை மனமார காதலிப்பது குற்றமா? அந்த வகையில் உன்தாய் அணுவளவு தவறு எதும் செய்யவேயில்லை. தவறு செய்தது கிழவர் ரத்தினசாமி அய்யாதான். அவர்தான் உன்கிட்ட மன்னிப்பு கேட்கணும். உனக்கு இழைத்த கொடுமைக்கு,உன் தாய்க்கு இழைத்த துயரத்துக்கு தக்க வகையில் ஈடு செய்யணும். நானும் என் பேரனும் மனப்பூர்வமா உனக்கு உதவுவதாக முடிவு செய்து இருக்கிறோம். இந்த கடிதங்களையும் படத்

தையும் என்கிட்ட வச்சுக்கிறேன். என்னை நம்பி கொடுப்பியா அப்பா.''

கண்களில் கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள், நிலகா. சட்டென்று குனிந்து அவரது பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டாள்.

''இனியாகிலும் நான் நிம்மதியா வாழணும்னு உங்க வாயாலே வாழ்த்துங்கள். மனம் நிறைந்து என்னை வாழ்த்துங்கள் அப்பா...'' உணர்ச்சிவசத்தில் தழதழத்தாள்.

''மனம்நிறைய வாழ்த்தறேன். எழுந்திரும்மா. உன்னை வாழ வைக்க வேண்டியது என் பொறுப்பு. வாழவச்சுப் பார்த்துட்டுத்தான் மறு வேலைன்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கேன் போதுமா!'' குருமூர்த்தி சிரித்தார்.

கிழவர் கண்களில் மிதந்த குறும்புத்தனம், வார்த்தைகளில் தொனித்த இரட்டை அர்த்தம் எல்லாம் அவளுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தந்தன.

அப்படியென்றால் மேகநாதனின் தாத்தாவுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டிருக்கிறது என்று பொருள். மனம் ஆனந்தத்தில் ஆர்ப்பரித்தது.

தோசை, கல்லின் மீது சுடும் நறுமணம் வீட்டை நிறைத்துக்கொண்டது.

''தேனம்மா நல்லா முறுவலா நெய் தோசை வார்த்துப் போடுவா. தேங்காய் சட்னிகூட நாக்குக்கு நல்லா காரமாவே இருக்கும். பசிக்குது...சாப்பிடலாமா?'' என்று கேட்ட கிழவர், அவளை அன்புடன் பார்த்தபடி எழுந்தார்.

குருமூர்த்தி அவளுக்கு உதவ தாமே முன்வந்து இருப்பது இரண்டாவது அற்புதம் என்று எண்ணி மகிழ்ச்சியுடன் அவர் பின் சாப்பாட்டு தாழ்வாரம் நோக்கி நடந்தாள் நிலகா.

## 12

பூரணி வீட்டுத் தெருவில் இருந்த அத்தனை வீட்டுப் பெண்களும் வந்து அவளது நலனை விசாரிப்பது போலா நிலகாவைப் பார்த்துவிட்டு போய்விட்டிருந்தனர்.

அன்று காலை அடுத்த தெருவில் இருந்து காமாட்சி அவளைப் பார்க்க வந்திருந்தாள்.

''பூரணி, காலை வேளையிலே வந்து கதவை தட்டுறேன்னு தப்பா நினைக்காதே. என் சின்ன பேரனுக்கு வாயெல்லாம் புண். மணத்தக்காளி இலையை அரைச்சு சாறு பிழிந்த பசும் பாலில் கலந்து கொடுத்தால் நல்லதுன்னு மாமியார் சொன்னாங்க. எங்க தோட்டத்து கீரை பூராவையும் பக்கத்து வீட்டுமாடு மேஞ்சுட்டு போயிடுச்சு. எனக்கு உன் வீட்டு தோட்டத்து நினைவு வந்தது. கொஞ்சம் கீரை கிள்ளிட்டு போக வந்தேன்.'' காமாட்சிக்கு மூச்சிறைத்தது.

''வாய்ப் புண்ணுக்கு நம்ப டாக்டர் கிட்டே ஏதாச்சும் மருந்து கேட்டு வாங்கிச் சாப்பிடறதுதானே! டாக்டருக்கு பணம் கொடுக்க பயந்துகிட்டு கை வைத்தியம் செய்கிறியா...'' சிரித்தபடி பூரணி அவளை அமரப்பணித்து வீட்டு வேலைக்காரியை ஏவி, அவள் கேட்ட மணத்தக்காளி கீரையைக் கொஞ்சம் பறித்து வரும்படி உத்தரவிட்டாள்.

ஊஞ்சலில் உட்கார்ந்த காமாட்சியின் கண்கள் ஆவலுடன் சுழன்றன.

''நிலகா, கொஞ்சம் தம்ளரில் மோர் எடுத்துகிட்டு வா. இந்த அத்தை காபி குடிக்கிற பழக்கம் இல்லை'' என்று குரல் கொடுத்தாள், பூரணி.

வெள்ளித் தம்ளரில் மோரை நிறைத்துக்கொண்டு வந்து வைக்கும் அருகே வைத்த அந்த பெண்ணை வியப்புடன் பார்த்தான், காமாட்சி. ''இத்தனைகாலம் இப்படி ஒரு அழகான பெண் உன் உறவிலே இருக்குன்னு எங்களுக்கெல்லாம் தெரியாது பூரணி!'' அதிசயப்பட்டபடி தம்ளரை எடுத்தான்.

''தானே, என் அண்ணாச்சி மகளை ஒரு வயசில பார்த்தது. அப்புறம் இப்பத்தான் பார்க்கிறேன். எனக்கே தெரியாம தேடு தேடுன்னு வளர்ந்து நிக்குது...'' சிரித்தாள், பூரணி.

''படிச்ச பொண்ணுன்னு கேள்விப்பட்டேன். கிராமத்திலே வந்து உட்கார்ந்துகிட்டிருந்தா என்ன லாபம். டவுன் பக்கத்திலே இருந்தா படிப்புக்கு தக்க வேலை எதாச்சும் கிடைக்கும். இப்பவெல்லாம் டவுன் மாப்பிள்ளைகள் வேலை செய்கிற பெண் வேணுங்கிறாங்களே. விலைவாசி அப்படி இருக்கு. ஆணும் பொண்ணும் சம்பாதிச்சால்தானே குடித்தனத்தை சீராக நடத்த முடியும்'' காமாட்சி விடாது கேட்டபடி மோரை வேகமாகப் பருகி தம்ளரை பலகை மீது வைத்தான்.

''திலகா, எனக்குக் கொஞ்சம் துணையா இருக்கட்டும்னு கூட்டிகிட்டு வந்து வச்சிருக்கேன். ஆனால், அவள் வந்த காரியமே வேறே?''

ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்ற திலகாவின் நெஞ்சு படபடத்தது.

இவங்க என்ன சொல்லப்போறாங்க. அவள் தன் பட்டணைப் பார்க்க வந்திருக்கிற சங்கதியை அம்பலப் படுத்தப் போறாங்களா?...

''தற்காலத்து கிராமத்து மக்களின் நடை—உடை—பழக்கங்களைப் பத்தி ஆராய்ச்சி பண்ணி ஒரு புத்தகம் எழுத



திலகா இங்கே வந்திருக்காள்.'' திகைசென்ற மனதில் தோன்றிய ஒரு கற்பனையை அவிழ்த்துவிட்டாள் பூரணி.

''அப்படி சொல்லு. பட்டணத்தில் படிச்ச பொண்ணு—இந்த மாதிரி கிராமத்திலே வந்து தங்கியிருக்க பிடிக்காதேன்னு நினைச்சேன்.''

''பூரணி! ஒரு அதிசயத்தை கவனிச்சியா...... நம்ப காலம்போல இப்ப இல்லே. இப்போ நிறைய பெண்கள் படிக்கிறாங்க— நிறையப் பேர் பத்திரிகைகளில்கூட எழுதறாங்க......ரொம்ப பெரிய ஆராய்ச்சி எல்லாம் செய்கிறாங்க. புத்தகம் வெளியிடறாங்க... அதுக்கு தனி பட்டங்கள் வாங்கிகிறாங்க...''

''ஆமாம். இப்போ பெண்கள் கல்வியிலே ரொம்ப முன்னேறி இருக்காங்க. கேட்க பெருமையா இருக்கு...நாம மறுபடியும் சின்ன பொண்ணாகி கல்லூரியில் சேர்ந்து படிக்க மாட்டோமான்னு மனது அடிக்குது...இந்தா கீரை... போதுமா. வேணுங்கிறப்போ வந்து நீ பறிச்சுக்கோ... காரமா சமைச்சுப் போடாதே... வாய்ப்புண் சீக்கிரம் ஆறாது...'' கூறியபடி ஒரு நார்கொட்டின் பக்கத்தில் வேலைக்காரி கொண்டுவந்த கீரையை வைத்து கருட்டி அவளிடம் நீட்டினாள்.

வந்தவள் போனதும் கதவை சாத்திக்கொண்டு வந்தாள் பூரணி.

'நான் ஒரு நிமிடம் பயந்தே போயிட்டேன் அத்தை'' என்றாள் திலகா.

''என்கிட்ட இருக்கிற வரைக்கும் நீ யாரைக்கண்டும் எதுக்கும் பயப்படத் தேவையில்லை......'' என்று புன்முறுவலித்தாள் பூரணி.

அவர்கள் தெருவில் வசித்தவர் வீட்டு கல்யாணம் அந்த வெள்ளிக்கிழமை வர் சிவன் கோவில் கல்யாண மண்டபத்தில்

நடந்தது. தினமும் யாராவது வீட்டுக்கு வந்து திலகாவைப் பார்க்க விரும்பும் ஆவலுக்கு ஒரு வழியாக முற்றுப் புள்ளி வைக்க விரும்பினாள் பூரணி.

மறுபடியும் தனது சேலைகளில் ஒன்றை எடுத்து உடுத்திக்கொள்ள திலகாவிற்குக் கொடுத்து, சில நகைகளை இரவலாகத் தந்து உதவினாள்.

மணமேடையில் இருந்த பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்க்காது வந்தவர்களில் அநேகர் திலகாவைத் தான் அதிசயமாகப் பார்த்தனர்.

''பூரணி அம்மாவின் உறவுப்பெண்ணாம்—ஏதோ புத்தகம் எழுத சங்கதிகள் விசாரிக்க நம்ம கிராமத்துக்கு வந்திருக்காம்......'' கதை நெருப்பாக விரைவில் மண்டபம் முழுவதிலும் பரவிப்போனது.

கல்யாண... சாப்பாடு முடிந்ததும் மாட்டு வண்டியில் திரும்பிய பூரணி வீட்டுக்குள் நுழையுமுன்...வேலைக்காரி வள்ளி வம்பை எடுத்துப்போட்டாள்.

''நீங்கள் கல்யாணத்துக்குப் போயிருந்தப்ப இங்கே மார்த்தாண்டம் வந்திருந்தார்.''

திலகா பயத்தில் பதறிப் போனாள்.

''எதுக்காக வந்தாராம்...?'' பூரணி திகைப்பை மறைத்துக் கொண்டு அதட்டலாகக் கேட்டாள்.

''நான் உங்கள் அறையை சுத்தப் படுத்திகிட்டு இருந்தேன். தேனம்மாதான் கதவைத் திறந்தாள்.''

''நான் வீட்டில் இல்லேன்னு நினைச்சுகிட்டு அவங்க ரெண்டு பேரும் பேச ஆரம்பிச்சதும் நான் மூச்சை பிடிச்சுக்கிட்டு மூலையில் ஒண்டிக்கிட்டு ஒட்டுக்கேட்டேன். மார்த்தாண்டம் மெல்லிய குரலில் தான் பேசினார்—ஆனாலும் எனக்கு டாண் டாண்ணு கேட்டுது.''



''என்ன பேசினாங்க... அதை முதலில் சொல்லு...'' தன் ஆவலை அடக்கியபடி பூரணி அதிகாரமாகக் கேட்டாள்.

''நிசமா இந்த திலகா பூரணியம்மாவோட அண்ணாச்சி மகளா? உண்மையா அந்த பொண்ணு ஒரு புத்தகம் எழுதவா இங்கே வந்திருக்கு? அந்த டாக்டர் மோகநாதன் இங்கே அடிக்கடி வாரார்? அவங்கள்ளாம் என்ன பேசிக்கிறாங்க? இதையெல்லாம் நீ பார்க்காதுபோல பார்த்து எனக்கு சொல்லணும், அப்படின்னுட்டு புது ஐம்பது ரூபாய் நோட்டை தேனம்மாகிட்ட கொடுத்ததை கதவு இடுக்கு வழியாக நான் பார்த்தேன்.''

''அவள் லபக்குன்னு பணத்தை வாங்கித் தன் சுருக்குப் பையிலே போட்டுக்கிட்டு, ''அப்படியே செய்றேன், அய்யா''ன்னு கும்பிடு போட்டாள். என் உடம்பெல்லாம் பதறிப்போச்சம்மா.''

''வள்ளி, நீ என்ன நினைக்கிறே?'' சிரித்தபடி கேட்டாள், பூரணி.

''என்னம்மா நினைக்கிறதுக்கு இருக்கு. நீங்கள் பெரிய வீட்டு அம்மா. பொய்யும் பித்தலாட்டமும் பேசி உங்களுக்கு என்ன ஆகணும்? மார்த்தாண்டம் அறிவு கெட்டுபோய் எதுக்காக இப்படி விசாரிக்கிறாரோ தெரியாது!''

''உன்கிட்ட சொல்றேன், வள்ளி நல்லா கேட்டுக்கோ, நீ ரொம்ப விசுவாசமான வேலைக்காரி. அதனாலே சொல்றேன். திலகா, என் அண்ணாச்சி மகள்தான். அவளைப் பத்தி தப்பும் தவறுமா யாராவது பேசினால், நான் பொல்லாதவள் ஆகிடுவேன்'' சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

பட்டுச் சேலையைக் களைந்துவிட்டு, நூல்சேலை அணிந்துகொண்டு திரும்பிய திலகாவின் முகத்தில் கலவரம் தெரிந்தது.

''அத்தை!'' என்றவள் மேலே பேச முடியாது திகிலுடன் வார்த்தைகளை விழுங்கினாள்.

''வேலைக்காரர்களே உளவாளிகளாகி, வீட்டு நடப்புகளை வெளியே சொல்லுபவர்கள் என்கிற தந்திரத்தை மார்த்தாண்டம் கையாளப் பார்க்கிறான். அவனை எப்படி முறியடிக்கிறதுன்னு எனக்குத் தெரியும். நீ கவலைப் படாதே'' என்றாள் பூரணி.

ஆனாலும், திலகாவின் மனம் கவலையில் மூழ்கிப் போனது.

பூரணி எத்தனை விளம்பரப்படுத்தியும் மார்த்தாண்டம் நம்பவில்லை. திலகாவைப்பற்றி துப்பு துலக்கத் தொடங்கியிருக்கிறார். உண்மை தெரிந்துவிட்டால், அவளை ஒழித்துக் கட்டவும் அஞ்சமாட்டார். அவருக்கும் அவளுக்குமிடையே பணம் கொஞ்சமாகவா கொட்டிகிடக்கிறது? மார்த்தாண்டத்தின் கடுமை தெரிந்த கண்களை நினைத்த மாத்திரம் அவள் மேனி பயத்தில் பதறியது.

## 13

அன்று காலை பூரணி உரத்த குரலில் எல்லோருக்கும் உத்திரவுகளைப் பிறப்பித்துக் கொண்டு இருந்தாள்.

''வள்ளி! உன் வேலைகளை சீக்கிரம் முடிச்சுட்டு நீ வீட்டுக்குப் போகலாம். நாங்கள் இன்னிக்கு தஞ்சாவூர் வரை காரில் போய் வர வேண்டியிருக்கு.''

''தேவம்மா! நீ பகல் சாப்பாடு தயார் செய்யத் தேவையில்லை. காபி பலகாரத்துக்கு பிறகு நாங்கள் புறப்பட்டால் திரும்புவதுக்குள்ளே இருட்டிப் போயிடும். பகல் சாப்பாட்டை அங்கே ஓட்டலில் பார்த்துக்குவோம்.''



''திலகா, சீக்கிரம் புறப்படத் தயாரா இரும்மா... நல்ல வேளை, மேகா காரை எடுத்துக்கொண்டு வந்து நமக்கு உதவுவதா வாக்கு தந்து இருக்கான். இல்லாட்டி பஸ் பிடிச்சு போய் வருவதற்குள் பெரும்பாடு ஆகிவிடும்.''

உத்திரவுக்குப் பின் அந்த வீட்டில் வேலைகள் துரிதமாக நடைபெற்றன.

பூரணி குளியலை முடித்துக்கொண்டு நெற்றி மீது திருநீறுடன் வெள்ளை காஞ்சிபுரம் பட்டில் வெளியே புறப்படத் தயார் ஆகிவிட்டிருந்தாள். திலகாவும் சீக்கிரமாக தன் அலங்காரத்தை முடித்துக் கொண்டாள்.

''நீ என்ன பொண்ணும்மா, பட்டணத்து நாகரிகத்தை நினைச்சுகிட்டு காதிலே போட்டிருந்த தோட்டையும் கை வளையல்களையும் கழட்டி வீட்டிலே விட்டுட்டு வந்துட்டியாம். அண்ணாச்சி தன் சிநேகிதர்கிட்டே கொடுத்து அனுப்பியிருக்கார். அவர் தஞ்சாவூரிலே தன் சிநேகிதர் வீட்டிலே தங்கியிருக்காராம். நாம நேரே போய் நகைகளை வாங்கிக்கணும்னு மேகாவுக்கு கடிதம் போட்டிருக்காராம். ஒரு வழியில் அதுவும் நல்லதாப் போச்சு. உன் காது தோடும் கை வளையலையும் அண்ணாச்சி பார்த்திடச் சொல்லியிருக்கார்.'' எட்டிப் பார்த்த தேவம்மாள் காதுகளில் படும்படி அதட்டலாகச் சொன்னாள் பூரணி.

பூரணி, ஏதோ ஒரு திட்டத்துடன்தான் இந்த நாடகத்தை துவக்கியிருக்கிறார்கள் என்பதை திலகா சட்டென்று புரிந்து கொண்டாள்.

''மன்னிச்சுடுங்க அத்தை! ஊரை விட்டு கிளம்பும் போது எனக்குப் பல வேலைகள். அந்த குழப்பத்திலே என்ன செய்தேன்னு நினைப்பில்லை.'' சாமர்த்தியமாக பதில் அளித்தாள், திலகா.

பெண்கள் இருவரும் பின்னால் ஏறிக்கொள்ள மேகநாதன் காரைக் கிளப்பினான்.

தெருச்சாலையை அறுத்து ... அருகே காரை ஒரு பக்கம் நிறுத்திவிட்டு, அவன் பின்னால் திரும்பி திலகாவிடம் சொன்னான். ''நீங்கள் வந்திருக்கிற காரியம் சீக்கிரம் முடியாது போல தோணுது. உங்கள் விடுதித் தலைவிக்கு நீங்கள் உடனடியா ஒரு கடிதம் எழுதி போடணும். சம்பளம் இல்லாமல் இன்னும் இரண்டு மாசம் லீவு தேவை. அவசரம்னு எழுதிப் போடுங்கள். நாம இன்னிக்கு பகல் தஞ்சையில் உள்ள என் நண்பர் ஒருத்தர் வீட்டில் சாப்பிடப் போகிறோம். அவர் வீட்டு முகவரியை கொடுத்து விடுங்கள். வாரத்துக்கு இருமுறை நான் தஞ்சைக்குப் போவேன். பதில் வந்ததும் எடுத்து வந்து உங்கள் கிட்ட கொடுக்க முடியும்.''

''தம்பி மேகா ஏன் இப்படி சொல்லுது புரியுதா? கடிதம் உன் விடுதி தலைவி கிட்டேயிருந்து நம்ப ஊருக்கு வந்தால், ஒருசமயம் தபால்காரரை மடக்கி அதை எடுத்துக்க முயற்சிப் பான் மார்த்தாண்டம். அப்படிப்பட்ட எமகாதன் அவன்'' என்று பூரணி குறுக்கிட்டு பேசினாள்.

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் திலகா. மார்த் தாண்டத்தைப் பார்த்த நாளில் இருந்து அவளுள் ஏற்பட்டு இருந்த அந்த நிகிலை ஏனோ அவளால் இன்னும் உதற முடியவில்லை. அந்த மனிதனால் ஏதோ ஒரு ஆபத்து நேரப் போகிறது என்று இனம் விளங்காத ஒரு அச்சம் சதா ஆட்டிப் படைத்துக்கொண்டு இருந்தது!

''நான் இங்கே வரக் கிளம்பினபோது இப்படி எல்லாம் எதிர்ப்பு ஏற்படும்னு கொஞ்சமும் நினைக்கவில்லை. நேரே வந்து தாத்தாவைப் பார்த்துட்டு, ஆசி வாங்கிட்டு, அம்மாவின் கடிதாசியை அவர் கிட்ட சேர்த்துட்டு சீக்கிரம் கிளம்பிடலாம்னு நினைச்சேன். முன்பின் தெரியாத ஊராச் சேன்னு கொஞ்சம் பயமா இருந்தது. பெரிய மனிதரு அம்மாவின் கடிதம் சொல்லுதே. பார்க்க சிரமம் ஏற்படு மோன்னு திகைச்சேன்...!''

''பல இலட்சங்கள் சம்பந்தப்பட்ட சொத்து விவகாரம் இடையே இருக்கும் போது, உங்களை அவ்வளவு சுலபமா தாத்தாவைப் பார்க்க விட்டுவிடுவாங்களா? அதோ பாருங்கள்!'' என்று சலசலவென்று ஓடிய வாய்க்காலோடு பச்சை பசேல் என்று விரிந்து கிடந்த வயல்களை மேகநாதன் அவளுக்கு சுட்டிக் காட்டினான்.

ஐந்தடுக்கு, ஏழடுக்கு என்று எழும்பிக் கொண்டுபோன கட்டடக் குவியல்களையே பார்த்து அலுத்துப் போன கண் களுக்கு...பசுமைப் பாய் விரித்த அந்த கிராமப்புறத்து அழகு மனதை மயக்குவதாகத்தான் இருந்தது. காலைச் சூரிய ஒளியில் காற்றோடு விளையாடிய நெற்பயிர்களின் பச்சை வண்ணங்களில்தான் எத்தனை விதமான மாற்றங்கள்?

''கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சையாகத் தெரியுதே, அத்தனை வயல்களும் உங்கள் பாட்டனுடையது. உச்சவரம்புக்கு உட்பட்ட அளவு நிலங்களை வச்சகிட்டு மீதமானதை அந்த காலத்திலேயே நல்ல விலைக்கு விற்று பணத்தை பல வியாபாரங்களிலும் முதலீடு செய்துவிட்டார். காசு சம்பந்தப்பட்டதிலே ரொம்பக் கெட்டிக்காரர். நஞ்சை, புஞ்சை, பயிர்கள் காய்கறித் தோட்டம்,பூந்தோட்டம் என பல வகையாக பிரிச்சு வச்சட்டார். விளைச்சல்களை கவனிக்க தக்க ஆட்களையும் வச்சிருக்கார். தஞ்சை நகரத்திலே இருக்கும் பெரிய பாத்திரக் கடை ஒன்றில் பாதி பங்குதாரர். உரக் கம்பெனி, இரும்புக் கம்பி மொத்த வியாபாரக் கடை, ஜவுளிக் கடைன்னு பலதிலும் இவருக்கு பங்கு உண்டு'' என்றான், மேகநாதன்.

''மத்ததை விட்டு விட்டியே, தம்பி! இதுகளைத் தவிர, வங்கியிலே இலட்சக்கணக்கில் பணம் வட்டிபோட்டுகிட்டு கிடக்கு. பாட்டியம்மாளின் நகைகள் வங்கி லாக்கர் கொள்ளாமல் நிறையுது. இத்தனையையும் வச்சுகிட்டு... மனிதன் பெத்த மகனைப் பட்டினி போட்டு கொன்னானே, அதை நினைச்சா எனக்கு ஆறமாட்டேங்குது!'' பூரணி சிறிது கோபமாகப் பேசினாள்.

செல்வத்தின் உச்சநிலையில் திலகாவின் தாய் வறுமையில் வாடினது மகா கொடுமை. அதனிலும் கொடுமை, அவளை அனாதையாக ஆசிரமத்திலே வளரவிட்டு திரும்பிப் பாராதிருந்த ஓர் அரக்கத்தனம். இத்தனை கடுமையான ஒரு மனிதனை அவள் அவசியம் சந்திக்க வேணுமா? அவளுக்குத் தேவையில்லை. ஆனால், அவள் அன்னையின் ஆணையை எப்படிப் புறக்கணிக்க முடியும்? தன்னுள் ஒரு கணம் துயரத்தில் கலங்கிப் போனாள், அவள்.

''எனக்கு வேறொன்று விடுப்புத்தர விடுதி தலைவி மறுத்து, அந்த வேலை போய்விட்டால்...!''

''வேறு வேலை தேடுகிறது!'' என்று கூறியபடி காரைச் செலுத்தினான், மேகநாதன்.

''வேறு வேலை அத்தனை சுலபமா கிடைக்குமா அத்தை!'' என்று கேட்ட திலகாவின் கன்னத்தை பூரணி இலேசாகக் கிள்ளினாள்.

'பெரும்பாலான பெண்களுக்கு கிடைக்கும் வேலை உனக்கு சுலபமா கிடைச்சிடும். படிச்சிருக்கே. அழகா இருக்கே. கட்டிக்கிறவனுக்கு சக்கலா செய்யும், ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டு, குடும்பத் தலைவியாக வீட்டை நிர்வகிக்கிறதும் பெண்களுக்கு சமூகம் தந்திருக்கும் ஓர் உயர்ந்த வேலைதானே! மனைவி என்கிற தகுதி, ஒரு பெரிய அலுவலக அதிகாரியின் பதவிக்கு ஒப்பாகும். அந்த பதவி உனக்குக் கிட்டும்படியா செய்ய வேண்டியது இந்த அத்தையுடைய பொறுப்புன்னு வச்சுக்கோ. கவலைப் படாதே'' என்றாள், பூரணி.

காரின் முன் பக்கத்து கண்ணாடி வழியே தன்னை ஆவலுடன் பார்த்த மேகநாதனின் கண்களை சந்தித்த திலகாவின் நெஞ்சு இன்பத்திலே பூரித்துப் போனது.



ஜில்லென்று காது மடல்கள் சூடாகி, உடல் முழுவதும் இன்பச் சிலிர்ப்பில் நடுங்குவதை உணர்ந்தாள்.

பாட்டன் சந்திரசாமி அய்யாவைப் பார்க்க வந்தது எப்படித் தவறாகும்? மேகநாதனைப் போன்ற ஒரு பண்பான, அன்பான மனிதனின் அன்பு அவளுக்குக் கிட்டியிருக்கிறதே!

பூரணியம்மாளைப் போன்றதொரு கண்ணியமான பெண்மணியின் ஆதரவுக்கும் ஆசைக்கும் அவள் பாத்திரமாகிவிட்டது பெரும் பாக்கியம் அல்லவா? பூடகமாக அவர்கள் பேசுவதின் பொருள் அவளுக்கா விளங்கவில்லை!

''அத்தை!'' என்று அன்பாக அழைத்தபடி அவளது தோள்மீது தன் பட்டுக் கன்னத்தை பதித்துக் கொண்டாள் திலகா.

பூரணிக்கும் பார்த்த நாளில் இருந்து திலகாமீது ஏற்பட்டிருந்த பாசம் இப்போது பெருத்த சர்ப்பாக வளர்ந்துவிட்டிருந்தது. தன் ஆசை மகளை அணைத்துக் கொள்வது போல் அவளை இறுகக் கட்டிக்கொண்டு, முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

அன்று மாலை அவர்கள் வீடு திரும்புவதற்குள் நன்றாக இருட்டி விட்டது.

தனது உபயோகத்திற்கு அவர்கள் வீட்டில் கொடுத்திருந்த மர அலமாரியைத் திலகா திறந்தபோது ஒரு மாறுதலைக் கவனித்தாள்.

அடுக்காக அவள் வைத்திருந்த ஆடைகள் இடம் மாறி விட்டிருந்தன. அவளது அலமாரியைத் திறந்து, எதையோ தேட எடுத்துக்கொண்ட முயற்சிதான் அந்த தடுமாற்றத் திற்குக் காரணம்.

அது யாராக இருக்கும்?

தேனம்மாவா?

அலமாரியில் அவன் தேடி எடுக்க நினைத்தது பணமா, நகையா? வேறு என்னத்தை அவன் தேட நினைத்து, திறந்து குடைந்து பார்த்திருக்கிறான்?

இது அவனாகச் செய்த காரியமா? அல்லது...?

## 14

தஞ்சையில் இருந்து திரும்பியபோது நிலாவிடம் பொங்கிப் புரண்ட அத்தனை உற்சாகமும் கட்டுக்கொள்ளா மகிழ்ச்சியும் அந்த அலமாரியைத் திறந்ததும் சப்பென்று அடங்கிவிட்டது.

அதற்குப் பதில் அடிமனதில் இருந்து ஒரு திகில் பேயே எழுந்து நெஞ்சைக் கவ்விக்கொண்டு அச்சுறுத்தியது.

இது மார்த்தாண்டத்தின் தூண்டுதலால் நடந்த வேலையோ? பாவி! ஒரு கணம்கூட அவளை நிம்மதியாக— ஆனந்தமாக இருக்க விடமாட்டான் போலிருக்கிறதே?

அன்றைய பொழுது முழுவதும் அவள் மனதைக் கவர்ந்த மேகநாதனுடன் பேசி சிரித்து மகிழும் ஒரு வாய்ப்பு கிடைத்தது.

தஞ்சையை அடைந்ததும் முதல் வேலையாக பூரணி அவளை அங்கிருந்த ஒரு பிரபல நகைக் கடைக்குள் அழைத்துச் சென்றாள். தன் கைப் பையில் எடுத்து வந்த சில பழைய நகைகளைப் போட்டு அதன் எடைக்கான தொகையில் நிலாவின் கை அளவிற்கு இரண்டு தங்க வளையல்களும், கழுத்துக்கு ஒரு முத்துமாலையும், காதுக்கு தோடும் வாங்கினாள்.



"அத்தை! இதெல்லாம் எதுக்கு" என்று அவள் மறுப்பு தெரிவித்தபோது, "எதுக்குன்னு பிறகு விளக்கமா சொல்றேன். இப்போது வாங்கி உடம்பிலே போட்டுக்கோ" என்று செல்லமாக அதட்டினாள் பூரணி.

பிறகு, அருகில் இருந்த துணிக் கடையில் புகுந்து காஞ்சிபுரம் பட்டுச் சேலை ஒன்றும், சில்க் சேலை ஒன்றும் வாங்கினாள்.

"அத்தை! என்னை ரொம்ப கடனாளி ஆக்கறீங்க. இவைகளுக்கு உண்டான பணத்தை திருப்பிக் கொடுக்க என்னால் முடியாதே?" என்று அவள் நன்றி உணர்வில் திணறியபோது, பூரணி சிரித்துவிட்டாள்.

"அன்னிக்கு உன்னைப் பார்க்க வந்த மேகநாதனுடைய தாத்தாவின் யோசனை இது. எங்கள் குடும்பத்து உறவுப் பெண் என்று என்னை நாலுபேருக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம். உன் கையில் பிளாஸ்டிக் வளையலும் காதில் கவரிங் தோடும் போட்டிருக்கிறதைப் பார்த்து அவங்க சந்தேகப்படுவாங்க இல்லையா?"

"கழுத்திலே என் தாயார் விட்டுப்போன மெல்லிய தங்கச் சங்கிலியைப் போட்டுகிட்டிருக்கேனே?"

"அவங்க ஞாபகமாக அதை நீ போட்டுக்கிட்டு இருக்கே. ஒப்புக்கிறேன். என் ஞாபகமாக முத்துமாலை, தோடு வளையல்களை போட்டுக்கோ" வற்புறுத்தி நகை பெட்டிகளை அவள் கையில் வைத்தாள்.

"இதுவே அதிகம். சேலைகள் வேறு எதுக்கு வாங்கினீங்க?"

"காலையிலே புறப்படும்போது மேகா தாத்தா அவன் கையில் பணம் கொடுத்து அனுப்பி உனக்கு அவரது பரிசாக இரண்டு சேலை எடுத்துத்தரச் சொல்லியிருந்தார்."

''இரண்டு பேருக்கும் நான் ரொம்பக் கடன்பட்டு இருக்கேன்.''

''அதை மட்டும் முதலுமா பின்னாடி உங்கிட்டே இருந்து நாங்கள் வசூலிச்சுக்கிறோம். கவலைப்படாதே'' பூரணி சிரித்தாள்.

''நீ அறுகுவாயோ, மகள் என்பதைப் புரிந்து கொண்டதும் வேலாவின் தாத்தாவுக்கு உன் மேல் பிரியம் வந்திடுச்சு. சின்ன வயதில் உன் தாத்தாவும் அவரும் ரொம்ப நெருங்கின சிநேகிதர்கள். உன் தாயின் திருமணத்திற்கு பிறகு ஏற்பட்ட குழப்பத்திலே மனம் வெறுத்து மெல்ல ஒதுங்கிக்கொண்டு ரெண்டு பேரும் தனி விசாரிக்கிறதோட. சரி, அப்படி வெளியிலே சந்திக்கிறதும் இப்போது ரொம்ப அரிதா போச்சு'' காருக்குள் உட்கார்ந்தபடி கதையாக அதை சொல்லி முடித்தாள், பூரணி.

நான் யார் என்பதை அறிந்ததும், திலகா தவித்த தவிப்பை விட தாத்தா சந்திரசாமியின் ஞானாதிசயங்களை இப்படி தனித்தனியாகக் கேட்க, அவளுக்கு வியப்பாக இருந்தது.

அதைவிட பெரும் வியப்பு திலகாவையும் மேகநாதனையும் பகல் உணவுக்குப் பிறகு கடைத் தெருவுக்கு போகவிட்டு பூரணி மட்டும் தன்வீரின் வீட்டில் தங்கிக்கொண்டது.

''திலகா, அந்த லீவுலெட்டரை எழுதி எடுத்து தபாலில் சேர்த்து விட்டும், நீ உனக்கு வேண்டிய மருந்துகளை கடையிலே வாங்கி முடித்துக்கொள். எனக்கு களைப்பில் தூக்கம் வருது'' என்று பூரணி ஒதுங்கிக் கொண்டு விட்டாள்.

கடிதத்தை தபால் பெட்டியில் போட்டு விட்டு காரை திருப்பாது மேகநாதன் ஓட்டிக்கொண்டு போனான். சிறிது நேரத்திற்குப் பின்னர்தான் அவள் கவனித்தாள். வண்டி



கிராமத்தைத் தாண்டி, போக்குவரத்து நெரிசல் அதிகம் இல்லாத நெடுஞ்சாலைக்குள் புகுந்து சிறிது தூரம் கடந்து விட்டு இருந்தது. பெரியதொரு புளிய மரத்தின் கீழ் சாலை ஓரத்தில் வண்டியை நிறுத்தினான், மேகநாதன்.

''அந்தவளை மறந்து விட்டீங்களா? ரொம்ப தூரம் வந்திட்டாப்பல தோணுதே!'' வியப்புடன் கேட்டாள், திலகா.

மீண்டும் வண்டிகள் குறைந்ததொரு அழகான சூழ்நிலை.

''இப்படித் தனியா ஓர் இடம் கிடைத்து பேச வாய்ப்பு கிடைக்குமான்னு நான் எத்தனை நாளா தேடிக்கிட்டிருக்கேன் தெரியுமா?'' சொல்லிக்கொண்டே மேகநாதன் தன் கையில் இருந்த ஒரு பொட்டலத்தைப் பிரித்து சாக்லேட் ஒன்றை பாதியாகப் பிட்டு ''ஆளுக்குப் பாதி'' என்று சிரித்தபடி அவளிடம் ஒரு துண்டத்தை நீட்டினான்.

''இன்னிக்கு அப்படி என்ன முக்கியமான சங்கதி? இனிப்பு கொடுக்கிறீங்க?'' கேட்டபடி அவளும் அதை மெல்ல மென்று சுவைத்தாள்.

''இனிப்பான செய்தியைச் சொல்ல, முதலில் வாயில் இனிப்பை பரவவிட்டு இருக்கிறேன்'' மெல்ல சிரித்தபடி ஆரம்பித்தான்.

''முதல் முதலில் அந்தக் கடையில் நாம் சந்தித்தோமே, ஞாபகம் இருக்கா?'' அடிக் குரலில் அவன் கேட்டதும், அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

அவனது காந்தப் பார்வையில், அவள் நெஞ்சு மகிழ்ச்சியில் துடித்தது. ''ஞாபகம் இருக்கு. அதைப்பற்றி இப்போ என்ன?''

''அன்னிக்கே என் மனம் உன் மேலே ரொம்ப ஆசைப் படத் தொடங்கிட்டுது!''

காதும் மூக்கும் சிவந்துபோக, நெஞ்சிலே ஏற்பட்ட இன்ப சிலிர்ப்பில் உடல் நடுங்க அவள் மெல்ல அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளும் அன்று முதல் அவனை விரும்பத் தொடங்கியிருந்தாள். அந்த அன்பு இப்படி நெருக்கமாய் அவர்களது பாசம் வளரக்கூடும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. ஊர் பேர் தெரியாத ஒரு இளைஞனைப் பார்த்து மயங்கி ஆசை கொண்டது மதியீனம் என்று தன்னைத்தானே பன்முறை சாடிக் கொண்டிருந்தாள்.

"சிறிது நேரம் பார்த்துக் கொண்டோம். நல்ல ஞாபகம் இருக்கு!"

"அந்த சிறிது நேரத்தில், எத்தனை பெரிய அற்புதம் நிகழ்த்திவிட்டிருக்கு பார்த்தியா நிலகா!"

"நீங்கள்" என்பதில் இருந்து "நீ" என்று ஒருமையில் பேசும் அளவுக்கு அவனது நேசம் நெருங்கிவிட்டதைப் புரிந்துகொண்ட அவள் உணர்ச்சிவசத்தில் திளைத்துப் போனாள்.

"ரத்தினசாமி அய்யாவின் உறவுபோல சாயலில் தெரியும் இந்தப் பெண்—என் மனதை இப்படி ஈர்த்துக் கொண்டு விட்டாளே! இவள் பேர், ஊர் விவரம் ஒன்றும் கேட்டுக் கலையேன்னு நினைச்சு ஒருசில நொடிகள் அசந்து போயிட்டேன்."

"உங்கள் ஊருக்கு என் தாத்தாவை தேடிக்கிட்டு நான் வராது போய் இருந்தால் என்ன ஆகியிருக்கும்னு நீ கேட்கலாம்..."

நிலகா மென்மையாக தலையை அசைத்து லேசாக புன்முறுவலித்தாள்.

அன்னிக்கே நான் ஒரு காரியம் செய்தேன். சிறிது நேரம் கழித்து ஒரு ஆட்டோவில் நான் உன்னைப் பின் தொடர்ந்தேன். நீ அந்த விடுதிக்குள் நுழைவதைப் பார்த்தேன். வாசலில் காவல் செய்திறவனிடம் பேச்சுக் கொடுத்து உன் வேலை, பெயர் எல்லாம் தெரிந்துகொண்டு [illegible] நீ உன் தாத்தாவைத் தேடிக்கிட்டு வராது இருந்தாலும் கொஞ்ச நாளில் நான் உன்னை தேடிகிட்டு வந்திருப்பேன்!"

நெஞ்சு இன்ப பரவசத்தில் துடிக்க, நிலகா செல்லமாக சிணுங்கினாள்.

"இத்தனை நாளும் நீங்கள் இதை என்கிட்ட சொல்லலையே!"

"சொல்ல வாய்ப்பு கிட்டவில்லை. அதனால் சொல்லலை. இதுக்குப் பிறகு உன் தாத்தாவுக்கு உடல் நலமில்லை என்று வைத்தியம் செய்ய ஒரு தடவை அவர் வீட்டுக்குப் போனபோது,மறுபடி அந்தப் படத்தைப் பார்த்தேன். என் சந்தேகம் வலுத்தது"

"உங்கள் ஊகம் தவறாக இருந்து, நான் ரத்தினசாமி அய்யாவின் பேத்தியாக இல்லாது, காயத்திரி இல்லத்திலே வளர்ந்த பல குழந்தைகளில் ஒருத்தியாக, ஊர் பேர் தெரியாத அனாதையாக இருந்திருந்தால்...?"

"அப்பொழுதும் உன்னை விரும்பியிருப்பேன். இப்போதுகூட உன் தாத்தா உன்னை ஏற்க மறுத்து ஒதுக்கிட்டாலும் அக்கரை இல்லை. உன்னை என் மனைவி ஆக்கிக் கொள்ள நான் எப்பொழுதும் தயார். உனக்கு சம்மதம் தானே!"

"இவ்வளவு பெரிய தகுதியை வேண்டாம்னு யார் சொல்லுவாங்க. எனக்கும் உங்களைப்பார்த்த நாளே ரொம்ப பிடிச்சுப் போச்சு. இப்படி ஒரு யோகம் வரும்னு எதிர்பார்க்கவில்லை. மிக்க நன்றி!" பேசமுடியாது உணர்ச்சிப் பெருக்கில் திணறினாள். முத்துக்களாக கண்ணீர்த் துளிகள் அவளது கன்னங்களில் சிதறி விழுந்தன.

காதும் முக்கும் சிவந்துபோக, நெஞ்சிலே ஏற்பட்ட இன்ப சிலிர்ப்பில் உடல் நடுங்க அவள் மெல்ல அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளும் அன்று முதல் அவனை விரும்பத் தொடங்கியிருந்தாள். அந்த அன்பு இப்படி நெருக்கமாக அவர்களது பாசம் வளரக்கூடும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. ஊர் பேர் தெரியாத ஒரு இளைஞனைப் பார்த்து மயங்கி ஆசை கொண்டது மதியீனம் என்று தன்னைத்தானே பன்முறை சாடிக் கொண்டிருந்தாள்.

''சிறிது நேரம் பார்த்துக் கொண்டோம். நல்ல ஞாபகம் இருக்கு!''

''அந்த சிறிது நேரத்தில், எத்தனை பெரிய அற்புதம் நிகழ்ந்துவிட்டிருக்கு பார்த்தியா நிலகா!''

''நீங்கள்'' என்பதில் இருந்து ''நீ'' என்று ஒருமையில் பேசும் அளவுக்கு அவனது நேசம் நெருங்கிவிட்டதைப் புரிந்துகொண்ட அவள் உணர்ச்சிவசத்தில் திளைத்துப் போனாள்.

''ரத்தினசாமி அய்யாவின் உறவுபோல சாயலில் தெரியும் இந்தப் பெண்—என் மனதை இப்படி ஈர்த்துக் கொண்டு விட்டாளே! இவள் பேர், ஊர் விவரம் ஒன்றும் கேட்டுக் கலைவேன்னு நினைச்ச ஒருசில நொடிகள் அசந்து போயிட்டேன்.''

''உங்கள் ஊருக்கு என் தாத்தவை தேடிக்கிட்டு நான் வராது போய் இருந்தால் என்ன ஆகியிருக்கும்னு நீ கேட்கலாம்...''

நிலகா மென்மையாக தலையை அசைத்து லேசாக புன்முறுவலித்தாள்.

அன்னிக்கே நான் ஒரு காரியம் செய்தேன். சிறிது நேரம் கழித்து ஒரு ஆட்டோவில் நான் உன்னைப் பின் தொடர்ந்தேன். நீ அந்த விடுதிக்குள் நுழைவதைப் பார்த்தேன். வாசலில் காவல் செய்கிறவனிடம் பேச்சுக் கொடுத்து



உன் வேலை, பெயர் எல்லாம் தெரிந்துகொண்டு விட்டேன். நீ உன் தாத்தாவைத் தேடிக்கிட்டு வராது இருந்தாலும் கொஞ்ச நாளில் நான் உன்னை தேடிகிட்டு வந்திருப்பேன்!''

நெஞ்ச இன்ப பரவசத்தில் துடிக்க, நிலகா செல்லமாக சிணுங்கினாள்.

''இத்தனை நாளும் நீங்கள் இதை என்கிட்ட சொல்லலையே?''

''சொல்ல வாய்ப்பு கிட்டவில்லை. அதனால் சொல்லலை. இதுக்குப் பிறகு உன் தாத்தாவுக்கு உடல் நலமில்லை என்று வைத்தியம் செய்ய ஒரு தடவை அவர் வீட்டுக்குப் போனபோது,மறுபடி அந்தப் படத்தைப் பார்த்தேன். என் சந்தேகம் வலுத்தது''

''உங்கள் ஊகம் தவறாக இருந்து, நான் ரத்தினசாமி அய்யாவின் பேத்தியாக இல்லாது, காயத்திரி இல்லத்திலே வளர்ந்த பல குழந்தைகளில் ஒருத்தியாக, ஊர் பேர் தெரியாத அனாதையாக இருந்திருந்தால்...?''

''அப்பொழுதும் உன்னை விரும்பியிருப்பேன். இப்போதுகூட உன் தாத்தா உன்னை எந்த மறுத்து ஒதுக்கிட்டாலும் அக்கறை இல்லை. உன்னை என் மனைவி ஆக்கிக் கொள்ள நான் எப்பொழுதும் தயார். உனக்கு சம்மதம் தானே!''

''இல்லைவு பெரிய தகுதியை வேண்டாம்னு யார் சொல்லுவாங்க. எனக்கும் உங்களைப்பார்த்த நாளே ரொம்ப பிடிச்சுப் போச்சு. இப்படி ஒரு யோகம் வரும்னு எதிர்பார்க்கவில்லை. மிக்க நன்றி!'' பேசமுடியாது உணர்ச்சிப் பெருக்கில் திணறினாள். முத்துக்களாக கண்ணீர்த் துளிகள் அவளது கன்னங்களில் சிதறி விழுந்தன.

''மகிழ்ச்சியடைய வேண்டிய நேரத்திலே எதுக்குக் கண்ணீர்'' தன் கைக் குட்டையை எடுக்க சட்டைப் பையைத் துழாவினான் அவன்.

''இது ஆனந்தத்தின் அறிகுறி'' சிரித்தபடி கண்ணீரை சட்டென்று முந்தானையால் துடைத்துக் கொண்டாள், நிலகா.

''உனது ஒப்புதலுக்கு அடையாளமாக இதை உன் தலையில் சூடிக்கொள்ளவேண்டும்'' என்றபடி காரின் முகப்புப் பேழையில் வைத்திருந்த வாழை இலைச் சருளைப் பிரித்து, பூவை எடுத்து அவள் தலையில் சூடினான்.

''கம்'' என்று மணந்த தஞ்சாவூர் கதம்பம் கொண்டையை அலங்கரிக்க—அவனது காதல் மொழிகள் நெஞ்சை கிளுகிளுக்க வருங்காலம் பற்றிய பல இனிய கனவுகளுடன் திரும்பியிருந்தாள், நிலகா. பொங்கி எழுந்த பாலின் மீது நீரைத் தெளித்தாற்போல, உடைந்து கிடந்த அலமாரி அவளது உணர்வுகளை நோகடித்தது. அன்று இரவு உறங்கப் போகுமுன் அலமாரியைப் பற்றிய சந்தேகத்தை பூரணியிடம் மெல்லச் சொன்னாள்.

''இதைக் கண்டுபிடிக்க துப்பறியும் புலி தேவையில்லை. நான் வேணும் என்றே தேனம்மா கண்களில் படும்படி மாற்று சாவியை மாடத்திலே வைத்துவிட்டுக் கிளம்பியிருந்தேன். இந்த வீட்டில் தேனம்மா, மார்த்தாண்டனுக்கு உளவாளியா இருக்காள். இதை என்னால் ஒழித்துக்கட்ட முடியும். கலலைப்படாமல் தூங்கு'' என்றாள் பூரணி ஆறுதலாக.

## 15

ஒரு மகாராணிக்கு உரிய மிடுக்கும் அதிகார தோரணையும் பூரணியிடம் காணப்பட்டதை நிலகா வந்த சிலதினங்களில் கண்டு கொண்டாள்.

வேலையாட்களிடம் பூரணி அன்பாகத்தான் பேசினாள். ஆனால், பட்டுக் கத்தரித்தாற் போன்று பிசிறு இல்லாத ஒரு கண்டிப்பு.

இரண்டு தினங்களுக்குப் பின்னர், ஒரு காலைப் பொழுது. ஊஞ்சலில் அமர்ந்து தோத்திரப் புத்தகத்தை படித்துக் கொண்டு இருந்தாள், பூரணி. ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறிவிட்டு புத்தகத்தை மூடி பலகை மீது வைத்தாள்.

''தேனம்மா! இப்படிவா'' என்று கண்டிப்பான குரலில் அழைத்தாள்.

உள்ளே கைவேலையாக இருந்த தேனம்மா எரியும் அடுப்பைத் தணித்துவிட்டு ஓடோடி வந்தாள்.

'உன் மகளைப் பார்க்க கும்பகோணம் போய் வரணும்னு சொல்லிக்கிட்டு இருந்தியே. இந்த மாசமும் அடுத்த மாசமும் நான் எப்படியோ சமாளிச்சுக்கிறேன். நீ இன்று மாலையே கிளம்ப ஏற்பாடுபண்ணு'' என்றாள்.

தேனம்மாள் முகம் வெளுத்துப் போனாள். ''நீங்கள் தனியா சமையல் வேலைகளை எப்படி கவனிப்பீங்க......'' குழறினாள், அச்சத்துடன்.

ஊஞ்சலை மேலும் கீழும் ஆட்டியபடி சிரித்தாள், பூரணி.

''கோபுரத்தை பொம்மைங்களா தாங்குது தேனம்மா. இந்த வீட்டு ஐயா சிங்கம் போல இருந்தார். சித்த நாழியிலே போயிட்டார். அதுக்குப் பிறகு வீட்டையும் வயக்காட்டையும் நான் கவனிச்சுக்கலையா? காலம் யாருக் காகவும் காத்துகிட்டு இருக்காது. உனக்கும் வயசாகுது. பேரன், பேத்திகளை ஒருதடவை போய் பார்த்துவிட்டு அவங்களோட ஆசைதீர இருந்து விட்டுவா. உன்னை நான் இங்கே வீட்டோடே கட்டிப் போட்டு வச்சிருக்கிறது தப்பு.''

தேனம்மா மவுனமாக நின்றாள். பூரணியிடம் எதிர்த்துப் பேச அவளுக்குத் துணிவு இல்லை.

''கவலைப்படாதே. இரண்டு மாத சம்பளத்தை முன் பணமா கொடுத்துடறேன். அதோட உன் பேரன் பேத்திகளுக்கு ஏதாச்சும் வாங்க ஒரு ஐம்பது ரூபாயும் சேர்த்து தர்றேன். நீ இன்னிக்கு பகல் சாப்பாட்டுக்குப் பிறகு கிளம்பு. தஞ்சாவூர் போய் வேண்டியதை வாங்கிகிட்டு பின் பஸ் பிடித்துப் போ. உன் முகவரியை சொல்லு. திலகா எழுதி வைக்கட்டும். அவசரத் தேவைன்னா ஒரு கடிதாசி போட்டு பணம் அனுப்பி உன்னை உடனே வர வழைச்சுக்கிறேன்'' என்றாள்.

இவ்வளவையும் கேட்டுக்கொண்டு, அறைக்குள் இருந்த கண்ணாடி முன் தலையை வாரிக்கொண்டு நின்ற திலகா தனக்குள்ளேயே மெல்ல சிரித்துக் கொண்டாள்.

தேனம்மாவை எத்தனை கச்சிதமாக வீட்டைவிட்டு வெளியேற்றுகிறாள் பூரணி! உண்மையில் இந்த அம்மாள் பெரிய ராஜ தந்திரிதான்!

''திலகா!'' பூரணி அழைக்கும் குரல் கேட்டு திடுக்கிட்டு தலைமுடியை வாரி சுருட்டி கொண்டையாக சுற்றிக்கொண்டு நொடிப்பொழுதில் வெளிப்பட்டாள்.



தன் இடுப்பில் குலுங்கிய சாவியை இழுத்தாள். பூரணி ''இந்தா! பீரோவைத் திறந்து, இரண்டாவது தட்டிலே வச்சிருக்கிற என் கைப்பையை எடுத்துக்கிட்டு வா!'' உத்தர விட்டபடி இரும்பு பீரோ சாவியை விரலால் தொட்டு அடையாளம் காட்டினாள்.

கைப்பையைக் கொண்டுவந்து திலகா பலகைமீது வைத்தாள். பூரணி பரபரப்பாக அதைத் திறந்து, தேனம்மாவுக்குச் சேரவேண்டிய பணத்தை எண்ணி, சுருட்டி அவளிடம் நீட்டினாள்.

''நான் சொன்னபடி ரெண்டு மாத சம்பளம். செலவுக்கு ஐம்பது ரூபாய் எல்லாம் இதில் இருக்கு. போய் சீக்கிரம் சமையலை கவனி'' என்று உத்தரவிட்டு, கைப்பையை திலகா விடம் கொடுத்தாள். ''பீரோவைப் பூட்டிவிட்டு தேனம்மா கிட்டேயிருந்து அவள் முகவரியைக் கேட்டு எழுதிவை!'' என்று திலகாவுக்கு உத்தரவு போட்டாள்.

தேனம்மா, கும்பிடு போட்டு பணத்தை வாங்கிக் கொண்டாள். ''நான் ஊருக்குப் போயிட்டா அம்மா சமையல் அறையிலே கிடந்து திண்டாடுமேன்னு பார்க்கிறேன்!'' குழைவாக சொல்லிவிட்டு தயங்கி நின்றாள்.

''திலகா எதுக்கு துணையா வந்திருக்கா? புத்தகம் எழுதி குறிப்பு எடுக்கும்நேரம் போக, மீதிநேரம் எனக்கு உதவி செய்வாள். கல்யாணத்துக்கு நிக்கற பொண்ணுக்கு சமைக்க தெரிய வேண்டாமா? அவளும் இந்த இரண்டு மாதத்திலே நல்லா சமைக்க கத்துக்கொள்ளட்டும். கவலைப் படாதே'' சிரித்தாள், பூரணி.

அதற்கு மேல் பேச தேனம்மாளுக்கு துணிவு இல்லை.

மறுநாள் காலையில் இருந்து சமையல் வேலையில் பூரணிக்கு திலகா கூட இருந்து உதவ வேண்டியிருந்தது.

வசதியான குடும்பத்தில் வேலைக்காரர்களின் உதவி யுடன் வாழ்ந்து பழக்கப்பட்டவள் என்றாலும், பூரணி சமையல் வேலையில் மிகவும் கெட்டிக்காரியாகவே காணப் பட்டாள்.

விடுதியில் சமையல் அறைப் பெண்களுடன் கூட நின்று உதவிசெய்து பழக்கப்பட்ட திலகாவுக்கு அந்த வேலை சிரம மாக இருக்கவில்லை.

தேவம்மாவின் குறுக்கீடு இன்றி, ஒட்டுக் கேட்பவர்களின் பயம் இன்றி, இருவரும் மனம்விட்டு பேசி சிரித்து மகிழ அது பெரும் வாய்ப்பை அளித்தது.

அந்த நெருக்கம், பூரணிமீது திலகாவின் பாசத்தை அதிகரிக்கச் செய்தது.

அன்றுகாலை எழுந்ததும் வழக்கம் போல தலைமுழுகி விட்டு, மேற்றடை அணிந்துகொண்டு தோத்திரப் புத்தகத் துடன் உட்கார்ந்துவிட்டாள், பூரணி.

''இன்று சமையல் முழுவதும் உன் பொறுப்பு. காலை காபி, பலகாரத்தை உப்புமாவோட முடிச்சுடு. ஆனால், பகல் சாப்பாடு கொஞ்சம் விமரிசையா இருக்கணும். சாம்பார், கூட்டு, பொரியல், வறுவல் இத்தோட பால் போளியும் செய்துடு'' திலகாவுக்கு உத்தரவிட்டாள்.

''இன்னிக்கு என்ன விசேஷம் அத்தை?'' ஆவல் தாங் காது கேட்டாள், திலகா.

''மேகநாதனின் பிறந்தநாள். அவங்க வீட்டிலே பெண் பிள்ளை யாரும் இல்லாததால் ஒவ்வொருஆண்டும் நான்தான் பகல் சாப்பாட்டை தடபுடலா செய்து, மாலையில் சிவன் கோவிலில் ஒரு அர்ச்சனை செய்கிற பழக்கம். சாப்பாட்டுக்கு மேகாவும்—தாத்தாவுந்தான் வருவாங்க. மேகா அப்பாவுக்கு ஒரு டிபன் கேரியல்லே சாப்பாட்டை அனுப்பிடுவோம். மேகா

வின் தாயார் இறந்ததில் இருந்து அவர் ஒருமாதிரியாக மாறிட் டார். ஒருத்தரோடேயும் பேசறதில்லை. எதிலும் கலந்துக்கற தில்லை. ஒரு சமயம் வீட்டுக்கு விளக்கேத்த நீ போவ பிறகு அந்த மனுஷன் முஞ்சியிலே களை வருமோ என்னவோ.''

குபீரென்று முகம் சிவந்துபோன திலகா, சட் என்று சமையல் அறைக்குள் நுழைந்துகொண்டாள். அவள் வந்த காரியம் வெற்றியடைகிறதோ, தோல்வியுறுகிறதோ தெரி யாது. ஆனால், அவளுக்கு கிடைக்கப்போகும் மகத்தான இன்ப வெற்றி ஒன்று காத்துக்கொண்டு நிற்கிறதே! அவள் நெஞ்சு மகிழ்ச்சியில் துடித்தது.

பூரணியின் உத்தரவுப்படி சமையல் முடிந்ததும், அன்று கடையில் வாங்கிய சேலைகளில் ஒன்றை அணிந்துகொண்டு, நகைகளைப் பூட்டிக் கொண்டாள்.

கதவைத் திறந்த திலகாவை அதிசயமாக மேலும் கீழும் பார்த்தாள் மேகநாதன்.

காதுகளில் முத்துத் தோடும், கழுத்தில் முத்துமாலையும், இடையே முத்து வண்ணத்தில் நீலப் பூக்கள் அச்சிட்ட பிரின்டெட் சில்க் சேலையில் முத்துச் சுடர் போல மெல்லிய சிரிப்புடன் நின்ற அவளைக் கண்டு மயங்கிப் போனான்.

கை கழுவ செம்பை எடுத்து நீட்டியவளிடம் கிசுகிசுத் தான்.

''என் பிறந்த நாளுக்கு என்னைப் பாராட்டியதற்கு ரொம்ப நன்றி. நீ இன்னிக்கு எப்படி இருக்கே தெரியுமா?''

திலகா மவுனமாக முறுவலித்தாள்.

''ரத்தினசாமி அம்மாளின் பேத்தி என்கிற பணக்காரக் களை முகத்திலே குடம் குடமா கொட்டுது. எனக்கு ரொம்ப பயமா இருக்கு!''

''எதுக்கு பயமாம்?''

''பணக்காரத் தாத்தா திட்ட போல் சேர்த்ததும் இந்த ஏழை கிராம வைத்தியனை மறந்துட்டாரா!''

செம்பில் இருந்து கொஞ்சம் நீரை கையில் வார்த்துக் கொண்டு, ''அந்த நலக்கும் வைக்கும் தெளிவட்டும்'' என்று வேடிக்கையாக சொல்லியபடி அந்த நீரை அவன் முகத்திலே மீசைகளை துக்கினான். பின்னால் கை கழுவ வந்த தாத்தா குருமூர்த்தியின் மார்பிலே தண்ணீர் துளிகள் விழுந்து விடவே, அவன் பயந்து விட்டான்.

''இந்த சொருக்தற வெயிலிலே நூறல் போடுதேன்னு பார்த்தேன்!'' இருவரையும் ஏற இறங்க பார்த்துவிட்டு கிழவர் சிரித்தார்.

முகம் சிவக்க தேம்க பதற திலகா ஒரே ஓட்டமாக உள்ளே சென்று மறைந்துகொண்டு விட்டாள்.

எல்லோரையும் உட்கார வைத்து அவள்தான் உணவைப் பரிமாறினாள்.

''அக்கா! இன்றைக்கு சமையல் உங்கள் கைவண்ணம் இல்லையா? நல்ல வேளை. மருந்து பெட்டியை கையோட காரில் வச்சிருக்கேன்'' கேலியாகப் பேசிய மேகநாதன், திலகாவை கோகமையாகப் பார்த்தான்.

''பத்திரம் மேகா... ரத்தினசாமி அய்யா வம்சத்துக்கு முன்கோபம் அதிகமாகவே உண்டு. பால் போளிக்கு பதில் உன் தலையில் தண்ணீர் லோட்டா வந்து விழுந்தால் என்ன செய்வே?'' கேட்டபடி கிழவர் நிமிர்ந்து திலகாவைப் பார்த்து கண்ணைச் சிமிட்டவே, கொல்லென்று எல்லோரும் சிரிக்க, விருந்து அமர்க்களப்பட்டது.

கிழவர் பழிபோல்லாதவராக இருக்கிறாரே. தனக்குள்ளே மகிழ்ந்து கொண்டாள், திலகா. அப்படிப்பட்ட



ஒருவரின் அரவணைப்பில் அவர்கள் வீட்டு மருமகளாகப் போகும் தன் பாக்கியத்தை எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டாள்.

அன்று மாலை கோவிலுக்குப் போய்விட்டு அவர்கள் திரும்புவதற்குள் இருட்டிவிட்டது. கதவைத் திறந்ததும் நடை விளக்கைப் போட்டாள், திலகா. கதவுக்கு அருகில் தபால்காரர் சொருகிவிட்டுப் போன ஒரு கடிதம் தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டு எடுத்தாள்.

கடிதம் அவளுக்கு வந்திருந்தது. முத்தத்தில் இறங்கி காலைக் கழுவிக் கொண்டு வியப்புடன் கூடத்து விளக்கு ஒளியில் அதைப் பிரித்துப் படித்தாள். பள்ளிக்கூட நோட்டுப் புத்தகத்தில் இருந்து கிழிக்கப்பட்ட ஒரு பக்கத்தில் அவசரமாக யாரோ சிறுபிள்ளைத்தனமாக கிறுக்கியிருந்த மொட்டைக் கடிதம் அது...

''திலகா என்னும் பெண்ணே! இன்னும் ஒரு வாரத்திற்குள் நீ ஊரை விட்டு போகாவிட்டால், உனக்கு ஆபத்து காத்து இருக்கு என்று எச்சரிக்கிறேன். உண்மை விளம்பி.''

''அத்தை!'' என்று அச்சத்துடன் அலறியபடி திலகா, பூரணியிடம் அதைக் காட்டினாள்.

''அடுத்தபடி இப்படி ஒரு கடிதம் வரும்னு மேகா சொன்னது சரியாப் போச்சு. இதைக் கிழித்து குப்பைக் கூடையில் போடும்மா. என் வீட்டில் இருக்கும்வரை நீ எதுக்கும் பயப்படத் தேவையில்லை'' சொல்லிக்கொண்டே, பிரசாதத் தட்டில் இருந்து குங்குமம் விபூதியை தொட்டு அவள் நெற்றியில் வைத்தாள், பூரணி.

ஆனாலும், திலகாவின் உடல் வெட வெடவென்று அச்சத்தில் நடுங்கியது.

# 16

அடுத்த நாள் காலை.

பூஜையறைக்கு தேவையான பூக்களைப் பறித்து கூடையில் நிரப்பிக் கொண்டு திலகா உள்ளே திரும்பியபோது, கூடத்தில் பேச்சுக் குரல் கேட்டது.

தாத்தா குருமூர்த்தி அந்த காலை வேளையில் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு இருந்தார். அருகில் வெள்ளித் தம்ளர் நிறைந்துக்கொண்டு காபி உபசரிப்பு பலகை மீது காத்துக்கொண்டு இருந்தது.

''உனக்கு ஆயுசு நூறு. உன்னைப் பத்திதான் விசாரிச்சுட்டு இருந்தேன். நீ வந்துட்டே!'' சிரித்தபடி கிழவர் காபியைக் காலி செய்தார்.

பூக்கூடையை பூஜை அறைக்குள் வைத்துவிட்டு கூடத்தில் வந்து கலந்து கொண்டாள், திலகா.

''நீ இங்கே வந்து விளையாட்டுப் போல ஒரு மாதமாகப் போகுது. இன்னும் ஒரு துளிகூட நீ வந்த காரியம் முன்னேறலை. அதைப்பத்தி பேசத்தான் இங்கே இப்போது வந்து இருக்கேன். பூரணி சொன்ன சில தகவல்கள் மனதுக்கு குழப்பத்தை கொடுத்து இருக்கு'' என்றார்.

''திலகா அப்படி உட்கார். தாத்தா கொஞ்சநேரம் உன்னிடம் விவரமா பேச விரும்புகிறார்'' என்று கூறி அவள் கையைப் பிடித்து தரையில் அவருக்கு எதிரே உட்கார வைத்தாள், பூரணி.

குருமூர்த்தி அவளை ஊன்றிப் பார்த்தார். ''உன் அம்மா படம், கடுதாசிகள் கொண்ட அந்த பிளாஸ்டிக் உறையை உங்கிட்டே இருந்து நான் வாங்கிட்டுப் போனது எவ்வளவு நல்லதா போச்சு பாத்தியா? பார்த்தாண்டத்திடம் கைக்கூலி வாங்கிட்டுத் தேனம்மா மாற்று சாவி போட்டு உன் அலமாரியைத் திறந்து ஏதாவது தடயம் கிடைக்கிறதான்னு தேடியிருக்காள். அந்த உறை அவள் கையில் கிடைச்சிருந்தா பார்த்தாண்டத்தின் சந்தேகம் தெளிவடைஞ்சு போயிருக்கும். இத்தனை நேரம் அவன் என்ன பண்ணியிருப்பானோ சொல்ல முடியாது. அவனுக்கு உளவாளியாக இருந்த தேனம்மாவை பூரணி ஊருக்கு அனுப்பியது அவனுக்கு ஆத்திரத்தைத் தூண்டிவிட்டிருக்கு. அதனாலே அவன் ஒரு மொட்டைக் கடுதாசி எழுதி உன்னை பயமுறுத்தி இருக்கான். இதெல்லாம் நாங்கள் எதிர்பார்த்ததுதான். எனக்குள்ளே கொஞ்சம் கலவரமா இருக்கு. அவன் மேலே ஏதும் முயலுமுன், நீ உன் தாத்தாவைப் பார்த்து பேசிடணும்னு நினைக்கிறேன்'' என்றார், கிழவர்.

''எனக்கும் இரவும் பகலும் அதே கவலைதான் அய்யா!'' என்றாள், திலகா.

''உன் தாத்தாவை நீ பார்க்கப் போகுமுன் உன் தாய், தந்தையைப் பற்றி சில விவரங்களை நீ தெரிஞ்சுக்க வேண்டாமா?''

''அவங்களைப் பத்தி தெரிஞ்சுக்க நான் ரொம்ப ஆசைப்படுகிறேன், அய்யா'' தழுதழுத்தாள், திலகா.

குருமூர்த்தி தமது சட்டைப் பையில் இருந்து ஒரு சிறு காகித உறையை எடுத்தார். அரும்பு மீசையும் சுருண்ட முடியுமாக ஒரு வாலிபன் நாற்காலியைப் பிடித்தவண்ணம் நிற்க, நடுத்தர வயதான வாட்ட சாட்டமான ஒருவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்க, எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று அதில் இருந்தது. மிகவும் கவனமாக பாதுகாக்கப்பட்டதினால் படத்தில் முகங்கள் பளிச்சென்று தெரிந்தன.

''அந்தக் காலத்தில் எனக்கு உன் தாத்தா கொடுத்த படம். நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் நடுத்தர வயது மனிதன்தான் உன் தாத்தா ரத்தினசாமி.பக்கத்தில் நிற்கும் இளைஞன்தான் உன் தந்தை சுகுமாரன்.''

புகைப் படத்தைப் பிடித்திருந்த திலகாவின் கைகள் நடுங்கின. கண்களில் நீர் புரண்டது.

''இந்தப்படம் எடுத்து பலஆண்டுகளாகிறது. உன் அப்பா படத்திலே இருப்பது போல பார்க்க ரொம்ப நல்லாவே இருப்பான். நல்ல பையன். எனக்கு அவனை ரொம்ப பிடிக்கும். உன் தாத்தாவுக்கு இப்போ வயசாயிடுச்சில்லையா, நேரில் பார்த்தால் நீ நினைக்கப் போலே. அந்த கம்பீரம் எல்லாம் குறைஞ்சுபோய் கிறிச்சுபோட்ட தாராட்டமா ரொம்ப தேஞ்சுபோய் கிடக்கார்.''

''அப்பாவும் தாத்தாவும் சேர்ந்து போட்டோ எடுத்து இருக்காங்களே, அப்போ, என் தந்தை தாத்தாவுக்கு கல்யாணத்துக்கு முன்னாடியே உறவினரா?''

''அதான் சொல்ல வர்றேன். உன் தந்தையின் படிப்பு புத்திசாலித்தனம், தோற்றம் ஆகியவற்றில் கவரப்பட்டு ரத்தினசாமி அய்யா ரொம்ப நெருக்கமாக தன் உறவுக் காரனைப் போல பழகினார். பக்கத்துலே எட்டு கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள மணல்மேடு என்கிற ஊரில் புதுசா உயர்நிலைப் பள்ளிக்கூடம் தொடங்கினாங்க. அதிலே பௌதீகமும் கணக்கும் போதிக்க உங்கப்பா ஒரு ஆசிரியராக வேலைக்கு வந்து சேர்ந்தார். நம்ம கிராமத்திலே வீடு எடுத்து தங்கிகிட்டு தினம் வேலைக்கு சைக்கிளில் போய்வருவார்...''

''அவர்கூட அவருடைய பெற்றோர் இருந்தாங்களா?''

''அதான் சொல்லவரேன். உன் அப்பா சின்னவயசிலேயே பெத்தவங்களை இழந்துவிட்டான். அவனைக் கவனித்துக் கிட்டு இருந்த பாட்டியும் காலமானதும் தூரத்து உறவுக்கார



கிழவி ஒருத்தியை சமையலுக்கு வச்சுக்கிட்டு இருந்தான். அந்த அம்மாளும் திடீர் என்று ஊருக்குப் போய்விட்டதால், பாவம் தானே சமைத்து சாப்பிடும் நிலை வந்துட்டது...''

''அந்த சமயம், உன் தாத்தா தன் ஒரே மகளுக்கு கணக்கு டியூஷன் எடுக்க உன் அப்பாவை ஏற்பாடு செய்தார். சிரிக்க சிரிக்கப் பேசும் அந்த பையனை ரொம்ப அவருக்கு பிடிச்சுப்போச்சு. அநேக நாள் தனது வீட்டிலேயே டியூஷனுக்குப் பிறகு தம்மோடு உட்காரவச்சு சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவார்!''

''எனக்கு இப்போது நீங்கள் சொல்லாமலேயே கொஞ்சம் விளங்குது, அய்யா. அப்பாவை என் தாத்தா தன்னோட நிறுத்திவச்சு போட்டோ எடுக்கிறவரை ரொம்ப நெருங்கிப் பழகினார். என் அம்மா என் அப்பா மீது பிரியப் படுகிறதைத் தெரிஞ்சதும் ரத்தினசாமி அய்யாவுக்கு கணக்கு வாத்தியார் மேல் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. உண்மை தானே?''

''தான் கொடுத்த சம்பளத்துக்கு வேலை செய்ய வந்த வன் மருமகன் ஆகப் பார்க்கிறானே என்ற ஆத்திரம் அவருக்கு.''

கூச்சத்துடன் தரையில் விரலால் கோலமிட்டுக் கொண்டு இருந்த திலகா, மெல்ல தலையை நிமிர்த்தி தயக்கத்துடன் கேட்டாள்.

''சாதி வித்தியாசம் காரணமாக தாத்தாவுக்கு என் அப்பாவைப் பிடிக்கவில்லையோ?''

''சாதியோ சமயமோ அவர்கள் இடையே குறுக்கிடலை. உன் தாத்தா இந்த வட்டாரத்திலேயே பெரும்புள்ளி. உன் அப்பா ஒரு சாதாரண பள்ளிக்கூட ஆசிரியர். காசு பணம் இல்லாத ஒரு அனாதைப்பயல் துணிச்சலோடு பெண்கேட்க வந்துட்டானே என்று புலியாக சீறி எழுந்துவிட்டார். அப் போதே அவர்கள் இடையே பகை மூண்டது''

திலகா தரையையே பார்த்துக்கொண்டு இருந்தாள். "பிறகு?" என்று கேட்டுவிட்டு, கன்னத்திலே உருண்ட கண்ணீர்த்துளியை சட்டென்று விரலால் தட்டிவிட்டுக் கொண்டாள்.

"உயிருக்கு உயிராக நேசிக்கும் காதலர்களை எந்த சக்தியால் பிரிக்கமுடியும். எந்த சக்தி தடுக்க இயலும். ஒரு நாள் இரவு மிகவும் துணிவுடன் கட்டின புடவையுடன் உன் தாய் தன் காதலனுடன் கிளம்பி பட்டணம் போய் சேர்ந்து விட்டாள். அங்கே ஒரு கோயிலில் அவர்களுக்குக் கல்யாணம் நடந்தது. பின்னர் பதிவுத் திருமணமும் செய்து தங்கள் உறவை அழுத்தமாக்கிக் கொண்டனர். சுருங்கச் சொன்னால், "ரத்தினசாமி அய்யா பெண் கணக்கு வாத்தியாரோடு காணாமல் போயிட்டாள்"னு ஊர் அமளிப் பட்டது. மகள் எழுதிவச்ச காகிதத்தைப் பார்த்து தந்தை கொதித்துப் போனார். ஆள்வச்சு அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க ஊருக்குத் திரும்ப இழுத்துவரச் செய்தார். போலீசில் புகார் செய்தார்."

"நீங்கள் என் தாத்தாவின் நண்பர் என்கிற முறையில் அவருக்குப் புத்தி சொல்லவில்லையா?"

"யார் சொல்வதையும் கேட்கிற நிலையில் உன் தாத்தா இல்லை. அன்றிலிருந்து எங்களுக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டதும் உண்மை. அதற்குப்பின் நான் மெல்ல விலகிப் போய்விட்டேன்."

"அம்மாவையும் அப்பாவையும் இங்கே அழைத்து வந்து தாத்தா என்ன செய்தார்?"

"வயது வந்த பெண். அவள் இஷ்டப்பட்டவனை திருமணம் செய்துகொள்ள முடியும். அதனால் சட்டத்தின் மூலம் உன் தாத்தாவால் எதும் செய்ய இயலவில்லை. ஊர் பஞ்சாயத்தைக் கூட்டி நியாயம் கேட்டார். மனம் ஒன்று பட்டு அவர்கள் திருமணம் செய்துகொண்டபின் எதுவும் செய்வதற்கு இல்லை என்று நாட்டாண்மை தீர்ப்பு வழங்கி விட்டார். ஆத்திரம் தாங்காத உன் தாத்தா, தனது கால் செருப்பைக் கழற்றிக்கொண்டு, உன் தாயின் தலைமுடியைப் பிடித்துக்குலுக்கி, முகத்திலும் உடம்பிலும் இரத்தம் ஒழுக அடித்தஅடி...! நாங்கள் அவரைப் பிடிச்சு நிறுத்தாட்டா அன்னிக்கே உங்கம்மா காரியம் முடிஞ்சிருக்கும். அப்போது தான் எங்களுக்குத் தெரிந்தது. ரத்தினசாமி அய்யா கர்ப்ப மாக இருந்த தனது மகளை மிருகத்தனமா அடிச்சட்டார் னுட்டு எனக்கு அவர் மேலே ஒரே வெறுப்பு ஏற்பட்டு விட்டது."

தன்னையும் மீறிப் பொங்கிக் கன்னத்தில் வழிந்த கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள், திலகா.

"இதையெல்லாம் கேட்ட பிறகு எனக்கு என் தாத்தா வைப் பார்க்கக்கூட விருப்பமில்லை அய்யா!" திணறினாள் துயரத்துடன்.

"நீ கட்டாயம் அவரைப் பார்க்கணும். கர்ப்பிணியான மகளை அடித்து நொறுக்கி இம்சை செய்து, கணவனை ஒரு விபத்தில் இழந்து அனாதையாகி, கைக் குழந்தையுடன் பட்டணத்தில் திண்டாடிய மகள், மிகவும் கெஞ்சி எழுதிய கடிதத்திற்கு பதில் போடாது மனதைக்கல்லாக்கிக்கொண்டு இருந்தாலும், அனாதையா பெற்றுவிட்டுப்போன மகள் நீ தங்கச் சிலைபோல வளர்ந்து பட்டதாரியாகி, புத்திசாலியாக, அடக்கமாக வாழ்கிறாய். அவர் உதவியில்லாமல் இந்த அற்புதம் நிகழ்ந்திருக்கு என்று அவர் புரிஞ்சுக்க நீ கட்டாயம் அவரைப் பார்க்கணும் அம்மா!" மிகவும் உணர்ச்சி யுடன் கோபத்துடன் குமுறித்தீ பேசினார்.

"நீங்கள் சொல்கிறபடி நடக்கிறேன், அய்யா. என் அம்மாவையும் அப்பாவையும் பத்தி தெரிந்த கொண்டதும் மனம் ரொம்ப வேதனைப்படுகிறது" திலகா விம்மினாள்.

''பாவம், உன் தந்தை. பட்டணத்திலே ஒரு மோட்டார் விபத்திலே இறந்து போயிருந்தான். உன் வாழ்வின் நிலையே வேறுவிதமாகி இருக்கும். ஆனால் எல்லாம் நன்மைக்கு என்று எடுத்துக்குவோம். வருத்தப்படாதே அம்மா. உனக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கு என்பதை உன் தாத்தா புரிஞ்சுக்கணும். அவர் பணம் நமக்குத் தேவையில்லை. எங்கள் குடும்பத்துக்கு வேண்டியது, என் பாசத்தையும் மதிப்பையும் கவர்ந்துகொண்ட அனுசுயாவின் மகள் எங்கள் வீட்டு மருமகளாவதுதான். அதுவே பெரிய பாக்கியம் அம்மா'' என்றார், கிழவர்.

திலகா நிமிரென்று எழுந்து அவரது பாதங்களைத் தொட்டு கும்பிட்டாள். ''அந்த பாக்கியம் எனக்கும் வேணும். என்னை உங்கள் மனம் நிறைந்து வாழ்த்துங்கள் தாத்தா!'' என்று தழுதழுத்தாள்.

## 17

சில தினங்களுக்குப் பின்னர், ஒரு நாள் மாலை வேலை நிமித்தம் தஞ்சைக்கு போயிருந்த மேகநாதன் திரும்பியபோது ஒரு கடிதத்துடன் வந்திருந்தான்.

தஞ்சை நண்பர் வீட்டு முகவரியில், திலகா தான் வேலை பார்த்த விடுதியின் தலைவிக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் வந்து இருந்தது. தலைவி, அவள் கேட்டபடி தொடர்ந்து இரண்டு மாதம் சம்பளம் இல்லாத விடுப்பு தர சம்மதம் தெரிவித்து இருந்தாள். ஆனால் அதற்கு மேலும் திலகா கிராமத்தில் தங்க வேண்டியிருந்தால், அவள் பார்த்து வந்த வேலைக்கு வேறு ஒரு பெண்ணை நியமிக்க வேண்டி வரும் என்று கொஞ்சம் கண்டிப்பாகவே எச்சரித்திருந்தாள்.

''பார்த்தீங்களா அத்தை!'' என்று கடிதத்தை திலகா பூரணியிடம் நீட்டினாள்.

''உனக்கு இங்கே ஒரு பெரிய வேலை காத்துக்கிட்டு இருக்குதே. என் வீண் கவலை?'' பூரணி முறுவலித்தாள்.

''அது என்ன வேலைன்னு நானும் தெரிஞ்சுக்கலாமா?'' வேடிக்கையாகக் கேட்டபடி மேகநாதன் ஊஞ்சலின் மீது அமர்ந்தான்.

''நீ பெரிய ஆசாமி. தெரியாது போல நடிக்கிறாயே. இந்த வீட்டுக்கு மருமகளாகப் போகும் பெரிய வேலை திலகாவுக்குக் காத்துகிட்டு இருக்கே'' என்று பூரணி சிரித்த போது, மேகநாதனின் கனிவான பார்வையைச் சந்திக்க வெட்கி, திலகா சட்டென்று உள்ளே சென்று மறைந்து கொண்டாள்.

பூரணி குடும்பத்தாருக்கு அய்யனூர் அய்யனார் குல தெய்வம். எனவே, மாதம் இருமுறையேனும் அவள் அந்த கோவிலுக்குப் போகத் தவறமாட்டாள்.

அன்று மாலை பூரணி நைவேத்திய பொருள்களுடன் தங்கள் வீட்டு வில் வண்டியில் திலகாவை துணையாக அழைத்துக் கொண்டு கிளம்பியிருந்தாள்.

தெய்வ வழிபாட்டை முடித்துக் கொண்டு கோவில் வெளிப் பிரகாரத்தை மூன்று தடவை வலம் வந்து பூரணி கால் ஓய்ந்துபோய், சுவர் ஓரமாகக் கிடந்த பெரிய கருங்கல் மீது உட்கார்ந்து கொண்டாள். அருகில் வந்து கையை நீட்டிய சிறுவர்களுக்கு தேங்காய் பழங்களை விநியோகித்து விட்டு, அவள் கோவில் அர்ச்சகருடன் வரப் போகும் திரு விழாவைப் பற்றி பேசத் தொடங்கினாள்.

சாலை ஓரத்தில் இருந்த மரம் ஒன்றில் வண்டிமாடு களை அவிழ்த்து கட்டி புல்லை அள்ளிப் போட்டுவிட்டு சர்க்குச்சியால் பல்லை தோண்டிக்கொண்டு வண்டி ஓட்டி மாதன் கோவிலின் மதில் சுவர்மீது சாய்ந்துக்கொண்டு இருந்தான்.

வாயில் அருகே தெரியும்படியான தூரத்தில் பூசாரி, மிக அருகே வீட்டு வேலையாள் மாறன், கோவிலுக்குள் வந்து போய்க்கொண்டு இருந்த பக்தர்கள், வரப்பிலே கவனமுடன் வேலைக்குப் பின் இறங்கு துறையில் எதிர் பக்கத்திலே வாய்க்காலில் நீராடிக்கொண்டு இருந்த பெண்கள் என்றதொரு சூழ்நிலையில், திலகா பயமின்றி கோவிலைவிட்டு வெளியே வந்து, வாய்க்கால் கரை ஓரத்தில் நின்றபடி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அவளுக்கு அந்த கிராமம் மிகவும் பிடித்து இருந்தது. பட்டணத்தின் போக்குவரத்து நெரிசலும் புகைவிட்டுச் செல்லும் வாகனங்களின் சத்தமும் இன்றி அமைதியில் சலசலத்த வாய்க்காலும் அதற்கு அப்பால் மாலை வெயிலில் மஞ்சள் குளித்த நெற்பயிரைத் தொட்டு விளையாடிக் கொண்டு முகத்தில் வீசிய தென்றலின் சுகத்தையும் அனுபவித்தபடி, நீலத் தொடராகத் தெரிந்த மலைக்குப் பின், வானத்தை சிவப்பாக்கிக்கொண்டு கண்ணாமூச்சி விளையாடிய அந்திச் சூரியன் அழகை ரசித்தபடி தன்னை மறந்து நின்றுகொண்டு இருந்தாள்.

''இந்த கிராமம் ரொம்ப பிடிச்சுப் போயிட்டது, இல்லையா?''

தூக்கிவாரிப் போட திலகா திரும்பினாள்.

இதென்ன கூத்து? மார்த்தாண்டம் இங்கே எப்போது வந்தார்? திகைப்பால் வாயடைத்துப் போனாள்.

''எதிரே பார்க்கிறீங்களே, அது அத்தனையும் ரத்தின சாமி அய்யாவுடைய நஞ்சை நிலம்'' சொல்லிவிட்டு கண்களால் அவளை, அவன் அளந்தான்.

அவரது ஏராளமான சொத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறாளே இவள் என்ற எரிச்சலும் கோபமும் அவனது கண்களில் நன்றாகவே தெரிந்தன.



கோவில் முன்புறத்தில் நின்ற அந்த வாளேந்திய வீரனைப் போல ஓங்கி, உயர்ந்த அவனது தோற்றமும் வெறுப்பு நிறைந்த பார்வையும் அவளை அச்சுறுத்தின என்றாலும், அவன் தனது அருகே உதவிக்கு ஆள் இருக்கும் துணிவில், தன்னை சுதாரித்துக் கொண்டாள்.

''ரத்தினசாமி அய்யாவுடைய அந்தரங்க காரியதரிசி நீங்கள்தான்னு கேள்விப் பட்டேன், உண்மைதானே?'' தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்து புன்முறுவலித்தாள், திலகா.

''அன்னிக்கு உங்கள் அத்தைக்கு உதவி செய்ய உங்களை இங்கே தருவித்துக் கொண்டதாகச் சொன்னீங்க. ஏதோ ஒரு புத்தகம் எழுத தகவல் சேர்க்க இங்கே வந்து இருப்பதாக ஒரு பேச்சு பரவியிருக்கு. இதில் எது உண்மை!'' மார்த்தாண்டம் ஏளனமாகக் கேட்டான்.

''இரண்டும் உண்மைதான். அத்தைக்கு துணையாக கொஞ்ச நாள் தங்க வந்திருக்கேன். அப்படியே நான் எழுத விரும்பும் புத்தகத்துக்கு தகவல் சேகரிக்க விரும்புறேன். இன்னும் நான் அந்த காரியத்தை துவங்கவில்லை. அதற்குள் ஊரில் இப்படி ஒரு கதையா?''

''அப்படியா? நீங்கள் பிள்ளையார் சுழி வச்சு ஆரம்பிக்க போறதை ரத்தினசாமி அய்யாவிடம் இருந்து தொடங்குங்கள். ரொம்ப ராசியான ஆசாமி'' கடகடவென்று சிரித்தான், மார்த்தாண்டம்.

''நாற்பது ஆண்டு காலத்திலே விவசாயமும், மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலான பழக்க வழக்கங்களும் என்ற தலைப்பில் புத்தகம் எழுதப் போறேன். ஏழை விவசாயிகளை அணுகி அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் இன்பம், துன்பம், பழக்கவழக்கம் இவற்றைத்தான் நான் என் புத்தகத்தில் முக்கியமாக குறிப்பிடப் போகிறேன். ஆனால் ரத்தினசாமி அய்யா போன்ற பணக்கார விவசாயிகளிடம்

கேட்டுத் தெரிந்துகொள்ள எனக்கு அதிக சங்கதி இருக்காது" என்றான்.

மீண்டும் அவளை மேலும் கீழும் வெறித்தான் மார்த்தாண்டம்.

"ரத்தினசாமி அய்யாவை சந்திச்சு பேசினால் உங்களுக்கு ரொம்பப் பயன் உண்டு. நீங்கள் நினைக்கிறாப்பல அவர் பிறர் பார்வையிலே பணக்காரர் ஆகி உட்கார்ந்து நின்றும் ஆசாமியில்லை. உலக விவகாரம் தெரிஞ்சவர். அத்தனை சொத்துக்கும் வாரிசான தன் ஒரே மகளை அவளது மோசமான நடத்தைக்காக அடிச்சு விரட்டிய ஒரு தனிப் பெருமை அவருக்கு உண்டு. அதை எல்லாம் தெரிந்து கொண்டால் உங்கள் புத்தகம் மிகவும் சுவாரசியமாக இருக்கும்."

குபீர் என்று எழுந்த கோபத்தையும், நெஞ்சில் ஏற்பட்ட படபடப்பையும் அடக்கிக் கொண்டாள் அவள்.

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, அவளது தாயைப் பற்றி வேண்டும் என்றே துச்சமாகப் பேசி ஆத்திரத்தைக் கிளறுகிறான், அயோக்கியன்!

நிலகா சமாளித்துக் கொண்டு மெல்ல சிரித்தாள்.

"அவரது அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி எனக்கு ஆக வேண்டியது ஏதும் இல்லை. நான் சேகரிக்க விரும்பும் சங்கதிகள் பொருளாதார ரீதியில் இத்தனை ஆண்டுகளில் விவசாயம் எப்படி அபிவிருத்தி அடைஞ்சிருக்கு என்பதுதான் முக்கியம்."

"அப்படியா, ரொம்ப மகிழ்ச்சி. உங்களுக்கு ரத்தினசாமி அய்யாவை பார்க்கணும்னு தோணிச்சுன்னா, ஒருவார்த்தை சொல்லி அனுப்புங்கள். அவரைச் சந்திக்க நான் ஏற்பாடு செய்கிறேன்."



"மிக்க நன்றி. தேவைப்பட்டால் கட்டாயம் உங்கள் உதவியை நாடுவேன்" கூறிவிட்டு கோவில் பக்கம் திரும்பி நடந்தாள்.

எதிர்ப்புறமாக சாலையில் போகமுயன்ற மார்த்தாண்டம் சட்டென்று அவள்பக்கம் திரும்பி, "உங்களை நான் இதுக்கு முன்னாடி எங்கேயோ பார்த்தது போல ஒரு நினைப்பு ஏற்படுது. அது ஏன்?" என்று கேட்டான்.

அவனது நறுக்குமீசையும் உதடும் உணர்ச்சிவசத்தில் துடிப்பதை கண்ணுற்றாள், நிலகா.

"உங்களையும் நான் எங்கோ பார்த்ததுபோலத்தான் ஒரு நினைப்பு ஏற்படுகிறது. நான் இந்த ஊருக்கு வரும் போது, பஸ்ஸில் பார்த்துக் கொண்டோம் இல்லையா? அதன் பாதிப்பு. அதைத்தவிர நீங்கள் என்னை இதுக்குமுன் எங்கே பார்த்திருக்க முடியும்? நானும் உங்களை எங்கே பார்த்திருக்க இயலும்? சொல்லுங்கள். இது வீண்பிரமை" கலகலவென்று சிரித்தாள்.

மார்த்தாண்டம் தாடை இறுக, அவளைக் கண்களால் கோபத்துடன் நொறுக்கிவிட்டு, "வரேன். வணக்கம்" என்றபடி வேட்டி நுனியைக் கையில் இழுத்துப் பிடித்துக் கொண்டு பாதணிகள் பலமாக சத்தம்போட சாலையின் எதிர்த் திசையில் வேகமாக நடந்தான்.

அவளது பார்வையில் தெரிந்த குரோதம் அவன் உடலை நடுங்கச் செய்தது.

மார்த்தாண்டம் உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறான். அவள் யார் என்று அறியும் வரை அவன் அமைதி அடையமாட்டான். இந்த நிலையில், அவள் தன் பாட்டனை எப்படி சந்திக்க முடியும்? எண்ணி கலவரம் அடைந்தாள்.

## 18

மறுநாள் காலை.

நிலகா அடுக்களை அறையில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்த சமயம் அவளைக் காண குருமூர்த்தி வந்தார்.

''தாத்தா வந்திருக்கார். நீ போய் பேசிக்கிட்டிரு. நான் சமையலைக் கவனிச்சுக்கிறேன்'' என்ற பூரணி, காபி தம்ளருடன் அவளைக் கூடத்திற்கு அனுப்பி வைத்தாள்.

காபி தம்ளரை முக்காலிமீது வைத்துவிட்டு, கிழவர் மெல்ல கூடத்தில் மேலும் கீழுமாக யோசனையுடன் நடந்தார்.

அவர் முகத்தில் வழக்கமான குறும்பு சிரிப்பின் மலர்ச்சிக்கு பதில் கவலையின் ரேகை சிறிது காணப் பட்டது.

''உன்னைப் பார்த்து சில நாளாச்சேன்னு வந்தேன். கதவைத் திறந்த உடனேயே பூரணி நேற்று கோயில் கிட்ட நடந்த விவகாரத்தைச் சொல்லிவிட்டாள். இந்த மார்த் தாண்டம் உன்னை நிழல்போல தொடர்ந்து வருவதைப் பார்த்தால், எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது'' என்றார், கிழவர்.

''அந்த மொட்டைக் கடிதத்தில் குறிப்பிட்டபடி என் உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும்னு நினைக்கிறீங்களா ஐயா!'' அச்சத்துடன் கேட்டாள், நிலகா.

காயத்திரி இல்லத்தில் யாருமற்ற அனாதை என்ற நிலையில் வளர்ந்தபோது அவளுள் ஒரு எண்ணம் சில சமயம் தோன்றுவதுண்டு.



தாய் யார்? தந்தை எவர் என்ற பூர்வீகம் தெரியாது. இப்படி எதிலும் ஒட்டாத ஒரு வாழ்க்கை தேவையா? இதை விட சாவு எவ்வளவோ மேல்! என்று மனம் கசந்து, உணர் வுகள் தொய்ந்துவிடும்போது அவள் எண்ணுவதுண்டு. ஆனால், இப்போது, அவளுக்கு உயிர் வெல்லமாக இனித்தது. அவளுக்காக காத்து இருந்த அந்த இனிய வாழ்வுக்காக அவள் நீண்டகாலம் வாழ விரும்பினாள். எனவே அவளையும் அறியாது அவள் உடல் பயத்தில் பதறியது.

''அப்படி ஒரு ஏடா கூடமான காரியத்தைச் செய்ய மார்த்தாண்டத்துக்கு துணிச்சல் இருக்காது. ஆனால், இனியும் நீ உன் தாத்தாவை சந்திக்காது நாளைக் கடத்தி கிட்டு இருப்பது நல்லது அல்ல. மேகநாதனிடம் சொல்லி சீக்கிரம் சந்திக்க ஏற்பாடு செய்யணும். ரத்தினசாமி அய்யாவுக்கு வயது கோளாறினாலும், மன உளைச்சலாலும் ஆரோக்கியம் கெட்டுவிட்டது. முன்போல அவர் வயல் வெளிப் பக்கம் வருவதே இல்லை. வீட்டோடவே தங்கியிருக் கிறார். மார்த்தாண்டம் தஞ்சையில் இருந்தும், பட்டணத்தில் இருந்தும் பெரிய டாக்டர்களை வரவழைத்து அவரைக் கவனிக்கச் செய்தான். அய்யாவுக்கு அதெல்லாம் பிடிக்க வில்லை. மேகநாதன் ஒருத்தனை கவனிக்கச் செய்தால் போதும்னு சொல்லிவிட்டார். மேகநாதனின் கைராசி மேல் பெரியவருக்கு அத்தனை ஒரு நம்பிக்கை. மேலும், அவன் என் பேரன் என்ற ஒரு பிரியம்'' என்றார்.

'மார்த்தாண்டம் இந்த சங்கதியில் குறுக்கிட வில்லையா!'' நிலகா வியப்புடன் கேட்டாள்.

''அவனுக்கு பெரியவரிடம் ரொம்ப பயம். எடுபிடி ஆளாக வந்து ஒட்டிக்கொண்டு உயர்ந்துவிட்டு இருக்கிறவன், அவரது சொத்தில் ஒரு பகுதியையாவது அடித்துக்கொண்டு போய்விட வேண்டும் என்கிற திட்டம் அவனுடையது. சொந்த மகளையே மிரட்டிவிட்ட முரட்டு மனிதரிடம் நேரிடையாக எதிர்த்துக்கொள்ள அச்சம். யோசித்துக்

கொண்டு அவனையும் ... அவருக்கு எத்தனை நேரம் பிடிக்கும். தயவாகப் பேசி, அவருக்குத் தாளம் போட்டு, அவர் உயிலில் தனக்கு ஒரு பெரும் பகுதியை எழுதி வாங்கிக்கொள்ள தூண்டிக்கொண்டு இருக்கான்னு கேள்வி. உயில் எழுதப்பட்டதா, இல்லையா என்று எனக்குத் தெரியாது.''

அவர் பேசி முடிக்கும் முன் வாயிற் கதவு இடிபடும் ஓசை கேட்டது.

திலகா ஓடிச்சென்று நடை ஓரமாக இருந்த சன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தாள்.

தெருவில் மேகநாதனின் கார் திரும்பியது தெரிந்தது. கட்டுக்கொள்ள மகிழ்ச்சியுடன் கனமான தாழ்ப்பாளை விரைவில் நீக்கிக் கதவைத் திறந்தாள்.

பூரணியும் தாத்தாவும் பின்னால் நடைவருகே வந்து விட்டதை கவனித்த மேகநாதன், தான் சொல்ல நினைத்த காதல் மொழிகளை நெஞ்சுக்குள்ளே அடக்கிக் கொண்டு கனிவுடன் அவளைப் பார்த்தான்.

''தாத்தாவும் இங்கே இருப்பது நல்லதாப் போச்சு!'' என்று கூறியபடி கை கால்களைக் கழுவ முற்றத்தில் இறங்கினான், மேகநாதன்.

தாத்தா குருமூர்த்தி நாற்காலியில் அமர்ந்தார். பூரணி ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டாள்.

''குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்தா போதும். இப்பத்தான் ரத்தினசாமி அய்யா வீட்டிலே எனக்கு காபி, பலகாரம், ஓவல் எல்லாம் கிடைச்சது.'' சிரித்துக்கொண்டே கையை துண்டில் துடைத்துக்கொண்டு, ஊஞ்சலில் ஒரு பக்கம் வந்து அமர்ந்துகொண்டான்.

விலாமிச்சிவேர் வாசனை மணக்க, பானையில் சில்லென்று நிறைந்து கிடந்த தண்ணீரைத் தம்ளரில் நிறைத்துக்கொண்டு பரபரப்புடன் வந்தாள், திலகா.

பாட்டன் பெயரைக் கேட்டதுமே அவளையும் அறியாத ஒரு ஆவலில் நெஞ்சு படபடத்தது. தம்ளரை முக்காலி மேல் வைத்துவிட்டு, தரையில் ஒருபுறம் உட்கார்ந்து கொண்டாள்.

''வழக்கம்போல நான் காலையில் முக்கியமான நோயாளிகளை கவனித்துவிட்டு, கடைத்தெரு கிளினிக்குக்குப் புறப்பட காரை எடுத்தேன். ரத்தினசாமி அய்யா வீட்டு வேலை ஆள் தலைதெறிக்க ஓடிவந்தான். ''டையோட உங்களை அய்யா கூட்டிவரச் சொன்னார்'' என்றான்.

''திடீர் மனிதருக்கு ஏதாவது மாரடைப்போன்னு கலவையுடன் மருந்துப் பெட்டியோடு,காரில் அவனையும் ஏத்திகிட்டு, நேரே வடக்குத் தெருவுக்கு வண்டியை ஓட்டினேன்.''

''முன்கூடத்திலே சாய்மான நாற்காலியில் மனிதர் குத்துக்கல் போல உட்கார்ந்து இருந்தார். அவர் பின் கையைக் கட்டிக்கொண்டு மெய்க்காப்பாளன் போல நிற்கும் மார்த்தாண்டத்தைக் காணவில்லை.

'' 'தம்பி மேகா! பயந்து விட்டியா? உடம்பு எப்போதும் போலத்தான் இருக்கு. வேறு புது கேடு ஏதும் வந்துவிடவில்லை. மார்த்தாண்டத்தை தஞ்சாவூருக்கு கணக்குப் புத்தகத்தோட ஆடிட்டரைப் பார்க்க அனுப்பி வச்சிருக்கேன். இப்போது எனது அருகே யாரும் இல்லை. உன்கிட்ட முக்கியமா கொஞ்சம் பேசணும். அதனால்தான் வரச் சொன்னேன்' என்றார்'' என்று மேகநாதன் கூறிவிட்டு ஒரே மூச்சாகத் தண்ணீரைக் குடித்தான்.

''என்ன பேசணும்னு கூப்பிட்டாராம்'' பூரணி தாங்க முடியாத ஆவலில் கேட்டுவிட்டாள்.

''டாக்டர் உடம்புக்கு ஏதாச்சுமோன்னு பயந்துவிட்டேன். அதனால்தான் நேரே ஓடிவந்தேன்'' என்று ஆரம்பிச்சேன்.

''இருக்கிற நோய்களை எல்லாம் வச்சுகிட்டு நான் நூறு வருடம் வாழ்ந்துடுவேன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. அதை விட்டுத்தள்ளு. இப்ப நான் கேட்கிறதுக்கு சரியான பதில் கிடைக்கணும். உன் அக்கா பூரணியம்மாள் வீட்டிலே யாரோ தூரத்து உறவுப் பெண் ஒருத்தி, ஏதோ புத்தகம் எழுத, தகவல் சேகரிக்க நம் கிராமத்துக்கு வந்திருக்காளாமே, உண்மையா?'' என்று கிழவர் கேட்டபோது திடுக்கிட்டுப் போனேன்.

''உண்மைதான் அய்யா'' என்றேன் நான்.

''வருகிற வெள்ளிக்கிழமை, மார்த்தாண்டத்தை பட்டணத்துக்கு அனுப்பப்போறேன். வர நாளுநாள் பிடிக்கும். வீட்டிலே யாரும் இருக்கமாட்டாங்க. அதுசமயம் நீ அந்தப் பெண்ணை இங்கே அழைச்சுட்டுவர முடியுமான்னு கேட்கத் தான் கூப்பிட்டேன்.''

நான் வியப்போடு போது நிற்பதைக் கண்டு ரத்தின சாமி அய்யா சிரித்தார்.

''என்ன அப்படி அசந்து போயிட்டே? மார்த்தாண்டத் தான் இந்த விஷயத்தை என் கிட்ட பேச்சோடு பேச்சா சொன்னான், ஏன் சொன்னான்னு எனக்கும் மனதிலே ஒரு நெருடல். அந்தப் பெண்ணை அவன் வேறே எங்கேயோ பார்த்தது போல நினைப்பு இருக்கு என்றும் சொன்னான். அவன் உன்னைப் போல பெரிய படிப்பெல்லாம் படிச்சவன் இல்லை. ஆனால், படு புத்திசாலி. அவன் என்ன சொல்ல நினைக்கிறான் என்பதை நான் ஊகித்துக்கிட்டேன். என் ஊகம் சரியான்னு தெரிஞ்சுக்க நான் அந்தப் பெண்ணை நேரில் பார்க்க விரும்புகிறேன்'' என்றார்.

''அதுக்கென்ன, வருகிற வெள்ளிக்கிழமை நீங்கள் வரலாம்னு ஆள் அனுப்பிச்சவுடன், நானே அவளை என்



காரில் அழைச்சுகிட்டு வந்து உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். படித்த பெண். ரொம்ப அடக்கமான பெண். பார்த்ததுமே உங்களுக்கு பிடிச்சுடும்'' என்று சொன்னேன். ரத்தினசாமி அய்யா மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டினார். இப்படி வழியிலேயே மீண் திலகாவுக்கு பாட்டன் வீட்டே இருந்து ஒரு ஊர்வேற்பு வந்திருக்குக்கிற சங்கதியைச் சொல்லத்தான் ஓடிவந்தேன்'' என்றான், மேக நாதன்.

''இருக்குந்தான் சொல்வாங்க, பருத்தி புடவையா காய்ச்சதுன்னு. திலகாவின் காரியத்தில் ஒரு அழகானப்பட்டுப் புடவையாகவே காய்ச்சட்டுது. என்னம்மா தாத்தாவை பார்க்கப் போறியா, பிறகு எங்களை எல்லாம் மறந்துடாதே அம்மா!'' கண்களைச் சிமிட்டி குறும்புத்தனமாக சிரித்தார், குருமூர்த்தி.

திலகாவுக்கு மகிழ்ச்சி கட்டுக்கொள்ளவில்லை. தாத்தாவே அவளைப் பார்க்க விரும்புகிறாரே? ஆச்சரியம்! நெஞ்சு ஆவலில் துரிதமாகத் துடித்தது.

## 19

இரவு முழுவதும் திலகாவுக்கு அதே நினைப்புதான். உறக்கம் வராது பலமுறை புரண்டு படுத்தாள்.

இத்தனை நாளாக ஆவலுடன் காத்திருந்த அந்த மகத்தான சந்திப்பு, மறுநாள் காலை நிகழப்போகிறது. அவள் தன் தாத்தாவைப் பார்த்தவுடன் முதலில் என்ன பேச வேண்டும்? எப்படி நடந்துகொள்ளவேண்டும்? பலதிறுமாகத் தன்னுள் ஒத்திகை செய்து, முடிவில் களைத்துப்போய் உறங்கிவிட்டாள்.

"என்னம்மா? இன்னிக்கு சீக்கிரம் எழுந்து தலை முழுகிட்டு, பூஜை, காபி, பலகாரம் முடிச்சுட்டு கிளம்பணுமே, இன்னுமா தூக்கம்?" பூரணி அன்புடன் தோளைப் பிடித்து உலுக்கியதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள், திலகா.

"அட! பொழுது நல்லாவே விடிஞ்சி போச்சே!" பரபரப்புடன் செயல்பட்டு குறித்த நேரத்தில் அவள் தயாராகி விட்டாள்.

குருமூர்த்தி வாங்கிக் கொடுத்த அதே பட்டுச் சேலையை அணிந்துகொண்டு, முத்துக் காதணி, முத்து மாலை, தன் தாயின் தங்கச் சங்கிலி -மோதிரம் என்ற அலங்காரத்தோடு வாரி முடித்திருந்த கூந்தலில் மல்லிகைச் சரத்தைச் சூட்டிக் கொண்டு இருந்தாள்.

மேகநாதன் சொன்ன நேரத்திற்கு காருடன் வந்து விட்டான்.

வடக்குத் தெருவுக்குள் கார் நுழையும் முன்பே அவள் நெஞ்சு பதட்டத்தில் படபடக்கத் தொடங்கியது.

நெற்றி, கன்னம், கழுத்து, உள்ளங்கை எங்கும் பயத்தில் வியர்த்துக் கொட்டவே, இடுப்பில் சொருகியிருந்த கைக்குட்டையை இழுத்து மெல்லத் துடைத்துக்கொண்டாள்.

மூங்கில் வேலியுடன் இணைக்கப்பட்டு அகலமாக திறந்து கிடந்த கேட் அருகே காரை சற்று நிறுத்தினான், மேகநாதன்.

"இதை உன் கைப்பையில் பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொல்லி என் தாத்தா அனுப்பியிருக்கிறார்" என்றபடி, குருமூர்த்தி அனுப்பியிருந்த கடிதங்கள், புகைப் படம் கொண்ட பிளாஸ்டிக் உறையை அவளிடம் தந்தான்.



திலகா அதை வாங்கி அவசரமாக தன் கைப்பைக்குள் திணித்துக்கொண்டாள். தோட்டத்திற்குள் கார் நுழைந்து நடைபாதை மீது ஊர்ந்தபோது இரு பக்கமும் கண்களை ஓட்டி பிரமித்துப்போனாள். "அடே அப்பா! எத்தனை மரங்கள், எத்தனை விதமான பூச் செடிகள்?" என்று உரக்க கூவிவிட்டாள்.

"உன் தாத்தாவுக்கு ரசனை உணர்வு ரொம்ப அதிகம். தோட்டம் எத்தனை அழகாக இருக்கோ அதைவிட வீட்டின் உட்புறம் அழகா துப்புரவா காணப்படும்" என்றான், மேகநாதன்.

கார் நின்றதும் கைப் பையுடன் இறங்கி, படிகள் மீது ஏறி சிவப்பு சிமெண்ட் பூசிய திண்ணைகளிடையே நடை பாதையில் மெல்ல நடந்து உள்ளே புகுந்தாள். கம்மென்று மல்லிகையும்—சந்தனமும் கலந்த கலவை மணம் முகத்தில் மோதுவதை உணர்ந்து பிரமிப்புடன் கண்முன் விரிந்து தெரிந்த அந்த பெரிய முற்றத்தை திகைப்புடன் பார்த்தாள்.

மேகநாதன் கண்களால் சாடை காட்டினான், கால் பாதணிகளை நடையில் கழற்றிவிட்டு, நான்கு தாழ்வாரங் களிலும் ஓங்கி உயரமாக நின்ற பச்சை வண்ணத் தூண்களை வியப்புடன் பார்த்தபடி, தாழ்வாரத்திற்குள் காலை வைத் தாள். முற்றத்துக் கம்பித் தடுப்புகளைத் தாண்டி காற்று சில்லென்று சுகமாக வீசியது.

அவள் தாய் பிறந்து வளர்ந்தது இத்தனை பெரிய வீட்டிலா? செல்வத்தின் சூழ்நிலையிலா? அருமையும் பெருமையுமாக வளர்க்கப்பட்டவள் முடிவில் அனாதையாக ஆஸ்பத்திரியில் காச நோயால் உபாதைப்பட்டு அல்லவா இறந்துபோனாள். என்ன கொடுமை? துக்கம் நெஞ்சைக் கவ்வ, கண்கள் ஈரமாக அவள் கூடத்தின் பக்கம் திரும்பினாள்.

சலவைக்கல் பாவிய பெரியதொரு கூடம். கருங்காலியில் பளபளத்த வெள்ளி குமிழ் போட்ட ஊஞ்சல் கம்பீரமாகத்

தொங்கிக் கொண்டு இருந்தது. அருகே சாய்மான நாற்காலியில் வெள்ளை வெளேர் என்று ஒரு உருவம். பிடியில் அடங்கிப் போகும் மெலிந்த உடல் சாய்ந்து கிடப்பதைக் கண்டாள்.

அவள் தாயை ஆட்டிப்படைத்து அனாதையாக்கி அலையவிட்ட அக்கிரமக்கார தாத்தா ரத்தினசாமி அய்யாவா அது?

தும்பைப் பூவாக நரைத்த தலை. பட்டையாக நெற்றியில் விபூதிப்பட்டை, உள்ளடங்கிப்போன கண்கள், ஒட்டிய தாடை, எலும்பும் தோலுமாகிவிட்ட உடல் மீது போர்த்தியது போன்று வெள்ளை சட்டை, வேட்டி. சட்டைக் கழுத்துக்கு மேல் தெரிந்த முகமும்—கைகளுக்கு கீழ் தெரிந்த கரங்கள் எல்லாம் வெளேரென்று சோகை பிடித்தாற்போல, இரத்த பசையின்றி ஒரு வெள்ளை உருவமாக ஒரு ஆள் வந்து சாய்ந்துகொண்டு இருப்பது போன்ற அதிர்ச்சி கலந்த வியப்பைத் தந்தது.

திலகாவைக் கண்டதும் படக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தார், ரத்தினசாமி அய்யா.

''வாம்மா! வா தம்பி! உட்காருங்க'' எதிரே கூடத்தில் தயாராகப் போடப்பட்டிருந்த இரண்டு பிரம்பு நாற்காலிகளைக் காட்டினார். நாராக நலிந்து கிடந்த அந்த உடலில் இன்னமும் வலு இருக்கிறதா? குரலில் எத்தனை மிடுக்கு! வியப்பில் கண்கள் விரிய, பணிவுடன் கும்பிட்டு விட்டு, தயங்கியபடி அவர் எதிரே நாற்காலியில் உட்கார்ந்தாள்.

இது உண்மையா? அவள் எதிரே சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து இருக்கும் அந்த உருவம் அவளது தாய் வழிப் பாட்டனா! நெஞ்சு பதற வாயும் தொண்டையும் காய்ந்த நிலையில் அவள் மெல்ல நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

''என்ன சாப்பிடறீங்க? பூரணி அம்மா காபி, பலகாரம் கொடுத்துதான் அனுப்பியிருப்பாங்க. தாகத்துக்கு நல்ல



செவ்விளநீர் கொண்டு வரச் சொல்றேன். ஐஸ் போட்டு சாப்பிடுகிற காலம்தானே? ஆச்சரியமா இருக்கா? பட்டிக் காட்டில் இருந்தாலும் இந்தக் கிழவன் பட்டணத்து வசதிகள் எல்லாத்தையும் செய்து வச்சுக்கிட்டு இருக்கான் தெரியுமா? இதோ பார் அம்மா. இந்த பட்டனை அமுக்கினால் சமையல் ஆள் ஓடி வருவான். இதை அமுக்கினால் புழக்கடையில் இருந்து வேலையாள் ஓடிவருவான். இது மாந்தோப்பு ஆளை அழைக்கிற மணி...'' சொல்லிவிட்டு, பொக்கை வாய் நிறைய சிரித்துக்கொண்டு சாய்மான நாற்காலி அருகே மேசை ஓரத்தில் பொருத்தப்பட்டு இருந்த நீல வண்ணப் பட்டனை அமுக்கினார். கிர்... என்ற ஓசை கூடம் முழுவதும் ரீங்காரமிட்டது.

''என்னங்க?'' கைகளைக் கட்டியபடி சமையல் அறையில் இருந்து விரைந்து வந்து முன் நின்றார், சமையல்காரர்.

''தாகத்துக்கு செவ்விளநீர் மூன்று வெள்ளித் தம்ளரில் ஐஸ் போட்டு எடுத்து வா. நேத்து முப்புரமா பலகாரம் செஞ்சிட்டு இருந்தியே அதுகளையும் தட்டில் எடுத்து வச்சுக் கொண்டு வா.'' கிழவர் உத்தரவிட்டார்.

முன் ஏற்பாடு போலும். ஒரு சில நிமிடங்களில் அவர் சொன்னபடி தட்டில் ரவாலாடும், கார முந்திரி பருப்பும், வெள்ளி தம்ளரில் ஐஸ் துண்டங்கள் மிதந்த இளநீருமாக வந்த சமையல்காரர், அவைகளை வைத்துவிட்டு அப்பால் சென்று விட்டார்.

''டாக்டர் சாப்பிடுங்க. உன் பேர் என்ன சொன்னே?'' கிழவர் காதைக் கையால் வளைத்தபடி கேட்டார்.

''திலகா'' என்றாள் மெல்லிய குரலில்.

''அழகான பெயர். நீயும் எடுத்துக்கோம்மா. தெய்வசக்தி செய்த லாடு. பட்டணங்களில் சுத்தமான நெய்

எங்கே கிடைக்குது'' என்றபடி ரத்தினசாமி அய்யா அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''நீங்கள் பேசிக் கொண்டு இருங்கள். நான் பக்கத்து தெருவிலே ஒரு நோயாளியைப் பார்த்துவிட்டு பத்து நிமிஷத்திலே வந்துடறேன்.'' மேகநாதன் இளநீர் தம்ளரை ஒரே மூச்சில் காலி செய்து விட்டு வெளியேறிவிட்டான்.

தனியே அவருடன் விடப்பட்ட திலகாவின் நெஞ்சு அச்சத்தில் வேகமாக அடித்துக் கொண்டது. இளநீர் தம்ளரை கையில் எடுத்துக்கொண்டு நிமிர்ந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

உள்ளே வந்து உட்கார்ந்து சிறிது நேரம் ஆகியும் அவள் என் இன்னும் அதைப் பார்க்கவில்லை. அவளது நினைவு முழுவதையும் ரத்தினசாமி அய்யாவே ஈர்த்துக்கொண்டு விட்டதாலும், வெயிலின் வெளிச்சத்தில் இருந்து உள்ளே வந்ததாலும் சட்டென்று கிழவரது தலைக்குமேல் தொங்கிய அந்தப் படத்தை அவள் பார்க்கத் தவறிவிட்டாள்.

பளிச்சென்று இப்போது அந்தப் படம் கண்களில் பட்டது. அவள் தாய் அனுசுயாவின் படம். அவளிடம் இருந்த பிளாஸ்டிக் உறைக்குள் இருந்த புகைப் படத்தின் பெரிய அளவு அது.

சந்தனச் சட்டத்திற்குள் அடங்கி, மல்லிகை மாலை அணிந்து, ஊதிவத்தி புகை சூழலிலே...அம்மா படத்தில் இருந்தபடி மகளைப் பார்த்து மென்மையாகப் புன் முறுவலித்தாள்.

வெள்ளி தம்ளரைப் பிடித்திருந்த கரம் நடுங்கியது. கண்களில் நீர் புரண்டது.

''என்ன? அந்தப் படத்தைப் பார்க்கிறியா அம்மா? அவள் இறந்துபோன என் மகள் அனுசுயா...'' கிழவரின் பார்வை திலகாவின் முகத்தைக் கூர்மையாக ஆராய்ந்தது.

# 20

செவ்விளநீருடன் கண்ணீர் கலந்து உதட்டில் உப்பாகக் கரித்தது. சட்டென்று கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள், திலகா.

நெஞ்சைப் பருகபோட்டு பாசம் எனும் உணர்வைத் துடைத்து எறிந்துவிட்ட கல்மனம் படைத்த கிழவர் அவர் என்பதில் சந்தேகம் இல்லை.

அடித்து வைத்த சிலை போல சலனமில்லாது திலகா அழுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார், ரத்தினசாமி.

''ஏன் அம்மா வருத்தப் படறே?'' என்று ஒரு வார்த்தை கூட அவரிடம் இருந்து வெளிப்படவில்லை.

''பெற்ற பெண்ணையே அடித்துத் துரத்திவிட்டு தன்னைத் தனியாக தனது சொத்தைப் பூதம் போல காத்துக் கொண்டு இருக்கும் அவரிடம், அவள் கருணையையும் மதிப்பையும் எதிர்பார்ப்பது தவறு. போகட்டும், வந்த காரியம் ஓரளவு வெற்றி பெற்றால் போதும்.'' தனக்குள் பலவும் எண்ணி அவள் குமைந்துகொண்டு இருந்தாள்.

''ஒன்னும் சாப்பிடவில்லையா? உனக்காகத்தான் தவசுப்பிள்ளை தயாரித்திருக்கான்.''

அவள் பதிலுக்கு வேண்டாம் என்ற பாவனையில் தலையை ஆட்டினாள். எப்படித் தொடங்குவது என்ற உணர்ச்சிப் போராட்டத்தில் அவளால் பேச முடியவில்லை.

'' 'நாற்பது ஆண்டு காலத்தில் விவசாயமும், மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களும்' என்று... பெரிய

தலைப்பா பொறுக்கி எடுத்து வச்சிருக்கியே, நீ எழுதப் போகிற புத்தகமும் ரொம்பப் பெரிதாக இருக்குமா, அம்மா?''

அவரது கேலிப்பேச்சு சுருக்கென்று முள்ளாகத் தைத்தது. ''உங்கள் அந்தரங்க காரியதரிசி எல்லாத்தையும் சொல்லிவிட்டாரா?'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''சொன்னதுந்தான் உன்னைப் பார்க்கணும்னு ஒரு வேகம் வந்தது. அவன் சொன்னது அத்தனையும் உண்மை. படித்த பெண். பார்க்க நல்லாவே இருக்கிறாள் என்றான். ரொம்ப பணிவான பெண் என்கிறதையும் புரிஞ்சுக் கொண்டேன்.''

''என்கிட்ட ஒரு வார்த்தைகூட பேசலை. அதுக்குள்ளே என் குணத்தை எப்படி புரிஞ்சு கொண்டுட்டீங்க அய்யா? புகழ்ச்சிக்கு நன்றி...''

''புகழ்ச்சியில்லை. உண்மை. நீ உள்ளே வருமுன் கால் செருப்புகளை கழற்றி நடையில் போட்டுவிட்டு மேல் சேலையை சரி செய்து தலைப்பை இழுத்து மூடிக்கொண்டு, சுற்று முற்றும் அனாவசியமாகப் பார்க்காமல் பூமி அதிரும் படி நடக்காமல் மெல்ல வந்தியே... அதிலே பணிவு தெரிந்தது.''

''உங்கள் பேத்தி அனாதை இல்லத்திலே பல ஆண்டுகள் வாழ்ந்தாள் இல்லையா? அங்கே கற்றுக்கொண்ட நல்ல வழக்கங்களில் பணிவும் ஒன்று.''

''பேத்தியா?'' கிழவர் குரலில் ஆச்சரியம் அதிகமாக தொனித்தது.

''உங்கள் சந்தேகத்தை தெளிவுபடுத்திக் கொள்ளத் தானே இங்கே என்னை வரவழைச்சீங்க. எனக்கும் உங்களைப்போல சில சங்கதிகளை ஊகித்துப் புரிஞ்சுக்கிற குணம் உண்டு. பரம்பரையா பாட்டன் கிட்டேயிருந்து



வந்த சொத்து அது.'' இரவு முழுவதும் செய்த ஒத்திகையை மீறி வார்த்தைகளைச் சூடாக படபடவென்று உதிர்த்துவிட்டு பையைத் திறந்து பிளாஸ்டிக் உறையை எடுத்தாள். அவள் தாய் எழுதிய இரு கடிதங்களையும் அந்த சிறு புகைப்படத்தையும் எடுத்து அவரிடம் நீட்டினாள்.

''உங்கள் தலைக்கு மேலே இருக்கிற படத்தின் சிறிய அளவு இது. என் தாயின் படத்தைப் பார்த்துவிட்டு என்னையும் பார்த்த மார்த்தாண்டம் ரொம்பவும் மிரண்டு போயிருக்கிறார். ரொம்ப சந்தேகம் ஏற்பட்டு இருக்கு. சாயலில் நான் என் தாயைப் போல் இருப்பதாக பூரணி அம்மாள் கூட பல தடவை என்னிடம் சொல்லியிருக்காங்க. இந்தப் படம் அதை நிரூபிக்கிறது. என்னையே நான் கண்ணாடிக்குள் பார்த்துக்கொள்வதுபோல இதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஒரு பிரமிப்பு ஏற்படுவதுண்டு.''

மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டு கடிதங்களை எடுத்து பிரித்துப் படித்தார் அவர்.

கிழவரது வைராக்கியம் பொடியாகுவது போல, கடிதத்தைப் பிடித்திருந்த அவரது கரங்கள் நடுங்குவதை திலகா கவனிக்கத் தவறவில்லை.

''இந்தக் கடிதங்களை என் மகள் அநுசுயாதான் எழுதியிருக்கிறாள், ஒத்துக்கொள்கிறேன். எங்கே அந்த மோதிரத்தை'' கிழவர் குரலில் வேண்டிய அளவு கடுமை சேர்த்துக்கொண்டு அதட்டினார்.

தன் விரலில் அணிந்து கொண்டு இருந்த வைரமோதிரத்தை உருவி திலகா அவரிடம் கொடுத்தாள்.

மேசை இழுப்பறையில் அவர் வைத்திருந்த பூதக் கண்ணாடியை எடுத்து அந்த மோதிரத்தின் உள்ளே அச்சாகி இருந்ததை ஆராய்ந்தார். ''இதுவும் அநுசுயாவின் மோதிரம்தான். அவளது பதினேழாவது பிறந்த நாளுக்கு

நான் தஞ்சையில் இருந்த கோகுல்நாத் நகைக் கடையில் செய்யச் சொல்லி வாங்கிப் பரிசாகத் தந்தது.''

''என் கழுத்தில் போட்டு இருக்கிற தங்க சங்கிலி என் தந்தை அம்மாவுக்குக் கொடுத்த பரிசு. அதை நீங்கள் பார்க்க விரும்பமாட்டீங்கன்னு நினைக்கிறேன்.''

வெடுக்கென்று நிமிர்ந்தார் கிழவர். மூக்குக்கண்ணாடி வழியே அவளை வெறித்துப் பார்த்தார்.

''இவை எல்லாம் என் மகளுடையவை ஒத்துக்கிறேன். இதைக் கொண்டு வந்த நீ என் பேத்தி என்று எப்படி நிரூபிக்க முடியும்? அனுசுயா போன்ற சாயலில் உள்ள ஒரு பெண், நடந்த விவகாரத்தைத் தெரிந்துகொண்டு, பேத்தி போல உறவு கொண்டாடலாம். இல்லையா? நீ அசல், போலியென்று யார் சொல்ல முடியும்?''

தொண்டையைத் துக்கம் அழுத்திக் கொள்ளவே அவளால் சட்டென்று பதில் அளிக்க இயலவில்லை.

''தாத்தா! ஒரு முறை இந்த உறவு வைத்து உங்களை அழைக்க அனுமதியுங்கள் போதும். நீங்கள் உலக அனுபவம் ரொம்ப உடையவர். ஒண்ணே ஒண்ணு கேட்கிறேன். என் தாயார் அனுசுயா உங்கள் மகள்னு சொல்ல உங்களுக்கு என்ன ஆதாரம்?'',

கிழவரின் வெளுத்த முகத்தில் இரத்தம் பாய்ந்து செம்மை படர்ந்து கொண்டது.

''மடத்தனமான பேச்சு. படித்துவிட்ட திமிரில் இப்படி ஒரு கேள்வி கேட்கச் சொல்லுதோ? அனுசுயா என் மகள். இது ஊர் அறிந்த உண்மை.''

''ஒரு பெண் தன் கருவில் வளரும் குழந்தை தன்னுடையது என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். தாய்மை அவளுக்குத் தந்திருக்கும் தனிப்பட்ட உரிமை அது. ஆனால்,



தன் மனைவியின் வயிற்றில் வளரும் குழந்தைக்குத்தான் தகப்பன் என்று ஒருவன் துணிவுடன் சொல்ல வேண்டுமானால், அவனுக்கு அவன் மனைவியின் ஒழுக்கத்தின் மீது பூரண நம்பிக்கை இருக்கணும்.''

''ஏய்! குட்டிப் பெண்ணே, என்ன சொல்றே?''

''என் தாய் ரொம்ப நல்லவங்க. அவர்கள் கைப்பட எழுதிய இந்தக் கடிதத்தில் அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை. என் தாய் உங்கள் மகள் என்பது உண்மையானால், அவர்களுடைய மகளான நான் உங்கள் பேத்தி என்பதும் உண்மை. புரிகிறதா தாத்தா?''

''நீ ரொம்பப் பேசி என் கோபத்தைக் கிளறி விடுகிறே'' கிழவர் சீறினார்.

''அந்தக் கடிதங்களையும் மோதிரத்தையும் தயவு செய்து கொடுத்து விடுங்கள். அவை உங்களுக்குத் துச்சம். ஆனால், எனக்கு விலை மதிப்பற்றவை.'' கையை நீட்டி அவை அனைத்தையும் எடுத்துத் தன் கைப் பைக்குள் போட்டுக் கொண்டு எழுந்தாள்.

''என் தாயின் வேண்டுகோளை மறுக்கக்கூடாது என்பதற்காக நான் சென்னையில் இருந்து இங்கே புறப்பட்டு வந்தேன். உங்களைச் சந்திக்க அநேக சங்கடங்கள் இருக்கும் என்பது அனுபவிச்ச பிறகு தெரிந்தது. உங்கள் சொத்துக்கு வாரிசாக உரிமை கொண்டாட நான் வரவில்லை. அதனால், நீங்களோ, வேறு யாருமோ கவலைப்படத் தேவையில்லை.''

''மார்த்தாண்டம் கட்டாயமாக கவலைப்படுவான். அவனால்தான் நீ வந்திருப்பதைப் பற்றி ஓரளவு எனக்குத் தெரிந்தது.''

''உங்கள் சொத்துக்கள் அனைத்தையும் நீங்கள் யாருக்கு வேணுமானாலும் கொடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு அக்கறையில்லை.''

நான் தஞ்சையில் இருந்த கோகுல்நாத் நகைக் கடையில் செய்யச் சொல்லி வாங்கிப் பரிசாகத் தந்தது.''

''என் கழுத்தில் போட்டு இருக்கிற தங்க சங்கலி என் தந்தை அம்மாவுக்குக் கொடுத்த பரிசு. அதை நீங்கள் பார்க்க விரும்பமாட்டீங்கன்னு நினைக்கிறேன்.''

வெடுக்கென்று நிமிர்ந்தார் கிழவர். மூக்குக்கண்ணாடி வழியே அவளை வெறித்துப் பார்த்தார்.

''இவை எல்லாம் என் மகளுடையவை ஒத்துக்கிறேன். இதைக் கொண்டு வந்த நீ என் பேத்தி என்று எப்படி நிரூபிக்க முடியும்? அனுருபா போன்ற சாயலில் உள்ள ஒரு பெண், நடந்த விவகாரத்தைத் தெரிந்துகொண்டு, பேத்தி போல உறவு கொண்டாடலாம். இல்லையா? நீ அசல், போலியென்று யார் சொல்ல முடியும்?''

தொண்டையைத் துக்கம் அழுத்திக் கொள்ளவே அவளால் சட்டென்று பதில் அளிக்க இயலவில்லை.

''தாத்தா! ஒரு முறை இந்த உறவு வைத்து உங்களை அழைக்க அனுமதியுங்கள் போதும். நீங்கள் உலக அனுபவம் ரொம்ப உடையவர். ஒன்னே ஒன்னு கேட்கிறேன். என் தாயார் அனுருபா உங்கள் மகள்னு சொல்ல உங்களுக்கு என்ன ஆதாரம்?'',

கிழவரின் வெளுத்த முகத்தில் இரத்தம் பாய்ந்து செம்மை படர்ந்து கொண்டது.

''மடத்தனமான பேச்சு. படித்துவிட்ட திமிரில் இப்படி ஒரு கேள்வி கேட்கச் சொல்லுதோ? அனுருபா என் மகள். இது ஊர் அறிந்த உண்மை.''

''ஒரு பெண் தன் கருவில் வளரும் குழந்தை தன்னுடையது என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். தாய்மை அவளுக்குத் தந்திருக்கும் தனிப்பட்ட உரிமை அது. ஆனால்,



தன் மனைவியின் வயிற்றில் வளரும் குழந்தைக்குத்தான் தகப்பன் என்று ஒருவன் துணிவுடன் சொல்ல வேண்டுமானால், அவனுக்கு அவன் மனைவியின் ஒழுக்கத்தின் மீது பூரண நம்பிக்கை இருக்கணும்.''

''ஏய்! குட்டிப் பெண்ணே, என்ன சொல்றே?''

''என் தாய் ரொம்ப நல்லவங்க. அவர்கள் கைப்பட எழுதிய இந்தக் கடிதத்தில் அவர்கள் சொல்றது முற்றிலும் உண்மை. என் தாய் உங்கள் மகள் என்பது உண்மையானால், அவர்களுடைய மகளான நான் உங்கள் பேத்தி என்பதும் உண்மை. புரிகிறதா தாத்தா?''

''நீ சொல்லப் பேசி என் கோபத்தைக் கிளறி விடுகிறே'' கிழவர் சீறினார்.

''அந்தக் கடிதங்களையும் மோதிரத்தையும் தயவு செய்து கொடுத்து விடுங்கள். அவை உங்களுக்குத் துச்சம். ஆனால், எனக்கு விலை மதிப்பற்றவை.'' கையை நீட்டி அவை அனைத்தையும் எடுத்துத் தன் கைப் பைக்குள் போட்டுக் கொண்டு எழுந்தாள்.

''என் தாயின் வேண்டுகோளை மறுக்கக்கூடாது என் பதற்காக நான் சென்னையில் இருந்து இங்கே புறப்பட்டு வந்தேன். உங்களைச் சந்திக்க அநேக சங்கடங்கள் இருக்கும் என்பது அனுபவிச்ச பிறகு தெரிந்தது. உங்கள் சொத்துக்கு வாரிசாக உரிமை கொண்டாட நான் வரவில்லை. அதனால், நீங்களோ, வேறு யாருமோ கவலைப்படத் தேவையில்லை.''

''மார்த்தாண்டம் கட்டாயமாக கவலைப்படுவான். அவனால்தான் நீ வந்திருப்பதைப் பற்றி ஓரளவு எனக்குத் தெரிந்தது.''

''உங்கள் சொத்துக்கள் அனைத்தையும் நீங்கள் யாருக்கு வேணுமானாலும் கொடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு அக்கறையில்லை.''

''அப்படிச் சொன்னால் நான் நம்பிவிடுவேனா? என் தம்பன் குருமூர்த்தி எம்.ஏ.க்கு பாதி படித்தவன். முழுதாக படித்தவனைவிட அவன் மூளை சொப்பவே வேலை செய்யும். உனக்கு சொல்லியிருப்பானே அவன்? திமிர்று நான் மனமடைந்து விட்டால் அனுசுயாவின் மகனோ, மகளோதான் என் சொத்துக்கு நேர் வாரிசு என்று.''

''நான் இந்த ஊருக்கு உங்களைப் பார்க்கவே வந்தேன். வாரிசு உரிமை கொண்டாட வரவில்லை. புத்தகம் எழுதவும் வரவில்லை. உங்கள் பெண்ணை நாலு பேர் முன்னாடி செருப்பால் அடித்து காயப்படுத்தி விரட்டினீங்க. அவர்கள் நோயால் போராடிக் கொண்டு இருந்தபோது உறவை மறுத்தீங்க. அப்போது ஏற்படாத அந்த அன்பும் பாசமும் அவர்கள் செத்தபிறகு உங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறதைப் பார்க்க வேடிக்கையா இருக்கு. தலைக்கு மேலே எங்கம்மா படத்தை தொங்கவிட்டு, மாலைபோட்டு, ஊதுபத்தி ஏத்தி வச்சு அவங்களை இப்போது தெய்வமா கொண்டாடுறீங்க'' ஏளனமாக சிரித்தாள்.

''என்ன சொன்னே!'' கிழவர் கோபத்துடன் எழுந்திருக்க முயன்றார்.

''அலட்டிக்காதீங்க. நான் இதோ போய் விடுகிறேன். நான் யாருன்னு இப்போ தெரிந்துகொண்டு விட்டேன். இது தெரியாமல் இருந்தால் ஒரு சமயம் நல்லதாக இருக்கும். வணக்கம்'' கைகுவித்துவிட்டு அவள் விர் என்று வெளியே நடந்தாள். மேகநாதன் வெளியே நிறுத்தி வைத்திருந்த காரில் ஏறி உட்கார்ந்தாள்.

அவன் என்ன ஏது என்று கேட்குமுன், தன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள், நிலா.

# 21

எதற்கும் அசைந்து கொடுக்காத இரும்பு மனம் படைத்த ரத்தினசாமி அய்யா, தமக்குள் ஏதோ ஒன்று நொறுங்கி விட்ட உணர்வில் நாற்காலியில் சோர்வுடன் சாய்ந்துக் கொண்டார்.

நெற்றியில் கொப்பளித்த வியர்வை காது ஓரங்களில் வழிவதை உணர்ந்து, நாற்காலி கைப்பிடி மீது கிடந்த துண்டை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

நீல பட்டனை அழுத்தினார். ஓடிவந்து நின்ற சமையல் ஆளிடம் அங்கு இருந்த பலகாரத் தட்டுகளையும், டம்ளர்களையும் அப்புறப்படுத்தச் சொல்லிவிட்டு, தமது துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டார். வேலையாள் அப்பால் சென்றதும், மெல்ல எழுந்து திரும்பி நின்று கொண்டு தமது மகளின் படத்தை உற்றுப் பார்த்தார். சற்றுமுன் கோபத்துடன் எழுந்து சென்றவளின் முகத்தோடு படத்தை பன்முறை ஒப்பிட்டுப் பார்த்தபடி நின்றவர் மனதில் அருவியாக நினைவுகள் எழுந்தன.

சின்ன வயதில் பட்டுப் பாவாடை குடை விரிக்க, கால் தண்டை ஒலிக்க, கைவளை குலுங்க ஓடிவந்து அவர் மடி ஏறி உட்கார்ந்து கொண்டு, தன் பட்டுக் கன்னத்தை அவர் கன்னத்தோடு பொருத்திக் கொண்டு ''அப்பா!'' என்று மழலை கொஞ்சி பிஞ்சு விரல்களால் அணைத்துக்கொள்ளும் அந்தச்சிறுமி அனுசுயாவை நினைத்த மாத்திரம், அவர் கண்களில் இருந்து கண்ணீர் உருண்டு கன்னத்திலே கோடிடுவதை உணர்ந்தார். ஏன் இப்போது இந்தக் கண்ணீர்? அவருக்கே வியப்பு கலந்த அதிர்ச்சி.

சட்டென்று துண்டு முனையால் கண்ணங்களை மெல்ல துடைத்துக் கொண்டு, நாற்காலியில் மீண்டும் வந்து அமர்ந்து கொண்டார்.

மகள் கணவனை இழந்து, பெண் குழந்தை ஒன்றுடன் வறுமையில் வாடுவதைப் பற்றி எழுதி அவரிடம் கெஞ்சி உதவி கேட்டபோது கலங்காத அந்த மனம்—

தன் குழந்தையை அனாதையாக விட்டுவிட்டு, மருத்துவமனையில் காச நோயுடன் போராடுவதை எழுதி, தன் குழந்தையையாவது அவர் காப்பாற்றவேண்டும் என்று அவள் கதறி அழுது கடிதத்தில் கேட்டுக்கொண்ட போது இரும்பாக ஈரக் கசிவு இல்லாது உறுதியாக இருந்த அந்த உள்ளம்— அவள் இறந்துபோன செய்தியைக் கேட்டும் சிறிதளவு கூட துயரத்தை வெளிப்படுத்திக் கொள்ளாது, ''ஒழியட்டும் பாவி மகள்'' என்று ஆத்திரத்துடன் உறுமிவிட்டு, சம்பிரதாயத்துக்காக தலை முழுகியதும் மாற்றுடை அணிந்து, உடனடியாகக் காடு கழனிகளைப் பார்வையிடச் சென்ற அந்தக் கல் மனிதர்;

முன்பின் தெரியாத ஒரு பெண் வந்து, ''நான் உங்கள் பேத்தி நிலகா'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, மகள் எழுதிய கடிதம், புகைப்படம், இத்யாதிகளைக் காட்டி நிரூபிக்க முயன்றதும்... இப்படி மனம் தடுமாறிப் போய் விட்டாரே.

அழுதே அறியாத அந்தக் கண்களில் நீர் புரண்டது என்ன விந்தை!

அந்தப் பெண் பேசும்போது கண்களை உருட்டி, அவள் விஷயங்களை அழுத்தமாகச் சொல்ல முயன்றபோது, கோபத்தில் அவளது மூக்கு நுனி சிவந்து உதடுகள் துடித்து, கண்கள் பளபளத்த போதும் அவர் மீண்டும் மகள் அனுசூயாவை தம் எதிரே பார்த்துவிட்ட பிரமிப்பில் ஆடிப் போய் விட்டாரே?



வந்தவள் பொய் சொல்லவில்லை. அந்தக் கடிதம், அந்த மோதிரம் எல்லாம் அவள்தான் அனுசூயாவின் மகள் என்று நிரூபிக்கின்றன. உள்ளே அவள் நுழைந்தபோதே ஊன்றிக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

இடக்காலை மட்டும் சற்று குதித்தாற்போல நிலத்தில் பதிய வைத்து துள்ளிக்கொண்டு அனுசூயா நடப்பாளே, இந்தப் பெண் நிலகாவும் அப்படியேதான் நடந்து உள்ளே மெதுவாக வந்தாள்.

பேசும்போது அடிக்கு ஒருதடவை அனுசூயா இடக்கரத்தால் நெற்றிமீது புரளும் கூந்தலை ஒதுக்கிக் கொள்வாளே, அதே போல இந்தப்பெண் நிலகாவிடமும் அந்த சேட்டை காணப்பட்டதே!

இந்த பழக்கவழக்கம் எல்லாம் பாரம்பரியமாக வரும் குணாதிசயங்கள் ஆயிற்றே.

இவையெல்லாம் கணக்கிட்டால், நிலகா கட்டாயம் அவருடைய பேத்திதான் என்று புரிகிறது.

ஆனாலும் நூற்றுக்கு நூறு அவள்தான் என்பதற்கு ஆதாரங்கள் இன்னும் ஏதேனும்?...

பல பல எண்ணி துவண்டுபோன ரத்தினசாமி, பகல் உணவை வேண்டா வெறுப்பாக சிறிது சாப்பிட்டு விட்டு படுக்கை மீது ஓய்வாகக் கிடந்தார். ஆனாலும், மனதில் அமைதி ஏற்படவில்லை. அவள், அவருடைய பேத்தி நிலகா என்பது உண்மையாக இருந்து, அதை அவர் ஏற்காது புறக்கணித்து விட்டால்?...அது எத்தனை பெரிய தவறாகி விடும்.

கடைசியாக அவள் அவரை எப்படி ஏசிவிட்டுப் போனாள்? ''வறுமையிலே உங்கள் பெண் வாடினபொழுது

இல்லாத அன்பு அவள் செத்த பிறகு ஏற்பட்டு இருக்கிறதே. படத்துக்குப் பூமாலைபோட்டு தெய்வமாக வணங்குகிறீங்க!'' ஏளனமாக சிரித்தானே, பொல்லாத குட்டி!

உண்மைதான். சில ஆண்டுக்கு முன் அவர் பத்துநாள் காய்ச்சலில் படுத்துவிட்டார். உறவினர் பட்டாளம் கழுகுகள் போல அவரைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர். அவர்களது எண்ணத்தில் மண்ணைப் போட தம் மகளை அவர் மறக்க வில்லை, அவள் விட்டுப் போன பேத்தியைப் பற்றியும் நினைப்பு இருக்கிறது என்று சொல்லாமலே அவர்களுக்கு எல்லாம் சொல்லத்தான் அந்தப் படத்தை பரணியில் இருந்து எடுத்துத் துடைத்து மாட்டச் சொன்னார். தினமும் பூமாலை போட்டு, ஊதுபத்தி ஏற்றிவைத்து அநுசூயாவை தெய்வம் ஆக்கி உறவினர்களை கலக்கிவிட்டார்.

''பாவி, கிழவன் மகளை மறக்கலை. உயில் எழுதாது மண்டையைப் போட்டாலும் சொத்துக்கு வாரிசு எங்கேயோ வளருதே. எங்கேயிருக்குன்னு கிழவனுக்கு தெரியும். தெரிஞ்சு வச்சுக்கொண்டு நம்மை எல்லாம் வேடிக்கை காட்டுறோரு'' என அவர்கள் முணுமுணுப்பதைக் கேட்டு ரசித்தார். தன் மூளையின் பலத்தாலும், பணத்தின் செல்வாக்காலும் உறவினர்களையும் ஒண்ட வந்தவர்களையும் ஆட்டிப்படைத்த அவருக்கு அந்த சிறுபெண் எத்தனை ஒரு பலத்த அடி கொடுத்துவிட்டாள்.

அவர்களுக்கு எல்லாம் புரியாத அவரது தந்திரத்தை அந்த சிறுபெண் ஒரு நொடியில் அவர் முன் அவிழ்த்துக் கொட்டிவிட்டாளே?

ஆமாம்! அவள்வந்து போன பின் ஏன் மனம் இப்படி மருகுகிறது?

அநுசூயாவிடம் நடந்துகொண்டது தவறு என்று நெஞ்சை சில நினைவுகள் முன்னாக நெருடுகின்றனவே?



அதற்கு ஈடு செய்யவேண்டும் என்று மனம் ஏன் இப்படி என்றும் இல்லாது தாபமாகத் துடிக்கிறது. இதுக்குத்தானா இரத்தபாசம்னு பெயர்?

பல பல எண்ணி இரவு பஞ்சுமெத்தை மீது உறக்கம் இன்றிப் புரண்ட ரத்தினசாமியின் சிந்தனையில் திடீரென்று அந்த எண்ணம் பளிச்சிட்டது.

நூற்றுக்குநூறு அவள்தான் அநுசூயாவின் மகள் என்று கண்டுபிடிக்க சுலபமாக அவருக்குத் தெரிந்திருந்த அந்த தடயம் இருக்கிறதே! விருட்டென்று எழுந்து உட்கார்ந்தார். படுக்கை ஓரத்திலே பதித்திருந்த வெள்ளை பித்தானை அழுத்தினார்.

வீட்டுடன் நாள் முழுவதும் தங்கியிருந்து, நிழல் போல அவரைத் தொடர்ந்து கட்டிக் காத்துவரும் விசுவாசமிக்க வேலை ஆள் மருது மார்பின் மீது மடக்கிய கைகளுடன் படுக்கை அறைக்குள் ஓடிவந்து பணிவாக அவர் முன் நின்றான்.

''கூப்பிட்டீங்களா, எசமான்?'' அவன் கண்கள் நன்றி யுடன் கனிந்தன.

''டாக்டர் மேகநாதன் வீட்டுக்கு உடனடியாகப்போய் டாக்டரை நாளைக் காலை வேறு கேசுகளுக்கு போகுமுன் என்னை வந்து பார்க்கச் சொல். உடம்புக்கு ஒன்றுமில்லை, மருந்துகள் பற்றி ஏதோ தகவல் தேவை. வரச் சொன்னார். முக்கியம்னு சொல்லு'' என்று பணித்தார்.

மேகநாதன் கட்டாயம் அவரது வேண்டுகோளுக்கு இசைவான் என்கிற தெம்பில், சமையல் ஆள் மேசை மீது கொண்டு வந்து வைத்துப் போன பாலை எடுத்து மெல்ல கலைத்துப் பருகினார்.

இல்லாத அன்பு அவள் செத்த பிறகு ஏற்பட்டு இருக்கிறதே. படத்துக்குப் பூமாலைபோட்டு தெய்வமாக வணங்குகிறீங்க!'' ஏளனமாக சிரித்தானே, பொல்லாத குட்டி!

உண்மைதான். சில ஆண்டுக்கு முன் அவர் பத்துநாள் காய்ச்சலில் படுத்துவிட்டார். உறவினர் பட்டாளம் கழுகுகள் போல அவரைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர். அவர்களது எண்ணத்தில் மண்ணைப் போட, தம் மகளை அவர் மறக்க வில்லை, அவள் விட்டுப் போன பேத்தியைப் பற்றியும் நினைப்பு இருக்கிறது என்று சொல்லாமலே அவர்களுக்கு எல்லாம் சொல்லத்தான் அந்தப் படத்தை பரணியில் இருந்து எடுத்துத் துடைத்து மாட்டச் சொன்னார். தினமும் பூமாலை போட்டு, ஊதுபத்தி ஏற்றிவைத்து அனுரூபாவை தெய்வம் ஆக்கி உறவினர்களை கலக்கிவிட்டார்.

''பாவி, கிழவன் மகளை மறக்கலை. உயில் எழுதாது மண்டையைப் போட்டாலும் சொத்துக்கு வாரிசு எங்கேயோ வளருதே. எங்கேயிருக்குன்னு கிழவனுக்கு தெரியும். தெரிஞ்சு வச்சுக்கொண்டு நம்மை எல்லாம் வேடிக்கை காட்டுறான்'' என அவர்கள் முணுமுணுப்பதைக் கேட்டு ரசித்தார். தன் மூளையின் பலத்தாலும், பணத்தின் செல்வாக்காலும் உறவினர்களையும் ஒண்ட வந்தவர்களையும் ஆட்டிப்படைத்த அவருக்கு அந்த சிறுபெண் எத்தனை ஒரு பலத்த அடி கொடுத்துவிட்டாள்.

அவர்களுக்கு எல்லாம் புரியாத அவரது தந்திரத்தை அந்த சிறுபெண் ஒரு நொடியில் அவர் முன் அவிழ்த்துக் கொட்டிவிட்டாளே?

ஆமாம்! அவள்வந்து போன பின் என் மனம் இப்படி மருகுகிறது?

அனுரூபாவிடம் நடந்துகொண்டது தவறு என்று நெஞ்சை சில நினைவுகள் முள்ளாக நெருடுகின்றனவே?



அதற்கு வழி செய்யவேண்டும் என்று மனம் ஏன் இப்படி என்றும் இல்லாது துடியாகத் துடிக்கிறது. இருக்கத்தானா இறந்தாயோ பெயர்?

பல பல எண்ணங்கள் இரவு பஞ்சுமெத்தை மீது உறக்கம் இன்றிப் புரண்ட ரத்தினசாமியின் சிந்தனையில் திடீர் என்று அந்த எண்ணம் பளிச்சிட்டது.

நூற்றுக்குநூறு அவள்தான் அனுரூபாவின் மகள் என்று கண்டுபிடிக்க சுலபமாக அவருக்குத் தெரிந்திருந்த அந்த நடவும் இருக்கிறதே! விருட்டென்று எழுந்து உட்கார்ந்தார். படுக்கை ஓரத்திலே பதித்திருந்த வெள்ளை பித்தானை அழுத்தினார்.

வீட்டுடன் நாள் முழுவதும் தங்கியிருந்து, நிழல் போல அவரைத் தொடர்ந்து கட்டிக் காத்துவரும் விசுவாசமிக்க வேலை ஆள் மருது மார்பின் மீது மடக்கிய கைகளுடன் படுக்கை அறைக்குள் நுழைந்து பணிவாக அவர் முன் நின்றான்.

''கூப்பிட்டீங்களா, எசமான்?'' அவன் கண்கள் நன்றியுடன் கனிந்தன.

''டாக்டர் மேகநாதன் வீட்டுக்கு உடனடியாகப்போய் டாக்டரை நாளைக் காலை வேறு கேசுகளுக்கு போகுமுன் என்னை வந்து பார்க்கச் சொல். உடம்புக்கு ஒன்றுமில்லை, மருந்துகள் பற்றி ஏதோ தகவல் தேவை. வரச் சொன்னார். முக்கியமானது சொல்லு'' என்று பணித்தார்.

மேகநாதன் கட்டாயம் அவரது வேண்டுகோளுக்கு இசைவான் என்கிற தெம்பில், சமையல் ஆள் மேசை மீது கொண்டு வந்து வைத்துப் போன பாலை எடுத்து மெல்ல சுவைத்துப் பருகினார்.

அவமானத்தைக் குடைந்த அந்த சந்தேகத்திற்கு ஒரு முடிவு ஏற்படப் போகிறது என்கிற நிறைவில் அவர் மனதிலே அமைதி நிலவியது. படுத்தவர் பச்சைக் குழந்தை போல உறங்கிப்போனார்.

# 22

உணர்வுகளை மனதில் வைத்துக்கொண்டு புழுங்குவதைவிட, ஒரு மூச்சு அழுது தீர்த்தால் மனம் லேசாகிவிடும் என்பார்கள்.

ஒருவழியாக அழுது தீர்த்துவிட்டு கைகளை முகத்தில் இருந்து விலக்கிய திலகா, தன் இடையில் செருகியிருந்த கைக்குட்டையைத் தேடினாள். எழுந்துவந்த அவசரத்தில் அவள் அதை வழியில் தவறவிட்டிருந்தாள்.

மேகநாதன் காரை ஓட்டிக்கொண்டே முறுவலித்தபடி இடது கையால் தன் சட்டைப் பையில் இருந்த தன் கைக்குட்டையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

சந்தன சோப்பின் மணத்தை இலேசாக உணர்த்திய அந்த கைக்குட்டையை அவள் தன் முகத்தில் பதித்துக் கொண்டபோது, அவனது அணைப்பில் மூழ்கி ஆறுதல் பெற்றுவிட்ட ஒரு அமைதியையும், மகிழ்ச்சியையும் அடைந்தாள்.

தாத்தா ரத்தினசாமி அவளை ஏற்காவிடில் அக்கறையில்லை.

மேகநாதன், அவள் மீது கொண்டுள்ள அன்பு ஒன்றே அவளுக்குப் போதும். இதைவிட பெரும் பாக்கியம் ஏதேனும் அவள் எதிர்பார்க்க முடியுமா?



''ரத்தினசாமி அய்யாவின் மனம் கடப்பாரையைக் கொண்டும் உடைக்க முடியாத பாறாங்கல்லுன்னு நான் முன்னமே சொன்னேனே. போகட்டும். நீ முகத்தைக் கழுவிக் கொள். தாத்தாவைப் பார்த்திட்டே. அம்மாவின் வேண்டுகோளை நிறைவேற்றிட்டேன்னு அமைதியாக இரு'' என்றாள் பூரணி அன்புடன்.

முகத்தைக் கழுவி துடைத்துப் பொட்டு வைத்துக் கொண்டு உள்ளே வந்தவளை, ஊஞ்சலில் அமர்ந்துகொண்டு இருந்த மேகநாதன் உல்லாசமாகப் பார்த்து புன்னகைத்தான்.

''என் வேண்டுகோளை நிறைவேற்றி விட்டாள்,திலகா அமைதியா எப்படி இருக்க முடியும்'' வேடிக்கையாக சிரித்தான் அவன்.

''ஏற்கனவே மனம் அலண்டு போயிருக்கா அவள். நீ வேறே குழப்பாதே!'' அக்காள் கடிந்து கொண்டாள்.

''உண்மையைத்தான் சொல்றேன். ஓயாது ஒழியாது உழைக்கப் போகும் ஒரு டாக்டருக்கு மனைவி என்றால் சல்பமான காரியமா? சதா பரபரப்புடன் செயல்பட வேண்டுமே?''

பூரணி சிரித்தாள். ''போக்கிரிப் பையா; நீ அவளை பயமுறுத்தாதே. அவளுக்கு வேறு யாரும் இல்லேன்னு நினைச்சு, நீ ரொம்ப அதிகாரம் பண்ணினா, பிறந்த வீடுன்னு சொந்தம் கொண்டாட நான் இருக்கேன். பெட்டியைத் தூக்கிட்டு எங்கள் வீட்டுக்கு வந்துடுவாள். பிறகு நீ வந்து கெஞ்சி அழைச்சுட்டுப் போகணும். அவள் எங்கள் வீட்டுப்பெண். தெரிஞ்சுக்கோ இப்பவே...'' வேடிக்கையாகப் பேசி, எல்லோரும் சிரிக்க, திலகா தன் துயரத்தை மறந்து, மனம் இலேசாகி பூரணியுடன் வீட்டு வேலைகளில் வளைய வந்துகொண்டு இருந்தாள்.

மறுநாள் காலையில் மறுபடியும் மேகநாதன் காருடன் வீட்டுக்குவந்து இருந்தான்.

"திலகா, உன் தாத்தா உன்னை மறுபடி பார்த்து பேச விரும்புறார். எனக்காகவாவது நீ மறுக்காமல் புறப்படணும்" என்று குழைவாகக் கேட்டுக் கொண்டான்.

"போயிட்டு வாம்மா. பெரியவர் பார்க்கணும்னு ஏனோ தவிக்கிறார். என்னதான் நடக்குதுன்னு பார்ப்போம்." பூரணி உற்சாக மூட்டினாள்.

அலமாரியில் இருந்த அந்த காஞ்சிபுர பட்டுச் சேலையை உடுத்திக் கொண்டு சீக்கிரமாகப் புறப்பட்டாள்.

தலையில் சூடிய மல்லிகை-புடவையில் இருந்து எழுந்த தாழம்பூ இரண்டின் கலவை மணத்தை நுகர்ந்த மேகநாதன் காரை ஓட்டிக் கொண்டே அவள் பக்கம் திரும்பி மெலிதாக சிரித்தான். "இப்போ நீ எப்படி இருக்கே தெரியுமா?"

"ம்! எப்படியாம்?" சிணுங்கினாள், செல்லமாக அவள்.

"மணப் பந்தலில் என் அருகே காஞ்சிபுரப் பட்டும், குங்குமப் பொட்டும், மல்லிகை, தாழம்பூ சுகமயாக கமக்க, மணப் பெண்ணாக உட்கார்ந்து இருக்காப்பல பிரமிப்பாக இருக்கு."

திலகா புல்லரித்துப் போனாள். "ரொம்ப மேலே இழுக்காதீங்க. இந்த கிராமத்தவங்க படு பொல்லாதவங்க, அப்புறம் பல கதைகள் கட்டி விடுவாங்க."

"அந்த கதைகளுக்கு எல்லாம் இப்போ ஒரு முடிவு வரப் போகிறது. இன்னும் சில நாளில் ஊரே அதிசயிக்கப் போகிறதே!"



"என் தாத்தா நம் திருமணத்தை ஊர் கோயில் மண்டபத்திலே அமர்க்களமா நடத்தத் திட்டம் போட்டிருக்காரே!"

மகிழ்ச்சியின் எல்லைக் கோட்டில் முற்றிட்ட அவளால் பேசவே முடியவில்லை. "மேகா! உங்களை நான் நிரம்பவும் நேசிக்கிறேன்." தடுமாறியபடி மெல்லத் தானே நெருங்கி அவன் தோள் மீது இடித்தபடி அமர்ந்து கொண்டாள்.

கிழவர் சந்திரசாமி அதே சாய்மான நாற்காலியில் சாய்ந்தபடி அமர்ந்து இருந்தார்.

"வாங்கோ. உட்காருங்கோ!" பலமாக உபசரித்தார்.

"தம்பி மேகா! நான் திலகாவிடம் இன்னிக்கு சில முக்கிய சங்கதிகளை நிதானமாகப் பேச விரும்புறேன்" பொருள் பொதிய அவனைப் பார்த்தார், கிழவர்.

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு, நான் போகணும். மன்னிச்சுக்கோங்க. மருதுகிட்ட சொல்லி அனுப்பினால் நான் வந்து திலகாவைக் கூட்டிகிட்டு போறேன்." விடைபெற்றுக் கொண்டு விரைந்து விட்டான், மேகநாதன்.

"உட்காரம்மா!" உபசரித்தார் கிழவர். நீல பட்டணை அமுக்கினார். முதல்நாள் போலவே சமையல் ஆள் பலகாரத் தட்டுடன் தாகத்திற்கு சாப்பிட ஓவல் நிறைந்த தம்ளர்களுடன் ஓடிவந்தார். பணிவுடன் முக்காலிமீது தட்டை வைத்துவிட்டு மாயமாகினார்.

"சாப்பிடம்மா" உபசரித்தார் கிழவர், முகத்தில் புன்னகையுடன்.

திலகா அவரை உன்னிப்பாகப் பார்த்தபடி சந்தேகத்துடன் ஓவலை மட்டும் பருகிவிட்டு தம்ளரை வைத்தாள். எதுக்காக மறுபடி அங்கே அவர் அழைத்திருக்கிறார்?

“நேத்து உன்னை கடுமையா பேசினது மனதை ரொம்ப சங்கடப்படுத்திட்டது. அதனால் உன்னை மறுபடி பார்க்க விரும்பினேன். அதுசரி, அந்த சங்கிலியை எடுத்து கொடுக்க முடியுமா? நான் அதைப் பார்க்க விரும்புறேன்.”

“என் தந்தை, என் தாய்க்குக் கொடுத்த பரிசு அது.”

“என் மகள் கழுத்தை அலங்கரித்த அந்த சங்கிலியை, நான் கையால் தொட்டுப் பார்க்க ஆசைப்படுகிறேன். கூடாதா?” கிழவர் மறுபடி முறுவலித்தார்.

கழுத்தை மூடியிருந்த சேலைத் தலைப்பை சிறிது நீக்கி விட்டு, தன் இரு கைகளையும் உயர்த்தி, தலையைச் சிறிது தாழ்த்தி, அவள் அந்த சங்கிலியைக் கழற்ற முயன்றபோது கிழவர் பார்த்துவிட்டார்.

“ரொம்ப சிரமப்படுகிறியே” என்று சொல்லிக் கொண்டு எழுந்து வந்து அருகில் நின்றபடி அவள் கழுத்தை கண்திப்பார்த்த கிழவர் கண்களுக்கு பளிச்சென்று அது பட்டது.

நிலவென்று தாங்கமுடியாத ஒரு துயரம் தொண்டையைப் பாறாங்கல்லாக அடைத்துக்கொண்டு விடவே, ரத்தினசாமி ஒரு கணம் திணறிப்போனார்.

அவரையும் மீறிக் கண்களில் நீர் புரண்டது.

“திலகா...அம்மா... திலகா... நீ என் அநுசூயாவின் மகள்தான் என்பதை சத்தியமாக ஒப்புக்கிறேன், நம்புமா! என் அநுசூயா விட்டுப்போன என் குலக்கொழுந்து நீதான் என்று நினைக்கிறபோது என் உடம்பு சிலிர்க்குது அம்மா, என் உடல் முழுவதும் பாசத்திலே நடுங்குது. அம்மா திலகா, கிட்டே வா. என் குழந்தை கிட்டே வா!” என்று தழுதழுத்தபடி நெருங்கினார்.



அவரது வைராக்கியம் பொடிப் பொடியாகி விடவே, தன் மகள் கழுத்தில் அணிந்திருந்த அந்த தங்க சங்கிலியை ஒரு கையில் பிடித்தபடி மறுகரத்தால் திலகாவின் தோளைத் தழுவிக்கொண்டு குலுங்கி அழுதார்.

திடுக்கிட்டுப் போனாள் திலகா. முதல் நாள் அவளை போலி என்று குற்றம் சாட்டி விரட்டியவர், இன்று பேத்தி என்று கொண்டாடுகிறாரே? கண்களைத் துடைத்துக்கொண்டு தம்மை சமாளித்துக் கொண்டார் கிழவர்.

சங்கிலியை அவளிடம் திருப்பித் தந்து அணிந்து கொள்ளச் சொன்னார். “குழந்தை திலகா, நீ என் பேத்தி தான். அதற்கு அறு நீ என் வாரிசு என்பதை எப்படி நம்பறேன் தெரியுமா? என் மகள் அநுசூயா கடைசியாக எழுதியிருந்த கடிதத்தில் ஒரு உண்மையை குறிப்பிட்டிருந்தாள். நீ நேற்று போன பின்புதான் எனக்கு ஞாபகம் வந்தது.”

“உங்கள் பேத்தி திலகாவுக்கும் என்னைப் போல ஒரு அடையாளம் இருக்கு. நினைப்பில் வைத்துக்கொள்ளுங்கள். என் கழுத்தின் பின்புறத்தில் மாங்காய்போல ஒரு சிறு நீல மச்சம் இருக்குமே. அதேபோல ஒரு சிறு நீல மச்சம் உங்கள் பேத்தியின் நெஞ்சு குழியில் பச்சைக்கல் பதக்கம்போல அவள் தங்கக் கழுத்துக்கு அழகுசெய்து கொண்டிருக்கு.” என்று எழுதியிருந்தாள். நீ அடக்கமா சேலை தலைப்பால கழுத்தை இறுக்க மூடிக்கொண்டு இருந்ததால், என் கண்களில் படவில்லை. இப்போது நல்லா தெரிகிறது. நீ என் பேத்தி திலகாதான். இப்படி உட்காரு அம்மா. உன்னோட அதிகம் பேசணும்,” கிழவர் குரல் கரகரக்க கண்களில் தாரைதாரையாக நீர் வழிய தமது கரங்களை நீட்டி, பேத்தியின் கரங்களை ஆவலுடன் பற்றிக் கொண்டார்.

தாம் செய்த தவறுகளையெல்லாம் கண்ணீராய் கழுவுவது போல, வயதில் அத்தனை பெரியவர்—அந்தஸ்தில்

அத்தனை உயர்ந்தவர், அவள் முன் பச்சிளங் குழந்தையாக குறுகி அழுவதைக்காண அவன் மனம் இளகிப்போனான். இரத்தபாசம் முடிவில் வெற்றிகண்டது!

''தாத்தா! தாத்தா!'' என்று அவளும் அவரது தோளைப் பற்றிக் கொண்டு தேம்பினாள்.

இருவரும் அழுதனர். பின்னர் சிரித்தனர். வெகுநேரம் உட்கார்ந்து பலவும் பேசி மகிழ்ந்தனர். காய்ச்சல் வந்தவர் போல ஒரு வேகத்திலே கடந்த காலத்து நிகழ்ச்சிகள் அனைத்தையும் அவர், அவள் முன் அள்ளிக் கொட்டினார். அவளும் அனாதை ஆசிரம வாழ்க்கையை விரிவாக விவரித்தாள்.

இத்தனை நாள் விட்டுப்போன உறவை, ஒட்டு மொத்தமாக அனுபவிக்க விரும்பியவர் போல், தாத்தா தமது பேத்தியை அருகில் உட்கார வைத்துக்கொண்டு சேர்ந்து உணவு அருந்தினர். சேர்ந்து பிறகு காபி டிபன் சாப்பிட்டார். இரவு உணவுக்குப் பின் மருதுவிடம் சொல்லி அனுப்பினார்.

அன்று நிலகா, அவருடன் அங்கேயேதான் தங்கப் போகிறாள். மறுநாள் காலை பத்துமணி அளவில் வேகநாதன் வந்து அழைத்துப் போகலாம் என்று உத்தரவு அனுப்பித்தார்.

இருவரும் இரவு வெகு நேரம் பலவும் பேசினர்.

தூக்கம் கண்களை சுழற்ற, தாத்தாவின் கட்டிலின் கீழ் விரித்துப்போட்ட பஞ்சுமெத்தைமீது படுத்த நிலகா, விரைவில் உறங்கிப் போனாள். இத்தனை நாளும் தனிமையில் வாழ்ந்த தமது அவல வாழ்க்கை அன்றோடு முடிவுற்றது என்ற அமைதியில் அவரும் உறங்கிப் போனார்.

நள்ளிரவின் போது திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள், நிலகா. விடிவிளக்கும் அணைந்து எங்கும் ஒரே இருள். ஆமாம், அது என்ன சத்தம்? அவள் நெஞ்சு பயத்தில் வேகமாகத் துடித்தது.

## 23

அறையின் வாயிலில் வெகு அருகில் பலத்த காலடி சத்தம். நிலகா பயந்து போனாள்.

''யார் அது?'' என்று, அவள் வாய் திறந்து கத்து வதற்குள் பலமாக இரும்புக் கரம் ஒன்று அவள் வாயை அழுத்திப் பொத்தியதை உணர்ந்தாள்.

''தாத்தாவும் பேத்தியும் இங்கே சந்திச்சது போல சேர்ந்தாற் போல மேலேயும் சந்திக்கப் போறீங்க. உம்...'' என்று உறுமிய மனிதன் கரகரத்த குரலில் அதட்டினான்.

அந்தக் குரல், ஆமாம், அது மார்த்தாண்டத்தினுடையது தான்!

அவன் எப்படி இங்கே வந்தான்? பட்டணத்திற்குப் போவதாக போக்குக் காட்டிவிட்டு தக்க சமயத்திற்காக காத்திருந்தானோ?

அய்யய்யோ! அவன் மட்டும் தனியாக வந்து இருக்க வில்லை. வேறு சில பேச்சுக் குரல் கேட்கிறதே. தாத்தாவின் சத்தத்தையே காணோமே!

அவள் பலவும் நினைக்கும் முன் ஒரு துணிப் பந்தம் வாயில் திணிக்கப்பட்டது. அவளது கண்களை ஒரு முரட்டுக் கை கயிற்றால் கட்ட, ஆட்டுக் குட்டியை தூக்குவது போல யாரோ அவளை அப்படியே தூக்கிக்கொண்டு வெளி நடப்பதை உணர்ந்தாள்.

''கார்க் கதவைத் திற. கிழவனையும்—பேத்தியையும் பின் சீட்டில் போட்டு இரண்டுபேர் அவங்களைப் பிடிச்சுட்டு உட்காருங்கள். முன்பக்கம் நான் உட்கார்ந்துக்கிறேன். உம்... வண்டியை ஓட்டு.'' மடமட என்று மார்த்தாண்டம்

உத்தரவு கொடுப்பதையும், அவர்கள் பலவந்தமாக ஒரு காரில் எங்கேயோ கடத்திச் செல்லப்படுவதையும் அவன் உணர்ந்தான்.

அவனையும் அவன் தாத்தாவையும் தீர்த்துக் கட்ட முடிவு செய்துவிட்டுத்தான் அடியாட்களுடன் மார்த்தாண்டம் தயாராக வந்திருக்கிறான்.

அவர்களை எங்கேயோ கண்காணாத இடத்திற்குக் கடத்திச் சென்று கொல்லப்போகிறான். ரத்தினசாமி அய்யாவின் உப்பைத் தின்றுவிட்டு அவருக்கே தீங்கு விளைவிக்க நினைக்கும் கொடுமைக்காரன். கேவலம் சொத்துக்காக இந்த பாதகத்தை செய்யத் துணிந்துவிட்டானே!

அவன் வேண்டுமானால் தாராளமாக சொத்தை எடுத்துக் கொள்ளட்டும். அவன் உரிமை பாராட்டி குறுக்கே வந்து அவனுக்குத் தொந்திரவு எதும் செய்யமாட்டான். கேட்டு வாங்கிக் கொள்ளட்டுமே. இப்படி அவர்களை பயமுறுத்தி, இம்சை செய்து...பலவும் எண்ணி கண்ணீர் வழிய மவுனமாக அவன் அழுதுகொண்டு இருந்தான்.

வாயில் அடைத்த துணிப்பந்து தொண்டை இறுக்கியது. மூச்சுவிட முடியாது அவன் திணறினான்.

''மேகா...மேகா... வந்து காப்பாத்துங்கள்'' அவன் மனம் ஊமையாக ஒலமிட்டது.

மேகநாதனுக்கு அவர்களுக்கு நேர்ந்த கதி எதும் இப்பொழுது தெரிய வாய்ப்பில்லை. மறுநாள் காலையில் தேடி வரும் போது, திலகா காணாமல் போய்விட்டதை அறிவான். தாத்தாவும், பேத்தியும் மரணமடைந்து விட்ட சங்கதி பல நாட்களுக்குப் பின்னர்தான் தெரியப் போகிறது. அய்யோ! அவன் என்ன செய்வான்?

கார் ஒரு குலுக்கலுடன் மேடும் பள்ளமுமான ஒரு பாதையில் ஓடுவது புரிந்தது. சடார் என்று ஒரு இடத்தில் அது நின்றதும் அருகில் உட்கார்ந்து இருந்த இரு முரடர்களும் அவனையும், தாத்தாவையும் வெளியே இறக்கினார்கள்.

''உம், நடங்கள்'' என்று உத்தரவிட்டபடி அவர்களை இழுத்துச் சென்றனர். படி போன்று இருந்த அமைப்பில் அவன் சில தடவை தடுக்கிவிழுந்து இருளில் நடந்தான். கூட வந்தவன் காலால் எட்டி ஓங்கி உதைக்க, வாயிற் கதவு ஒன்று ''கிரீச்'' என்ற சத்தத்துடன் திறந்து கொண்டது.

படபடவென்று சிறகு அடித்து வௌவால் ஒன்று, அவன் தலை மேல் பறந்து வெளியே ஓடிய போது, அவன் பயத்தில் உறைந்து போனான்.

அப்பொழுது தான் அந்த முரடர்களில் ஒருவன், லாந்தர் விளக்கு ஒன்றை ஏற்றி எடுத்துக்கொண்டு ஓடி வந்தான். கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. வாயை அடைத்த துணி பந்துகளை நீக்கினார்கள். அந்த வெளிச்சத்திலே அவன் தாங்கள் இருக்கும் சூழ்நிலையை ஒருவாறு புரிந்து கொண்டான்.

அது ஒரு பாழடைந்த காரைக் கட்டடம். உள்ளே பல காலம் கவனிக்கப் படாததால் தூசும் குப்பையுமாக ஒட்டடையும் அடைந்து, எந்த நிமிடமும் விழத் தயாராக இருந்த மிகப் பழமையதொரு கட்டிடத்தின் ஒரு பெரிய அறை. சன்னல்கள் அடைத்து மூடி ஆணி வைத்து அடிக்கப்பட்டு இருந்தன.

கால்கள் ஆடிய பலகைமீது அவர்களை உட்கார வைத்தனர். லாந்தரைப் பிடித்துக் கொண்டிருந்தவன் அதை அவர்கள் முகத்துக்கு எதிரே தூக்கிப் பிடித்தான். அப்பொழுது தான் அவன் பார்த்தான்.

இடுப்பில் கைகளை ஊன்றியபடி மீசை துடிக்க, கண்கள் சிவக்க கோபமே உருவாக மார்த்தாண்டம் எதிரே நின்று கொண்டு இருந்தான்.

''புத்தகம் எழுத இந்த ஊருக்கு வந்தியா? நீ பெரிய ஆசாமி. உன்னை தனிப்பட கவனிக்கிறேன்'' என்று திலகாவைப் பார்த்து சீறினான்.

''ஏய் கிழவா, இத்தனை நாள் ஏமாத்திக்கிட்டு இருந்தது போல இனியும் முடியாது. கையோட ஒரு உயில் எழுதி தயாராக்கிகொண்டு வந்திருக்கேன். அதில் கையெழுத்துப் போடு. பிடி போனவை மறந்தே இந்த நிமிடமே எமலோகத்துக்கு அனுப்பிவிட்டு, உன் குடும்பத்தை உருக்குலைச்சுடுவோம்'' உறுமினான்.

திலகாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. திகிலில் வாய் உலர்ந்து போனாள். அழுகை நெஞ்சை அடைத்தது. அத்தனை பேருக்கு எதிராக வலு இல்லாத அந்தக் கிழவரும் அவளும் என்ன செய்யமுடியும்?

''கையெழுத்து போட மாட்டியா? கிழப் பேயே. உன் பேத்தியை நான் உன் முன்னால் என்ன செய்கிறேன் பார்.'' பற்களைக் கடித்துக்கொண்டு சீறிய மார்த்தாண்டம், அவரது தோளைப் பிடித்து பலமாகக் குலுக்கினான்.

கிழவர் மவுனமாக இருந்தார்.

''வாயில் என்ன கொழுக்கட்டையா?'' உறுமிக் கொண்டு ஓங்கி அறைய அவன் கையைத் தூக்கியபோது, கிழவர் மயக்கமாகி சுருண்டு கீழே விழுந்து விட்டார்.

''சனியன்! மூஞ்சியிலே தண்ணி தெளிச்சுப் பாரு.'' உத்தரவிட்டான் மார்த்தாண்டம்.

ஓர் அழுக்கு பிடித்த குவளையில் நீருடன் சில விநாடிகளில் ஓடி வந்த அவனது கையாட்களில் ஒருவன் தண்ணீரை வாரி அவர் முகத்தில் வீசினான்.

ஊகூம். பலன் இல்லை. கிழவர் நத்தையாகச் சுருங்கி சுருண்டு கிடந்தார்.



''படுபாவி, சமயத்துக்கு கட்டையைப் போட்டு விடுவான் போலிருக்கே.'' சீறினான் மார்த்தாண்டம்.

''எனக்கு ஒரு யோசனை அண்ணாச்சி. தஞ்சாவூர் போய் ஒரு புரோகிதர், கல்யாண சாமான்கள் எல்லாத்துடன் விடிகாலைக்குள்ளே திரும்பி விடுவோம். தாத்தா மண்டையைப் போட்டாலும், பேத்தியை நீங்கள் மதுரை வீரன் கோவில் மண்டபத்திலே கட்டிகிட்டா, பிறகு சொத்து உங்களைத்தானே சேரும். புரியுதா!''

''இங்கே காவலுக்கு யாராச்சும் இருக்க வேணாமா?''

''தேவையில்லை. இந்தப் பொண்ணுக்கு இடம் புரியாது. கத்தினாலும் யாருக்கும் கேட்காது. நம்ப எல்லாரும் போனால்தான் ஆளுக்கு ஒரு காரியமா கவனிச்சுட்டு சீக்கிரமா திரும்பலாம்'' என்றான் ஒருவன்.

''உனக்கு ரொம்ப நல்ல மூளைடா. கிழவன் போனா நம் குமரி எனக்குக் கிடைப்பாள். அவன் சொத்து மட்டு போல தானே என்னைச் சேர்ந்துவிடும். உயிலை இப்படியே வச்சுட்டுப் போவோம். கிழவன் முழிச்சுகிட்டா கையெழுத்து வாங்கிட்டு பிறகு இவளையும் ஒருவழி பார்த்திடுவோம். கிழவன் போயிட்டா, இவளை நான் கட்டிக்குவேன். சரியா?''

''கிளம்புங்க!'' என்று மார்த்தாண்டம் கடுமையாகக் கூறி, வில்லன் சிரிப்பு சிரித்தான்.

மறுகணம், [illegible] அனைவரும் வெளியேற வெளியே கதவு பூட்டப்பட்டது. கார் புறப்படும் ஓசை கேட்டது.

''திலகா!'' என்று கையை நீட்டி மெல்ல அவளது தோளை தாத்தா தொட்டதும், அவள் நடுங்கிப்போனாள்.

''பயப்படாதே! நான் மயக்கம் போடலை. அப்படி பாசாங்கு பண்ணினேன். நாம் இருப்பது எங்கேன்னு

எனக்குத் தெரியும். நாது புறமாக நீந்து காத்து போட்டுக்கு பக்கத்திலே, தென்னைமரத் தோப்புக்கு அப்பால் உள்ள பாழ் அடைஞ்ச வீடு. இதுவும் நம்முடைய சொத்துதான். என் மூதாதையர் பல அக்கிரம காரியங்களுக்கு இதை பயன்படுத்திக்கொண்டு வச்சிருந்தாங்க. வெறுப்பு அடைஞ்சு நான் இதை ஒரு ஒதுக்கிவைச்சிருந்தேன். கவனிக்கப்படாததால் இது நாளடைவில் பாழாகி, இடிந்து விழுந்திடும் நிலையில் இருக்கு. இதை இடிச்சு நிரவி, ஒரு சின்ன கிளினிக் கட்டி, சாலைக்கு போக பாதை போட்டு ஏழைகளுக்கு வைத்திய உதவி செய்ய வேண்டும் நினைச்சு இருந்தேன்.''

இத்தனை ஒரு நல்ல மனம் இவருக்கு இருந்ததா?

''தாத்தா இங்கிருந்து நாம தப்பிப் போக முடியாதபடி கதவைப் பூட்டிவிட்டு போயிட்டாங்களே. ஏதோ இருட்டுதேன், பாம்பு இருந்தாக்கூட நமக்கு தெரியாதே'' நடுங்கினாள், நிலா.

தாத்தா அவளது தோளை மெல்ல தட்டிக் கொடுத்தார். ''பயப்படாதே. மார்த்தாண்டத்துக்கு என் பழக்கம் முழுதும் தெரியாது. நான் தூங்கும்போது தினமும் இடுப்பு வேட்டி மடிப்பில் ஒரு சிறு டார்ச் விளக்கை வச்சுக்கிற வழக்கம். சிங்கப்பூர் நண்பன் ஒருத்தன் கொடுத்த கையடக்க மின்விளக்கு எப்படி எரியுது பார்.' டார்ச்சை எடுத்து பொருத்தினார். பளிச் என்று அறைக்குள் வெளிச்சம் வீசியது.

''இதை வச்சுகிட்டு, நாம் இப்போ என்ன பண்ண முடியும், தாத்தா?''

''மார்த்தாண்டம் விட்டுட்டு போயிருக்கிற இந்த உளியை கையில் எடுத்துக் கொள். டார்ச்சை வச்சுகிட்டு இங்கிருந்து நான் சொல்ற வழியாக நீ வெளியிலே ஓடி விடலாம். வா என்னோட, இது எங்கள் வீடு. இங்கே இருக்கும் ஒரு இரகசியப் பாதை எனக்கு மட்டும் தெரியும்''

என்று கிழவர் மெல்ல எழுந்து டார்ச் வெளிச்சத்தை பாய்ச்சி, முன்னால் நடந்தார்.

நடை போன்ற ஒரு பகுதியில், தூசி அப்பிய ஒரு பெரிய அலமாரி தெரிந்தது. ''தங்கி இதை காலால் உதை'' என்றார்.

பலமுறை உதைத்த பின்னர், அலமாரி கதவு உள்பக்கம் திறக்க, மாடிப்படிகள் போல ஒரு வழி தெரிந்தது.

''கவனமா கேட்டுக்கொள். நீ இந்த படியில் இறங்கி நடந்தால் கொஞ்ச தூரம் ஒரு குறுகலான சந்துவரும். அதில் துணிவா நடந்துபோ. சிறிது தூரத்தில் ஒரு பெரிய கிணற்றின் அருகே, புதர் மண்டிக் கிடக்கும். அதன் பக்கத்தில் சந்து முடியும். மெல்ல புதர்களை நீக்கி, நீ வெளியே வந்து கண்ணுக்குத் தெரியும் ஒற்றையடி பாதையில் ஒரு பத்து நிமிடம் போனால், பாதை ரெண்டு பக்கமாகப் பிரியும். நேரான பாதை நம் வீட்டு தோட்டத்தின் பின்பக்கம் முடியும். அதன் வழியே போகாதே. வீட்டில் மார்த்தாண்டத்தின் கையாள் யாராவது இருப்பான். இடது புறமாக பிரியும் கிளைப்பாதை வழியே சிறிது தூரம் ஓடினால், அது வேதநாதன் வீட்டு புறக்கடைக் கதவருகே முடியும். கதவை பலமாக தட்டு. உதவிக்கு அவர்கள் வருவார்கள். இந்தா விளக்கு, நிக்காதே ஓடு.''

'தாத்தா, நீங்களும் வாங்க. போயிடலாம்'' துயரத்தில் திணறினாள், நிலா.

''ஒரு சமயம் அவர்கள் சீக்கிரம் திரும்பினால், அவர்களுடன் பேச்சுக் கொடுத்து நான் நேரத்தைப் போக்க இருக்கணும். சீக்கிரம் கிளம்பு. அவர்கள் என்னை அடித்து கொன்று விட்டாலும் அக்கறை இல்லை. உனக்கும், உன் தாய்க்கும் செய்த கொடுமைக்கு அது தக்க தண்டனை.''

''தாத்தா!'' கண்ணீரும் விம்மலுமாக அவரை அவள் அணைத்துக்கொண்டு அழுதாள்.

உலகில் தனக்கு இருந்த அந்த ஒரே உறவைத் துண்டித்துக் கொண்டு பிரிய மனமில்லாது தவித்தாள்.

பாவிகள் அவரைக் கொன்றுவிட்டால்...மனம் தாங் கொணாத் துயரில் அழுந்தியது.

''போம்மா, நேரம் ஆச்சு. உம்...'' அதட்டிய கிழவர், விளக்குடன் அவளை படிகளில் இறக்கி, அலமாரி கதவை அழுத்தி சாத்தினார்.

## 24

தாத்தா ரத்தினசாமி அய்யா கூறியதுபோல அந்த சிறிய டார்ச் பளிச்சென்று ஒளிவிட்டு வழிகாட்டியது.

புழுதி மண்டி இடிந்து கிடந்த படிகளில் கால்களை வைக்கப் பயமாக இருந்தது, அவளுக்கு.

ஆனால், அந்த அறைக்குள் அடைபட்டிருந்தால், பாவி மார்த்தாண்டம் அவளை தாத்தாவின் எதிரிலேயே துடிக்கத் துடிக்க மானபங்கம் செய்ய அஞ்சமாட்டான். தேளோ, பாம்போ ஏதாகிலும் அவளைத் தீண்டிவிட்டாலும் பரவாயில்லை. மானம் போய் வாழ்வதைவிட பாம்புக் கடியால் இறந்துவிடுவதே மேல். எப்படியாவது அவள் தப்பினால் வருங்காலம் உண்டு. இறந்தால் மானத்தோடு முடியலாம். துணிவைத் திரட்டிக் கொண்டு, பதை பதைத்த நெஞ்சோடு, கால்கள் தடுமாற, தாத்தா சொன்னபடி அந்தப் படிகளைக் கடந்து, குறுகலாக, ஒட்டடையும் தூசியும் அப்பிக்கிடந்த சந்திற்குள் புகுந்து, ஓட்டமும் நடையுமாக விளக்கின் உதவியால் அந்த கிணற்றை நெருங்கிவிட்டாள்.

புதர் மண்டிக்கிடந்த சந்தின் வாயிலை அடைந்ததும், முள் செடிகளையும் கொடிகளையும் கைகளால் அகற்றி முடிப்பதற்குள் அவளது சேலை கிழிந்து, கை கால்களில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டு, அவதிப்பட்டுப் போனாள்.

அப்பாடா! எங்கிருந்தோ இனிமையாக சில்லென்று காற்று வீசத் தொடங்கியது.

மெல்லத் தலையைப் புகுத்தி புதரில் இருந்து வெளிவரும் அளவு ஓர் இடம் ஏற்படுத்தி, சிரமப்பட்டு வெளியே குதித்தாள். அந்த ஒற்றையடிப் பாதையின் தொடக்கம் தெரிந்தது. சுற்றிலும் ஒரே இருட்டு. மனித அரவம் இல்லாத தொலைதூரத்து வயல்காட்டை ஒட்டிய பாதை அது. மறைக்காக தவளை எழுப்பிய ஓசையும், ஆந்தை ஒன்று எழுப்பிய கூக்குரலும் அவளுக்கு அச்சத்தை ஊட்டின. ஆனால், பயந்துகொண்டு நிற்பதில் பயன்?

அதிகமாக 'டார்ச் விளக்கைப் பயன்படுத்தினால், எங்கிருந்தாவது யாராவது வெளிச்சத்தைக் கண்டு சந்தேகித்து அருகில் வந்துவிட்டால், ஓர் ஆபத்தில் இருந்து இன்னொன்றில் மாட்டிக் கொள்ளக்கூடாது. துணிவைத் திரட்டிக் கொண்டு, பாதையை ஒருதடவை விளக்கொளியில் பார்த்து கணிப்பு செய்துகொண்டு, மூச்சைப் பிடித்தபடி ஓடினாள், ஓடினாள் ஓடிக்கொண்டே இருந்தாள்.

காயத்திரி இல்லத்தில் மாணவியாக வாழ்ந்த காலத்தில் ஓட்டப்பந்தயங்களில் அவளுக்கு முதல் இடம் கிடைப்பது வழக்கம். முதல் பரிசு வாங்க மூச்சைப் பிடித்துக்கொண்டு அப்போதெல்லாம் ஓடினாள். இப்போது—அந்த மூச்சு நிலைக்க மானம் காப்பாற்றப்பட ஓடினாள்.

முடிவில் தாத்தா சொன்ன அந்த நிலைப்பகுதி வந்து விட்டது. இடப்புறம் திரும்புமுன், மூச்சு வாங்க ஒருகணம் நின்றாள். எங்கேயோ பேச்சுக் குரல் கேட்டது. நேரம் என்ன என்று அவள் யோசிக்குமுன் கோழி ஒன்று கூவும் குரல் கேட்டது. விடியும் வேளை நெருங்கிவிட்டதா? ஐயோ

உடலில் தனக்கு இருந்த அந்த ஒரே உறவையும் துண்டித்துக் கொண்டு பிரிய மனமில்லாது தவித்தாள்.

பாவிகள் அவரைக் கொன்றுவிட்டால்...மனம் தாங் கொணாத் துயரில் துடித்தது.

''போம்மா, நேரம் ஆச்சு. உம்...'' அதட்டிய கிழவர், விளக்குடன் அவளை படிகளில் இறக்கி, அலமாரி கதவை அழுத்தி சாத்தினார்.

## 24

தாத்தா ரத்தினசாமி அய்யா கூறியதுபோல அந்த சிறிய டார்ச் பளிச்சென்று ஒளிவிட்டு வழிகாட்டியது.

புழுதி மண்டி இருந்து கிடந்த படிகளில் கால்களை வைக்கப் பயமாக இருந்தது, அவளுக்கு.

ஆனால், அந்த அறைக்குள் அடைபட்டிருந்தால், பாவி மார்த்தாண்டம் அவளை தாத்தாவின் எதிரிலேயே துடிக்கத் துடிக்க மானபங்கம் செய்ய அஞ்சமாட்டான். தேளோ, பாம்போ எதாகிலும் அவளைத் தீண்டிவிட்டாலும் பரவா யில்லை. மானம் போய் வாழ்வதைவிட பாம்புக் கடியால் இறந்துவிடுவதே மேல். எப்படியாவது அவள் தப்பினால் வருங்காலம் உண்டு. இறந்தால் மானத்தோடு முடியலாம். துணிவைத் திரட்டிக் கொண்டு, பதை பதைத்த நெஞ்சோடு, கால்கள் தடுமாற, தாத்தா சொன்னபடி அந்தப் படிகளைக் கடந்து, குறுகலாக, ஒட்டடையும் தூசியும் அப்பிக்கிடந்த சந்திற்குள் புகுந்து, ஓட்டமும் நடையுமாக விளக்கின் உதவி யால் அந்த கிணற்றை நெருங்கிவிட்டாள்.

புதர் மண்டிக்கிடந்த சந்தின் வாயிலை அடைந்ததும், முள் செடிகளையும் கொடிகளையும் கைகளால் அகற்றி



முடிப்பதற்குள் அவளது சேலை கிழிந்து, கை கால்களில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டு, அவதிப்பட்டுப் போனாள்.

அப்பாடா! எங்கிருந்தோ இனிமையாக சில்லென்று காற்று வீசத் தொடங்கியது.

மெல்லத் தலையைப் புகுத்தி புதரில் இருந்து வெளிவரும் அளவு ஓர் இடம் ஏற்படுத்தி, சிரமப்பட்டு வெளியே குதித்தாள். அந்த ஒற்றையடிப் பாதையின் தொடக்கம் தெரிந்தது. சுற்றிலும் ஒரே இருட்டு. மனித அரவம் இல்லாத தொலைதூரத்து வயல்காட்டை ஒட்டிய பாதை அது. மறைக்காத தவளை எழுப்பிய ஓசையும், ஆந்தை ஒன்று எழுப்பிய கூக்குரலும் அவளுக்கு அச்சத்தை ஊட்டின. ஆனால், பயந்துகொண்டு நிற்பதில் பயன்?

அதிகமாக 'டார்ச்' விளக்கைப் பயன்படுத்தினாள். எங்கிருந்தாவது யாராவது வெளிச்சத்தைக் கண்டு சந்தேகித்து அருகில் வந்துவிட்டால், ஓர் ஆபத்தில் இருந்து இன் னொன்றில் மாட்டிக் கொள்ளக்கூடாது. துணிவைத் திரட்டிக் கொண்டு, பாதையை ஒருதடவை விளக்கொளியில் பார்த்து கணிப்பு செய்துகொண்டு, மூச்சைப் பிடித்தபடி ஓடினாள், ஓடினாள் ஓடிக்கொண்டே இருந்தாள்.

காயத்திரி இல்லத்தில் மாணவியாக வாழ்ந்த காலத்தில் ஓட்டப்பந்தயங்களில் அவளுக்கு முதல் இடம் கிடைப்பது வழக்கம். முதல் பரிசு வாங்க மூச்சைப் பிடித்துக்கொண்டு அப்போதெல்லாம் ஓடினாள். இப்போது—அந்த மூச்சு நிலைக்க மானம் காப்பாற்றப்பட ஓடினாள்.

முடிவில் தாத்தா சொன்ன அந்த கிளைப்பகுதி வந்து விட்டது. இடப்புறம் திரும்புமுன், மூச்சு வாங்க ஒருகணம் நின்றாள். எங்கேயோ பேச்சுக் குரல் கேட்டது. நேரம் என்ன என்று அவள் யோசிக்குமுன் கோழி ஒன்று கூவும் குரல் கேட்டது. விடியும் வேளை நெருங்கிவிட்டதா? ஐயோ

அவர்கள் திரும்பிவந்து தாத்தாவை...தானுமுடியாத பீதியுடன் அவள் அந்த நிலைப் பாதைக்குள் ஒரே மூச்சாக ஓடினாள்.

சில நிமிடத்தில் தாத்தா சொன்னபடி பாதை ஒரு கதவின் பின்னால் முடிந்துவிட்டதை உணர்ந்தாள். தன் பலம்கொண்ட மட்டும் கைகளை மடக்கிக் கொண்டு கதவை படபடவென்று தட்டினாள்.

பின்பக்க வராந்தாவின் விளக்கு பளிச்சிடுவது கதவின் ஓட்டை வழியே தெரிந்தது. வீட்டின் கனமான பின் கதவைத் திறக்கும் ஓசை கேட்டது. மனிதர் குரலும், காலடி ஓசையும் அருகில் கேட்க, அவள் மீண்டும் கதவை ஓங்கித் தட்டினாள்.

கதவு திடீரென்று திறந்துகொள்ள, விழுந்து விடுகிறவள் போல ஆடிவிட்டு நின்ற அவளை தாத்தா குருமூர்த்தி—வேலையாள்—மேகநாதன் மூவரும் அதிசயமாகப் பார்த்தனர்.

"திலகா, என்ன இது?" என்று மேகநாதன் கேட்கும்முன், அவள் விசும்பி அழுதவண்ணம் வேகமாக அவனை நெருங்கி அவன் தோள்மீது சரிந்துவிட்டாள்.

பூனைக்கு ஒன்பது உயிர்கள் என்பார்கள். அதைபோல ரத்தினசாமி ஐயாவுக்கும் வயதையும்—நோய்களையும் மீறி உயிர் பலம் இருந்தது. திலகா வந்துசேர்ந்த சில நிமிடத்தில் சங்கதியைக் கேட்டதும் அவர்கள் அனைவரும் பரபரப்பாக செயல்பட்டனர். மேகநாதன் காரில் வேலை ஆளுடன் காவல்துறை அலுவலகத்திற்கு விரைந்து, அவர்கள் உதவியுடன் திலகா கொடுத்த விவரத்தில் இருந்து அந்த இடத்தைப் புரிந்துகொண்டு, வேகமாக அந்தப் பாழடைந்த வீட்டை அணுகினான். போலீசார் கதவை உடைத்து, கிழவரை வெளியே தூக்கி வந்தபோது, அவர் உண்மையாகவே நினைவற்றுக் கிடந்தார்.

தமது சொத்துக்களை தனக்கு அளித்துவிட கட்டாயப் படுத்தி மார்த்தாண்டம் தயாரித்த உயிலைப் படித்த குருமூர்த்திக்குக் கோபம் தாங்க முடியவில்லை.



அந்த பாதகனை சட்டத்தின் பிடியில் சிக்க வைக்க வேண்டுமென்று ஆத்திரப்பட்டார்.

ஆனால், மார்த்தாண்டத்திற்கு வேறுவிதமாக தண்டனை உடனடியாக கிடைத்துவிட்டது.

புது மாப்பிள்ளை கோலத்தில், புரோகிதருடன், மண மாலை, தாலி முதலியவற்றுடன் வேகமாக வந்து கொண்டிருந்தபோது, வண்டியை ஓட்டிய அனுபவமுடைய தன்மகன் இரண்டு நாளாக ஏற்பட்ட அலைச்சலில் மிகவும் சோர்ந்து போயிருந்ததால், ஒரு கணம் அவனையும் அறியாது உறங்கி விட்டான். அடுத்தகணம் அவன் ஓட்டிய வண்டி எதிரே வந்த ஒரு லாரி மீது மோதி நொறுங்கிவிடவே, மார்த்தாண்டம் மாப்பிள்ளை கோலத்தில் தலத்திலேயே மாண்டு போனான். குற்றுயிராகப் போன மற்றவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டனர். பிழைத்தெழுந்தால், சட்டம் அவர்களை சட்டென்று பிடித்துக்கொள்ளக் காத்திருந்தது.

கிழவர் ரத்தினசாமியின் உடல்நிலை தேற சில நாட்கள் சென்றன. இந்த அனுபவத்திற்குப்பின் அவர் மிகவும் மாறி விட்டிருந்தார். அன்று அவரது வீட்டில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. ஊரில் உள்ள பலர், பஞ்சாயத்து உறுப்பினர், நாட்டாண்மைக்காரர், குருமூர்த்தி மேகநாதன், அவன் தந்தை, பூரணியம்மாள் எல்லோரும் வந்திருந்தனர். விருந்து விமரிசையாக முடிந்தது.

தாத்தா வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்த வைர நகைகள் சிலவற்றை அணிந்துகொண்டு, அன்றைய நிகழ்ச்சிக்காக தஞ்சாவூரில் இருந்து வாங்கிவந்த பட்டுச்சேலையை உடுத்திக் கொண்டு, தலை நிறையப் பூவும், முகம் நிறைய மகிழ்ச்சியுமாக சொர்ண அழகு சிந்தியபடி கூடத்தில் திலகா எல்லோர் முன்னிலையிலும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டாள்.

தாத்தா ரத்தினசாமி எழுந்து நின்று மரியாதையாக அவர்கள் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தார். பிறகு சொன்னார்:—

''நாட்டாண்மையும், பஞ்சாயத்து உறுப்பினரும், என் நண்பர் குருமூர்த்தியும், பூரணி அம்மா, வருங்கால சம்பந்தி எல்லோரும் கேட்டுக் கொள்ளுங்கள்.

இந்தப் பெண் திலகா—என் ஒரே மகள் அனுசூயாவின் குழந்தை. என் சொத்துக்களின் வாரிசு. என் மகளுக்கு செய்த தப்புக்கு — துரோகத்துக்கு ஈடாக என் சொத்தை எல்லாம் இந்தக் குழந்தைக்கு கொடுத்துட்டு, இவளை என் நண்பர் குருமூர்த்தியின் பேரனான டாக்டர் மேகநாதனுக்கு மனமுவந்து கட்டிக் கொடுக்க விரும்புறேன். நீங்கள் எல்லாம் என்ன சொல்றீங்கன்னு கேட்க ஆவலாக இருக்கேன்.'' தமது அகங்காரத்தை தூர எறிந்துவிட்டு மிகவும் தாழ்மையாகப் பேசினார்.

''என்ன சொல்றது! உங்கள் மனம் இப்படி மாறிப் போனதைப் பத்தி ஊரே குதூகலப்படும்போது எங்கள் எல்லோருக்கும் இனிப்பான சேதி இது.'' கூட்டத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு சிரித்தார் நாட்டாண்மை.

ஒரே குரலில் எல்லோரும் ஆமோதித்தனர்.

''அத்தோட இன்னொரு சங்கதி. இந்த கிராமத்திலே ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டி, அதில் ஏழை மக்களுக்கு தருமவைத்தியம் செய்ய என் வருங்கால மருமகனை நியமிக்கப் போகிறேன்.''

''பலே! பலே!'' என்று கைதட்டி ஆர்ப்பரித்தார், நாட்டாண்மை.

''ஆனால், ஒரு நிபந்தனை. நீங்கள் எல்லோரும் அதுக்கு சாட்சியா இருக்கப் போறீங்க'' சிரித்தார் ரத்தின சாமி.

''இந்த டாக்டர் மேகநாதன் என் பேத்தியைக் கட்டிக் கிட்டதும் தன் வீட்டுக்கு விளக்கேத்த அழைச்சுட்டு போய் விடுவான். கணவன் வீட்டிலேதான் ஒரு பெண் வாழணும்; ஒத்துக்கிறேன். ஆனால், ஒரு சிறு உதவி தேவை. இத்தனை நாள் பூதம் போல சொத்துக்களைக் கட்டிக்கொண்டு உறவுன்னு சொல்ல ஒருவரும் இல்லாது ஒத்தைக் கட்டையாக இருந்த என்னை என் பேத்தி தினசரி இரண்டு வாட்டியாவது வந்து பார்த்து பேசிட்டுப் போக மருமகப்பிள்ளை உத்தரவு தரணும். காலை, மாலை இரண்டு வேளை என் பேத்தி என்னோடு கொஞ்ச நேரம் பேசிட்டுப் போக நீ அனுப்புவியா, மேகா?'' குறும்புத் தனமாகக் கேட்டபடி அவனை உற்றுப் பார்த்தார்.

முகம் சிவந்துபோன திலகாவை, மேகநாதன் ஆசையுடன் நிமிர்ந்து பார்த்தான். ''பயப்படாதீங்க, தாத்தா. உங்கள் பேத்தி எப்பவும் உங்கள் பேத்தியாகவே இருப்பாள். உங்களைப் பார்த்து பேசிவிட்ட நேரம் போக மீதி நேரத்தில்தான் என் மனைவியாகவும் எங்கள் வீட்டு மருமகளாகவும் இருப்பாள்!'' வேடிக்கையாக பதிலளிக்க விடே அதிருப்படி எல்லோரும் கைகொட்டி சிரித்தனர், மகிழ்ச்சியுடன்.

''அப்படியானால் இந்தா இந்த மோதிரத்தை திருமண நிச்சயதார்த்தின் அடையாளமாக அவள் கையில் போடு. ஊரார் சாட்சிக்கு இருக்காங்க.'' கிழவர் சிரித்தபடி தமது சுண்டு விரலில் பளிச்சிட்ட வைர மோதிரத்தை கழற்றி அவனிடம் நீட்டினார்.

எல்லோர் முன்னிலையிலும் திலகாவின் மென் கரத்தைப் பிடித்து, அந்த பிஞ்சு விரலில் மோதிரத்தை அணிவித்து விட்டு, அவளை, மேகநாதன் அன்போடு பார்த்தான்.

மஞ்சள் அரிசியும், மலர் இதழ்களும் அவர்கள் மீது மழையாக வந்து விழ, கண்களில் காதல் கனிய இருவரும்

தங்கள் வளமான வருங்காலத்தை ஒருவர் முகத்தில் மற்றவர் தேட, உலகமே இன்பத்தில் ஒருகணம் உறைந்து விட்ட பிரமையில் நின்றனர்.

"திருமணம் வர்ற வாரம் கோவில் மண்டபத்தில்" என்று கிழவர் இரைந்து சொன்னதும், கைவொலியும் சிரிப்பும் விட்டை, கலகலக்கச் செய்தன.

ரிஷிமூலம்—நதிமூலம் தெரியக்கூடாது என்பார்கள். ஆனால் மனிதப்பிறவி—தன் மூலத்தை தெரிந்து கொள்ள முயலுவது நியாயந்தானே.

முற்றும்